ஓம் பரப்பிரம்மணே நம:

அமிர்தகுணபோதினி

அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கவல்லதான விகடமும், ஆநந்தகரமான அநுபவ விநோத ஞானகலா விலாஸங்களும் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர்:—திரிசிரபுரம் எஸ். ஜி. இராமாநுஜலுநாயுடு

"எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
 திண்ணிய ராகப் பெறின்." (திருக்குறள்.)

கமலம்-8.	சென்னை ஸ்ரீமுகஹு வைகாசிமீ 1உ	இதழ் 86.
Vol. 8.	1933--ம்ஹு மேமீ 14உ	No 86.



"அன்பே தகளியா—ஆர்வமே நெய்யாக—இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி ஞானச்சுடர் விளக்கேற்றினேன்" என்று விராட் ஸ்வரூபனை பகவானைப் பலவித ரூபமாக நம்முன்னோர் ஆராதித்து காம்யார்த்த மோக்ஷங்களை யடைந்து வந்தனர். முற்காலத்தில் அநேக ராஜாக்களும், ரிஷிகளும், பக்திமான்களும், ஸ்திரீகளும் பகவானை ஸ்தோத்திரம் செய்தே எந்தக் காரியத்தையும் செய்யத் துணிவார்கள். அவர்களிடம் நாஸ்திகவாதமில்லை. சிறு குழந்தைமுதல் பெரியோர்வரை பிராதஸ்நாநம் செய்து விதிப்படியுள்ள தர்மங்களை நடத்தி, ஒழிந்த வேளைகளில் ஸத்காலக்ஷேபமாய் நீதி கிரந்தங்களைப்படித்து வருவார்கள். அவர்களுடைய ஆநந்தத்துக்கு எதுவும் ஈடில்லை. பக்தாதிகளைக்கண்டால் பாதபூஜை செய்வர். ஆலயங்களைக் கட்டுவதும், விக்கிரகங்களைப் பிரதிஷ்டிப்பதும், எளியவரை ஆதரவுடன் அன்னமிட்டுக் காப்பாற்றுவதும், ஸன்மார்க்க நடையுமுள்ளவர்களா யிருந்தனர். எப்போதும் தெய்வத்தியானமே அவர்களின் மனதில் குடிகொண்டிருக்கும். வாயில் ஈசுவர ஜெபம் புஷ்பத்தைப்போல் வர்ஷிக்கும். பகவத் பக்திக்கு மிஞ்சினது ஒன்றுமில்லையென்று தெளிந்திருந்தனர். ஸகல ஸித்திகளும் ஈச்வர ஸ்தோத்திரத்தால் பெற்றிருந்தார்கள். ஸமீபத்தில் கும்பகோணத்தில் நிகழ்ந்த மகாமகத்திற்கு வந்திருந்த பத்துலக்ஷ ஜனங்களின் எண்ணிக்கையானது நம்மவர்களுக்குத் தெய்வபக்தி அதிகமென்பதை நன்கு நிரூபிக்கும்.

ஃ

"குணதோஷங்கள்" உலகிலுள்ள ஒவ்வொரு வஸ்துவிலும் குணமும் தோஷமும் கலந்திருக்கின்றன. ஆயினும், குணம் மிகுதியாயும், தோஷம்

குறைவாயுமிருக்கும் பொருளை அறிவுடையோர் விரும்புகின்றனர். மதியில்லாதோர் குணம் குறைவாயும், தோஷம் மிகுதியாயுமுள்ள வஸ்துக்களை யிச்சிக்கின்றனர். மனுஷ்யன், மிருகம், செடி முதலிய பொருள்களெல்லாவற்றிலும் நல்லவை கெட்டவை யென்ற வித்தியாஸமுண்டு. இவ்விதமே, மதவிஷயங்களிலும் பலவித தோஷமான கலப்புகள் ஆங்காங்கு காணும்படியிருக்கும். மரங்களில் சந்தனமரம் சிலாக்கியமானது. நல்ல வாசனையை வீசுகிறது. ஆனால், அந்த மரத்தில் விஷப்பாம்பாகிய நாகம் வந்தடைவதுண்டு. அதுபோல், உத்தமமான மதங்களுள்ளும், அன்னியர் குதர்க்கமாய்ப் பரிகஸித்துப் பேசக்கூடிய சில விஷயங்கள் கலந்திருந்தாலும், அவற்றின் ரகசியார்த்தங்களும் உண்மையான காரணங்களும் வேறுவிதமாயிருக்கும். அந்த ஸம்சயங்களைப் பெரியோர்களிடம் கேட்டு நிவர்த்தி செய்துகொள்ளுவதே விவேகம். தங்களின் சொந்த மதத்தில் விஸ்வாசிகளாயுள்ளோருக்குப் பிற மதஸ்தர்கள் எடுத்துக்காட்டும் குற்றங்கள் அற்பமாகவே தோன்றி, அவர்களின் தெய்வபக்தி மேன்மேலும் பெருகிக்கொண்டேவரும். பதிவிரதா ரத்நமான ரமணியிடம் அவள் கணவனைப்பற்றி எவ்வளவு தாழ்த்திக் கூறினும் அவளுடைய பதிவிசுவாசமும், பிரேமையும் போகாதன்றோ ?

ஃ

"விருப்பும் வெறுப்பும்" இவ்விரண்டையும் நீக்குவோனே உலகத்தில் மனஸ்சாந்தியை யடைவான். ஒரு பொருளினிடத்துப் பிரீதியாவது, அப்பிரீதியாவது கொள்ளாமற்போனால் அந்தப் பொருளைப்பற்றி நமக்கு அதிக கவலை யுண்டாவதில்லை. வெகுதூர பந்துவாகிய ஒருவரின் வீட்டில் மரணம் நேர்ந்ததென்று கேள்வியுற்றால், அதன்பொருட்டு சிறிது வருந்தி சாதாரணமாக இருந்துவிடுகிறோம். இதன் காரணம், மரணமடைந்தோருடன் நாம் எவ்விதப் பற்றுதலோ, விசுவாச மின்மையோ இரண்டும் கொள்ளாமல் அவர்களுடன் பழகாதபடி தூர இருந்துவிட்டதேயாம். நாம் எந்தப் பொருளைப்பற்றியும் கவலைப்படக்கூடா தென்பதே பெரியோர்களின் கருத்து. அதாவது, பகவத் ஸங்கல்பத்தின்படி எதுவும் நடக்கிறதென்று மனத்தை நிம்மதியாக வைத்துக்கொள்ளவேண்டு மென்பதாம். நாம் விருப்பு, வெறுப்பு கொள்ளாமலிருப்பதுடன், நமது கடமையையும் செய்தவாறிருக்க வேண்டும். இதனிடையே சிறிது சிறிதாக அபிமானத்தையும் கைவிட்டவாறு செல்லவேண்டும். இவ்விதம் செய்வதால் இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாமல் தன்னை சமாதான நிலையில் வைத்துக்கொள்ளலாம். எந்தப் பொருளினிடத்து நமக்கு வாஞ்சையும் சந்தோஷமும் உதிக்கின்றதோ, அந்தப் பொருளே பிறகு துக்கப்படுதற்கு ஆஸ்பதமுமாகின்றது. குழந்தையினிடம் அபிமானம்கொண்டு அதன் பேச்சிலும் நடையிலும் விளையாட்டிலும் மயங்கி ஆநந்திதர்களாகின்றோம். பின்னர் அக்குழந்தை பிணியுறுமாகில், அந்தோ! நமது மனம் படும் கவலைக்கு எல்லையில்லாது தவித்துப்போகிறோம். இதற்காகவே அபிமா

பணத்தைப் பேய்கள் காத்துக்கொண்டு அப்புதையலை எடுக்க வருகிறவர்களை மிரட்டுகின்றன. அதுபோல் நல்ல காரியங்களைச் செய்யும்போது, பேய்களாகிய சில மனிதர்கள் அதைச் செய்யவொட்டாமல் தடுக்க வருவர். எவ்வாறு மந்திரத்தால் பேயையோட்டிப் புதையலை எடுக்கிறோமோ, அவ்வாறே விவேகமென்னும் மந்திரத்தால் பேயர்களின் வார்த்தையை அலக்ஷியம் செய்து அவர்களை ஓட்டிவிடவேண்டும்.

னத்தை முற்றிலும் விடாவிடினும், சிறிது சிறிதாகவேனும் குறைத்துக் கொண்டு வரவேண்டுமென்று பெரியோர் கூறுகின்றனர். பிறந்த குழந்தையைக் காப்பாற்றவேண்டியது நமது கடமையே. இவ்விதம் கடமையைமட்டும் நாம் செய்துவிட்டு, அக்குழந்தையிடம் விருப்போ வெறுப்போ கொள்ளாமல் ஒதுங்கியவாறும் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும். தோணியானது ஜலத்தின்மீதிருந்தாலும், தோணிக்குள் ஜலம் இல்லை. அதுபோல் மனுஷ்யன் ஸம்ஸார சுகங்களுக்கிடையிற் கிடந்தாலும், அவனது மனத்தில் சம்சார விருப்பு வெறுப்புகள் இல்லாமல் பரிசுத்தமாயிருக்க வேண்டும். தோணிக்குள் ஜலம் சென்றால் தோணி முழுகிவிடுவதுபோல், சம்சார தர்மத்திலிருப்போன் அதனிடத்து நீங்காத அபிமானம் கொண்டு விடுவானாகில், அந்த ஸம்சார ஸாகரத்திலேயே மூழ்கிப் பகவத் பக்தியை மறந்துவிடுகிறான். ஆதலின், பட்டும்படாமலுமிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும்.

ஃ

“சகுணோபாசனை, நிர்க்குணோபாசனை” இவ்விரு உபாசனைகளும் பரப்பிரம்மத்தையறிந்து கடைத்தேறும் வழிகளாகும். சகுணோபாசனை யென்பது கடவுளை அநந்தகுண கல்யாணபுருஷனாய் ‘பரமேசுவரன்’ என்றும், ‘இராமன்’ என்றும், ‘கிருஷ்ணன்’ என்றும் இப்படிப் பலவிதமாக உபாஸித்து, அந்த உபாசனா ரூபங்களேயாகி, அதன்பின் அரூபியான ப்ரம்மத்தை யுபாஸிக்க யோக்கியவானாவதாம். நிர்க்குணோபாசனையாவது சர்வ சாக்ஷியாயும் வருணாசிரமமற்றதாயு மிருக்கிற (தன்) ஆத்மாவை பிரம்மஸ்வரூபமாகவே பார்த்தலாம். இப்படிப்பட்ட நிர்க்குண உபாசனை சாதாரணமானவர்களுக்கு அசாத்தியமானதால், அவர்களின்பொருட்டு பக்தி, விசுவாசம், பிரபஞ்சத்தில் விரக்தி, சத்தியம், நம்பிக்கை முதலியவைகளை யுண்டாக்கி, அதினால் சித்த சுத்தியைக் கிரமக்கிரமமாய் அடைவிக்க சகுணோபாசனையை சுருதிகள் விதித்திருக்கின்றன. சகுணோபாசனையில் தேர்ச்சியடைந்தவன் நிர்க்குணோபாசனைக்கு யோக்கியனாகிறான். இது எதைப்போலெனில், பூமியை உழுது பயிரிடுபவனுக்கும், நல்ல படிப்பாளியாய் உத்தியோகத்தில் முயல்பவனுக்கும் தன் முயற்சியினால் அடையவேண்டிய முக்கியமான உத்தேசம் பணமேயல்லவா? பயிரிடுபவன் முதலில் தான்யாதிகளை யடைந்து, பிறகு அந்தத் தான்யாதிமூலமாய்ப் பணத்தை யடைகிறான். இதற்குக் காலதாமதமும், அதிக சிரமமுமுண்டாகிறது. உத்தியோகம் செய்பவன் அந்தப் பணத்தை யதிசீக்கிரமா யடைகிறான். அவ்விதம் சீக்கிரம் அவன் பணத்தைப் பெறுவது கண்டு பயிரிடுபவனும் உத்தியோகத்தை இச்சித்தால் அதற்குத் தகுந்த படிப்பு முதலியவைகளை சம்பாதிக்க வெகுகாலப் பழக்கம் வேண்டும். உத்தியோகத்தில் முயற்சி செய்யும்பொருட்டு பயிர்த்தொழிலை விட்டுவிடுவானாகில், தான் செய்த பயிர்த்தொழிலும்போய் உத்தியோகமும் சித்திக்காமல் (இக்காலத்தில் இங்கிலீஷ் கற்று வேலையற்றுத் திரியுமவர்களைப்போல்) இரண்டும் கெட்டவனாவான். ஆகையால், ஒவ்வொருவனும் தன் புத்தி, சக்தி முதலியவைகளை நிதானித்துக்கொண்டு, தான் எந்த உபாசனையில் சுலபமாய் முயற்சி செய்ய முடியுமோ அதில் பிரவர்த்திக்கவேண்டும்.

ஃ

இவ்வுலகம் ஒருபொழுதும் நேர்ப்படுத்த முடியாத நாய்வாலை யொத்ததென்பதை சமூக சீர்திருத்தக்காரர்கள் முற்றினும் மறந்துவிடுகின்றனர்.

"குரு உபதேசம்" வேத சாஸ்திராதிகளைத் தானே தன் மனம்போன போக்கில் படித்து அர்த்தம் செய்துகொள்வது கூடாது. எதையும் குருமுகத்தால் அறியவேண்டும். இங்ஙனம் குரு உபதேசம் பெற்ற ஒருவன் தன் தேகத்தை அரணியாகவும், பிரணவத்தை (ஓம் என்ற அக்ஷரத்தை) மத்தாகவும் செய்துகொண்டு, கடைதலாகிய தியானப்பியாசத்தால்—காணப்படாமலிருக்கிற பிரம்மத்தை யறிவான். எவ்வாறெனில், எள்ளில் எண்ணெயும், தயிரில் வெண்ணெயும், பூமிக்குள் ஜலமும், அரணியில் அக்கினியும் காணப்படாமலிருந்தாலும் அவைகள் பிரயத்தின மூலமாக வெளிப்படுவதுபோல், சத்தியத்தினாலும் தபசினாலும் தேடுவோனுக்கு அவனுக்குள்ளேயே பிரம்மம் விளங்கும்.

ஃ

"பிதாவும் புத்திரனும்" பிரம்மஞானியான உத்தாலகர் தமது புத்திரனாகிய சுவேதகேதுவுக்கு பிரம்மஸ்வரூபத்தைப் பின்வருமாறு விளக்கினார். ஆலமரத்தின்பழம் ஒன்றைக் கொண்டுவரச்செய்து அதை உடைத்துப் பார்க்கும்படி கூறினார். குமாரன் அவ்விதமே செய்து வெகு சிறிய வித்துக்கள் காணப்படுவதாகச் சொல்ல, அதையும் உடைக்கும்படிசெய்து அதில் என்ன காண்கிறாய் என்றார். குமாரன் அதில் ஒன்றுமில்லை யென்றான். அதன்பின் பிதா கூறியதாவது:—குமாரா! அந்தச் சிறு வித்து உடைபட்டதில் எந்த அணுவை அதிலிருந்து உன்னால் காணக்கூடவில்லையோ, அந்த அணுவிலிருந்துதான் இவ்வளவு பெரிய ஆலமரம் உண்டாயிருக்கிறது. அதுபோலவே, அணுவான சத்தியத்திலிருந்து இப்பெரிதான ஜகத் உண்டாயிருக்கிறது. இந்த அணுதான் இவற்றிற்கெல்லாம் ஆத்மா என்றார். பிறகு சிறிது உப்பை ஜலத்தில் கரையும்படி செய்யுமாறு உத்திரவிட்டார். அதன்பின் முன்பு போட்ட உப்பை ஜலத்திலிருந்து எடுக்கும்படி கூற, குமாரன், உப்புகரைந்து போய்விட்டதென்றும், அதன் இருப்பிடம் விளங்கவில்லை யென்றும் இயம்பினான். பிதா குமாரனை நோக்கி, ஜலத்தின்மேலும், பிறகு ஜலத்தின் நடுவிலும், அதன்பின் ஜலத்தின் அடியிலும் சிறிது ஜலத்தை எடுத்துச் சுவைபார்க்கும்படி கூற, குமாரன் மேல்—நடு—அடி—மூன்றிடங்களிலும் சுவை பார்த்த ஜலம் உப்பாக இருக்கிறதென்றும், அந்த ஜலமுழுதும் உப்பு பரவியிருக்கிறதென்றும் புகன்றான். அதன்பின் பிதா கூறியதாவது:—சத்தியமும் அப்படியே குழந்தாய்! நீ சத்தியத்தைக் காணாவிடினும், அது இந்த தேகமெங்கும் வியாபித்திருக்கிறது. இவற்றிற்கெல்லாம் ஆத்மாவாகிய அணுவே சத்தியம். அதுதான் ஜகத்திற்கெல்லாம் ஆத்மா. நீ அதுவாகவே இருக்கிறாய் என்றார். பின்னும் கூறியதாவது:—குழந்தாய்! ஒருவனைக் கண்ணைக்கட்டி காந்தார தேசத்தினின்றும் வெளியில் கொண்டுபோய்விட்டால், அவன் கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்டேனென்று முறையிடுவான். பிறகு ஒருவர் அவனுடைய கண்கட்டை அவிழ்த்து, காந்தார தேசத்திற்கு இதுதான் வழி—இந்த வழியே போ என்று காட்டிக்கொடுக்கிறார். (இவ்விதம் காட்டிக்கொடுப்பவரே ஆசார்யராவார்.) அவர் காட்டிய வழியை நம்பி, புத்தியுள்ளவனாய் ஊருக்கு ஊர் கேட்டுக்கொண்டு செல்வானாகில் கடைசியாகக் காந்தார தேசத்தையே சேர்ந்துவிடுகிறான். இவ்விதமே தகுந்த ஆசாரியனை யடைந்தவன் கடவுளையறியும் பக்குவத்தைப்பெற்று தனது சலியா முயற்சியால் பகவானை யடைந்து பரம சாம்ராஜ்யத்தைப் பெறுகிறான் என்றார். ஆகவே, சிறந்த ஆசாரியரை யடைந்து அவர் மூலமாகப் பகவானது கடாக்ஷத்திற்குப் பாத்திரராகக் கடவோம்.

அமிர்தகுணபோதினி

ஸ்ரீமுகவருஷ வைகாசிமீ 1உ

உன் வாழ்க்கை உன் உறுதியிலே.

ஆரம்பத்தில் நீ கொண்ட உறுதி திடமுள்ளதாயிருக்கட்டும். என்றைக்கும் அந்த ஒரே உறுதியுடன் நில். உன் வாழ்நாள் இறுதிவரைக்கும் அவ்வுறுதியை நிறைவேற்றுவதற்கு உன் சக்திக்கு இயன்றவற்றையெல்லாம் செய். எப்பொழுதும் ஏகாந்தத்தில் சில மணி நேரங்களாவது தனித்திருந்து உன் உறுதியை எவ்வெவ் வழிகளிலெல்லாம் நிறைவேற்றிக் காரியசித்தி காணலாமென்பதைப்பற்றி யோசித்துவரப் பழகு. மேலான உயர்நிலைக்குச் செல்லவேண்டுமென்று உனக்குள் ஒரு உறுதியிருப்பது மெய்யே. அது சித்திப்பது உன் ஓயா முயற்சியிலிருக்கிறதேயன்றி, நீ இடையிற் சோர்ந்து சலித்துப்போவதிலிருக்கவில்லை. உலகுக்கும், உன் தேசத்திற்கும், உன் குடும்பத்திற்கும், உன்னைத் தோற்றுவித்தவர்களுக்கும், உன்னையே நம்பியவர்களுக்கும் நீ இயற்றிடவேண்டிய கடமைகள் எண்ணிலாதன. அக்கடமைகள் அனைத்தையும் சரிவரச்செய்து பூர்த்திபடுத்துதற்கு உன ஜீவியநாட்கள் போதுமானதா யிருக்கின்றனவா? இல்லையே! ஏதோ செய்தவரைக்குமே உன் பங்கு. எனவே, உன் பொறுப்பினையும், உன் கடமைகளாகிய தலைச்சுமையினையும் சாந்த சித்தத்துடனே நன்குணர்ந்துகொள்.

ஃ

நீ கொண்ட உறுதியான லக்ஷயத்தில் வெற்றி பெறுவதற்கு அமைதியைத் துணைகொள். அமைதியில் எப்பொழுதும் நிசப்தமே குடிகொண்டிருக்கும். அமைதி சாந்த வடிவினதாகும். அமைதி எஞ்ஞான்றும் நிதானப்படவைக்கும். அமைதி எந்தக் காரியத்தையும் நன்கு யோசித்துச் செய்யவைக்கும். அமைதி—இப்பொழுது செய்யுமொரு காரியத்துக்குப் பின்விளைவு எவ்வாறிருக்குமென்பதைச் சிந்திக்கவைக்கும். அமைதி—ஆத்திரத் துர்த்தேவதையைத் தூர

எந்த மருந்தையும் உண்பதற்குமுன் முதலில் ஒருநாள் பேதிக்குச் சாப்பிடுவது முக்கியமான விஷயம். மருந்தினால் பாதிகுணமும், அப்போது இருக்கும் பத்தியத்தினால் பாதிகுணமும் ஏற்படுகின்றது.

ஓட்டிவிடும். அமைதியில் அவசரம் என்பதேயில்லை. அமைதியில் படபடப்பும் கடுஞ்சினமும் அரிது. உன் ஜீவியத்தில் அமைதி நில வட்டும். உன் குடும்பத்திலும், உன் காரியங்களிலும் அமைதியைக் குடியேற்றிவை. எதையும் அமைதியுடன் செய்வதென்ற ஒரு உறுதி கொண்டிடு.

ஃ

முதல் உறுதி உன் கடமைகளின் பாரத்தை உணர்ந்து வணங்கிய சாந்தமானதன்மை. இரண்டாவது உறுதி அமைதியோடிருத்தலாம். அதனினும் பெரிய உறுதி திடசித்தம்; அதாவது, ஒரே உறுதிப்பிடி; ஒரே கொள்கையுடனிருத்தல். மரம் ஏறுபவன் எத்துணை உறுதிப்பிடியாய் அதைப் பற்றிக்கொண்டு உயரச் செல்லுவனோ, அத்துணை உறுதிப்பிடியில் நீ தொடங்கிய ஒரு தொழில் முறையை—ஒரு ஜீவனார்த்த பாதையை—கடைசிவரைக்கும் கொண்டு, அதிலேயே வெற்றியும் செல்வமும் புகழும் அடைய முயன்றிடுதலாம். அது சொற்ப வருமானமே தருவதாயிருப்பினும், அதனின்றும் மேன்மேலும் உயர்வதற்கு உன் சக்திகளை ஒருங்கு திரட்டியவாறு, உன் தொழிலையும் திறமைமிகும் வண்ணமாகப் பெருக்கிக்கொண்டு உன்னால் ஆனமட்டிலும் பிரயத்தனப்படு. இவ்வளவு சிரமப்பட்டு முயன்றும் அது உனக்குக் கைகூடாவிடில், அது போதிய லாபத்தைத் தராவிடில், தற்கால ஜீவனத்திற்கு வேறொரு தொழிலைத் தேடிக்கொண்டு, அப்புதிய தொழிலையும் சமர்த்துடன் செய்தபடியே, முன்பு விட்ட தொழிலைப்பற்றியும் ஸதா சிந்தித்தபடி, மீண்டும் அதையே கைப்பற்றிக்கொள்ளும் நினைவுடன் ஒரு விடாப்பிடியோடு நீ செல்லப்பார்க்கவேண்டும். இடையில் வலிய உன்னைத் தேடிவந்து பற்றிக்கொள்ளுகிற ஜீவனார்த்த பாதைகளையும் ஏற்று அவைகள் ஒவ்வொன்றிலும் பழக்க அனுபவம் பெற்றவாறு இரு. ஆனால், உன்னுடைய முக்கிய எண்ணம் முன்பு நீ தொட்டுக்கொண்ட தொழிலிலேயே ஊன்றி நிற்கவேண்டும். ஆரம்பத்தில் நீ கைப்பற்றியதைவிட மேன்மையான ஒரு நிலை உனக்கு வரக்காத்திருப்பதாயின், அப்பொழுதுமட்டும் முன்னதினின்றும் விலகி உயர்வுக்குச் செல்லலாம். எதிலும் நீ சோர்வின்றி நில். சலியாது உழைத்துச் செல். மற்றவர் உன்னை மெச்சுவதற்கேனும், உன் எஜமானர் கண்டு சிலாகிப்பதற்கேனும், நீ உழைக்க நினையாமல், உன் விர்த்திக்காகவே நீ ஓயாது தொழில் செய்வோனாதல் வேண்டும். உலகமுற்றும் நித்திரையில் மயங்கி யிருக்கும்பொழுதுகூட சலியாத சுறுசுறுப்புள்ள கடியாரம்

மனைவி தன் தாய் வீட்டில் பெரும் சண்டை யிட்டுக்கொண்டு கணவனிடம் அந்தக் கலக விவரங்களெல்லாம் கூறுகிறாள். அதைக் கேட்கும் கணவனோ இந்தச் சண்டையின் காரணமாகவேனும் அவர்கள் தன் வீட்டில் வந்து பலநாட்கள்குந்துவதில் ஆகும் செலவுகள் இனி யில்லாதிருக்குமல்லவா என்ற யோசிப்பில் திரும்புகிறான்.

ஓடியவண்ணமே இருக்கிறது. அது எவரேனும் தன்னைச் சிலாகிக்க வேண்டுமென்று ஓடவில்லை. தான் திறமைப்பாடமைந்த உயர்ந்த கடியாரமென்பதைக் காண்பித்துக்கொள்ளவே அது ஓயாது தொழில் புரிகின்றது. அதைப்போல் நீயும் உன் ஒரே உறுதிப்பிடியை நிறைவேற்றுதற்கு உழைத்துச் சென்றபடியிரு. எதிலும் ஒரே திடமான ஊன்றுதலுடனும் இரு. கடவுளறிய மனஸ்பூர்வமாய் நீ உழைப்பதாயின், அது உன் எஜமானரின் வேலையை நீ சரிவரச் செய்ததுபோலவேயாகும். அந்தச் சரியான வேலையிலும் மற்றவர் பிழை பேசுவதாயின், உன் தூயமனத்தைக் கடவுளுக்கு வெளியிட்டுவிட்டு அவ்வளவுடன் பொறுமையோடும் சாந்தப்பட்டுக்கொள்.

ஃ

ஒருநாட் பொழுதினை என்றைக்கும் வீணில் செலவிடுவதில்லையென்ற உறுதியுடனிரு. அந்த உறுதியினைக் காத்தற்பொருட்டு சோம்பலை நீ தூரத் துரத்திவிடு. சுறுசுறுப்புடன் நிற்கப் பழகு. தூக்கத்தின் நேரத்தைக் குறைத்துவிடு. பொழுது புலரும் வேளையில் அதற்கு முன்னரே நீ ஒரு வேலையைத்தொடங்கி வெகுநேரம் உழைத்துச் சோர்ந்தவனாயிரு. ஒவ்வொரு தினத்தின் காலையிலும், "நன்றாகப் பொழுதுவிடிந்துவிட்டதே, இன்னுமா தீபம்" என்று உன் விளக்கைப் பிறர் அணைக்கவரும்படி அவ்வளவுக்கு நீ தொழில் செய்தவாறு இரு. ஒருமணிநேரம் வியர்த்தமானபோதிலும் அதற்காகவும் நீ வருந்தியவனாதல் வேண்டும். பகலிலும், இரவின் நெடுநேரத்திலும், உதயகாலத்திலும் உன் கைக்கும் மனதுக்கும் வேலை கொடுத்துக்கொண்டிருப்பதென்ற உறுதியுடனே உன் ஜீவியத்தை நடத்திப் போ.

ஃ

"ஒவ்வொரு நாளும் உதயமானதும் எவ்விதமேனும் எழுமோரு கலகம்" என்றுள்ள நிலையிலும், உன் குடும்பத்தை உன்னால் இயன்ற மட்டில் சமாதானமுகமாகவே நடத்திச்செல்ல நினைக்கும் உறுதியை நீ பற்றுக. குடும்ப சமாதானத்திற்காகவும், குடும்ப க்ஷேமத்துக்காகவும், குடும்பத்தில் மகிழ்ச்சி, திருப்தி, பூரிப்பு நிறைந்திருப்பதற்காகவும், உனக்குப் பின்னரும் உன் குடும்பம் செழித்திருப்பதற்காகவும், அவ்வவற்றினைச் சீர்பெறச்செய்து முடிக்கும் உறுதியுடனும் நீ நட.

ஃ

ஒரு பத்திரிகாசிரியர் தமதுபத்திரிகைக்காக ஒரு அச்சுக்கூடத்தில் காகிதங்கள் வாங்கிவைக்க, அந்த அச்சுக்கூடத்தார் அக்காகிதங்களைக் கொண்டு தினசரிப் பத்திரிகையச்சிட்டுத் தடபுடலாய் வெளியிட்டு விட்டார்கள். பிறகு பத்திரிகாசிரியருக்குத் தெரிந்து கேட்கப்போக, அவர் தரவேண்டிய பாக்கிப் பணத்தில் காகிதத்தின் கிரயத்தைத் தள்ளினர். தினசரிப் பத்திரிகையும் பிறகு நின்றுவிட்டது. அளவுக்கு மேற்பட்டு ஓரிடத்தில் வைப்பது தப்பு.

முன் கோபத்தைத் தொலே. கள்ளக் காமவிகாரத்தை நீக்கு. பாபத்திற்குப் பயப்படு. மற்றவரைக் கெடுப்பதை யொழி. உன் ஜீவியம் மதுபானத்தால் கறைபடுத்தப்படாமலும், விபசார தோஷமின்றியும் செல்லவேண்டுமென்ற திடசித்தத்துடன் ஜாக்கிரதைப்படு. எவர் மனத்தையும் புண்ணுக்குவதில்லே யென்ற விரதத்துடன் இரு. எந்நாளும் நன்னடக்கை பிசகுவதில்லேயென்ற மேலான உறுதிகொள். பிறர் மறந்துவிட்டாலும் அவர் பொருளே எடுத்துக் கொடுத்துவிடு. கடைக்காரன் குறித்த தொகைக்கு அதிகமாகத் தந்துவிட்டபோதிலும், பிறரை மோசம் செய்வதில்லேயென்ற உறுதி நெஞ்சுடன் அதைத் திருப்பிக்கொடுத்துவிடு. உலகப் புகழ்ச்சியை எதிர்நோக்காது உன் கடமையை நீ சரிவரச்செய்து முடித்தலான உறுதியில் மட்டும் உன்னே ஊன்ற வைத்துக்கொள். கெட்ட பெயருக்கு அஞ்சு. நற்பெயரை நாடு. நீ என்றும் நல்லோன் ஆகுக.

ஃ

எந்தெந்த மதத்தினர் எவ்வெவ்வாறு கூறினும், நீ பிறந்த மதத்திலேயே பற்றுதலான உறுதியுடன் இரு. உன் மதத்தை மற்றவர் எத்துணே இகழினும் அதைக் கவனியாதே. இவ்விதம் இகழ்வோருடைய மதத்திலும் குறைபாடுகள் இல்லாமலில்லே. மதசச்சரவு உண்மையான தெய்வபக்தியைக் கெடுத்துவிடும். எம்மதத்திலும் ஒவ்வோர் உண்மை யிருக்கிறதெனக்கொண்டு, உன் சொந்த மதத்தையே நம்பியவனுகி அதில் திடமான உறுதியுடனும் இரு. மதம் மாறுதல் என்பதினும் கேடுகெட்ட நீசச்செய்கை உலகில் வேறில்லே. உள்ளத்தின் பரிசுத்தமும் பக்குவமுமே பிரதானமானது. அஃது இல்லாதோர் எம்மதம் புகுந்தும் பயனில்லே. ஒவ்வொரு மதத்திலும் கேடுகெட்டவர்களும், திருத்தமடையாதவர்களும் எப்போதுமே இருந்துகொண்டுதானிருக்கிறுர்கள்.

ஃ

கடன் படுவதில்லே யென்ற உறுதியும் கோள். ஆயினும், கடன் படாதிருக்கவும் முடிகிறதில்லேதான். "கடனுண்டு வாழாமை காண்டலினிதே" என்று கூறிய முன்னேர், "கடன் கொண்டும் செய்வன செய்தலினிதே" என்று அதற்கு எதிரிடையாகவும் நவின்றுள்ளார். சுலபத்தில் தீர்த்துவிடக்கூடிய நிலேயில் சொற்ப கடனேப்பெற்று, "என்று தீர்ப்பதோ?" என்ற கவலேயுடனிருந்து, அதனே நிவர்த்தித்துவிட்டு, அதன் பின்னர் கடன் இன்றியே வாழ்ந்திட உன்னுல் ஆனமட்டும் பார். செலவைச் சுருக்கு. நெய் விற்போன் அதன் விலேயைப்

நான் இத்தனே நாள் வெளியூருக்குப் போயிருந்தேன்—என்று சிலர் தங்களின் சங்கதியைப் பிறரிடம் வலியப்போய்ச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்ளுவர். இவர்களே ஊரிலே யில்லேயென்று யார் எங்கினுர்கள்? ஒவ்வொரு விதத்திலா பெருமை!

பிறகு மெதுவாகத் தரலாமென்றும், இப்போது கொடுக்க வேண்டிய தில்லையென்றும் சொல்லி நெய்யை ஊற்றிவிட்டுப் போய்விடுகிறான். நீயோ அந்த நெய்யைக் கடனுக்கு வாங்கியதாய் எண்ணாமல், இலவசத்தில் வந்ததுபோன்றுங் கருதித் தாராளமாக உன்னவர் களோடும் ஊற்றிக்கொண்டு புசித்துவிடுகிறாய். பிறகு சில நாட்கள் பொறுத்து நெய்க்காரன் வந்து பணம் கேட்கையில், அந்தப் பணத் தைத் தருவதற்கு உனக்கு வெகு கஷ்டமாகப்படுகிறது. ஆதலினால், பிறகு மெதுவாகப் பணம் கோடுக்கலாமென்று கடனுக்கு ஒன்றைப் பெறுவதிலும், அந்த வஸ்து இப்போது இல்லாமலே இன்றையபொ ழுதைக் கழித்திவிட முடியாதா என்று யோசித்துப் பார்த்து, கையிற் பணம் கிடைத்தபிறகே வாங்கிகொள்வோ மென்கிற முடிவுக்கு வந்துவிட்டால், அந்த வேளைக்குக்கடன்படாமல் தப்பித்தது ஒருலாப கரமான காரியமாயும், அது ஒரு சிக்கனமாகவும், அன்றையதினம் கடனில்லாதபடி புசித்ததாகவும் ஆகிவிடும். கடனில்லாக் கஞ்சி கால் வயிறு போதும். எவ்வகையிலும் உன் சேலவுகள் உன் வருமானத் திற்கு உட்பட்டிருக்கும்படியான உறுதியில் நில். உனக்கு வருமா னம் 20-ரூபாய் வந்து, அதில் 16-ரூபாய் செலவிட்டு, 4-ரூபாய் மிச்சப்படுத்துவது உத்தம வகுப்பைச் சேர்ந்தது. 20-ரூபாயையும் அப்படியே செலவிட்டுவிடுவது மத்திப வகுப்பைச் சேர்ந்தது. அந்த 20-ரூபாயையும் செலவிட்டுவிட்டு மேலுக்கு 10-ரூபாய் கடன் வாங் குவதென்பது வெறுக்கத்தக்க அதம வகுப்பைச் சேர்ந்ததாகும்.

ஃ

பழகிய நேசத்தையும், சொந்த சுற்றத்தையும் எத்துணைப் பிரி வினை, விரோதம் எழுந்த காலத்தும் தழுவியே செல்வதென்று உறுதிகொண்டிடுக. ஆனால், உன் மானத்தையும் குடும்பக்ஷேமத்தை யும் கெடுக்கப் பார்ப்பவர்களையும், நயவஞ்சகர்களையும் உன்னிலிருந் தும் நீக்கி விலகிக்கொள். வீட்டுப் பெண்களிடம் அதிகப்பேச்சு வைத் துக்கோள்வோனெவனையும் உன் வாசல்வழி வராதிருக்கச்செய்துவிடு. அன்புக்கு வணங்கு; அன்புக்கு உட்படு; அன்புக்கு ஊழியம் செய்; அன்பினரின் மலஜலாதிகளையும் எடுத்துக் கழுவிச் சுத்தம் செய்; அன்பினர் இருக்குமிடம் எவ்வளவு தூரமாயினும் அங்கு அடிக்கடி சென்று கண்டுவா. ஆனால், உன்னை எதிர்ப்பவரை ஒருபோதும் வணங்காத வீர உறுதியில் நின்று உன் தன்மதிப்பைக் காத்துக் கோள். ஒருகால் வணங்கத்தகாத மனிதரை வணங்க நேர்ந்தவிடத்

வந்தவர்கள் ஒருநாள் தங்குவதும், பலநாள் தங்குவதும், போய்த் திரும்பி வந்து தங்குகிறேமென்று சொல்லிச் சென்று அப்படியே வந்து தங்குவதும், அல்லது வராமலே கம்பிநீட்டுவெதும் அவரவர்களுடைய மனதிற்குள்ளிருக்கும் உண்மை யன்பு, போலியன்பு இவற்றைப் பொருத்ததா யிருக்கிறது. மனதில் பசை யற்றேரை எளிதில் காண முடிந்துவிடுகிறது.

தும், காலபேதத்தை மனதில் வைத்து அந்த சமயத்துக்குமட்டும் அவ்விதம் வணக்க நடிப்பு நடித்து, பின் அந்த மனிதனின் முன்பு அலக்ஷியமாய்த் தலை நிமிர்ந்து பெருமையுடன் நிற்கும்படியான வழி வகையையும் உன்னுள் ஆராய்ந்து, அதே விசாரமாயிருந்து முயன்று சீக்கிரத்தில் நீ தாழ்த்தி வணங்கிய தலையை உயர்த்திக் கொள். வெளிப்புறத்திலே உன் தலையை வணங்கித் தாழ்த்த நேர்ந் தாலும், அதே சமயத்தில் உன் உள்ளத்தில் வணங்காத வீரத்தையும், தாழ்மைப்படாத தன்மதிப்பையும் கொண்டிருக்குமாறு உறுதிபற்றுக. உன் சுயமதிப்பையும் கௌரவத்தையும் குறைக்கும்படியான குறைந்த கூலியில் நீ ஒன்றைச் செய்து கொடுப்பதைவிட, அதை இனமாகவே செய்துகொடுத்துவிட்டு உன் மதிப்பை உயர்த்திக்கொள். உன் மதிப் பைத் தாழ்த்துகிற குறைந்த கூலியைவிடப் பட்டினி கிடப்பது மேலென்ற உறுதியிலிரு. உன்னை இகழ்வாரை விலக்கு. அவர்களைச் சேர்ந்தே இருக்குமாறு வந்தகாலத்தும், முந்திய இகழ்ச்சியை மற வாமல், இகழ்ந்தவரே உன்னைப் புகழும்வாறான உயர் நிலைக்கும், மேன்மையான ஸ்தானதிற்கும் நீசெல்வதற்கான முயற்சியில் நாட்ட டங்கொள். உனக்குத் தீங்குசூழ்வோரை நீ புகழ்ந்தவனாகவே உன் நற் குணத்தால் நல்லோராக்கித் திருத்திவிடு. பதிலுக்குப் பதில் தீங்கு செய்யாதே. அது கேவலமான நீசச்செய்கை. கொடியரைச் சேரேல். தீயபழக்கத்தினரை உன்னிடம் வரச்செய்துகொள்ளாதே. எத்தனை யோ கல்வி பெற்றிருந்தும், எவ்வளவோ செல்வமிருந்தும், சயநலக் கருத்துடன் இழிந்த ஏமாற்றுதலான எண்ணங்களுடன் உன்னைச் சூழ்ந்து நிற்போர் சிலருண்டு. அன்னோரிடம் எந்த உத்தம உறுதியும் இராது. தாம் கொடுத்த வாக்கை அவர்கள் காப்பாற்றமாட்டார் கள். தாம் இரவல் பெற்றுச் சென்றதைத் திருப்பிக்கொணர்ந்தும் தரார். இத்தகையோரை அருவருத்துத் தூர ஒதுங்கிவிடு. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதுபோன்று ஒரு சிறு செய்கை யில் அவர்களின் குணத்தைக் கண்டுகொள். பிறகு அன்னோரின் கூட் டுறவு உனக்கு வேண்டாம். அவர்களே வலிய உன்னிடம் வந்தகாலத் தும், தீக் காய்வதுபோல் தூரநின்று பட்டும் படாதவாறு எட்டியே இருந்துவிடு. உண்மையற்றோரும், வாக்கு உறுதியற்றோரும், விசு வாசநன்றியற்றோரும், சுயநலஸ்தர்களும் மானிட உருவினராகி, நாம் அன்னோரைக்காணும்படியாவதும் நமது கண்கள்செய்த பாவம்தான்.

ஃ

நமக்கு மிகவும் வேண்டிய மனிதர்தான் ரூபாய் சரியாக ஓசை கேட்க வில்லையென்றுத் திருப்பிவிடுவார். எப்பொழுதும் இரண்டு ரூபாயுடன் இருந் தால்தான் ஒன்று செல்லாதென்றால், மற்றொரு ரூபாயை மாற்றிக் கொள்ள முடியும். செல்லாத ரூபாய் எங்காவது செலாமணியாகிவிடும். கோணல் பெண்ணெனினும் அதற்கும் விவாகமாகிவிடுகிறது. அது பெற்ற பிள்ளைகுட் டிகளுக்கும் குறைவில்லை.

தன்னுள்ளே ஒரு உறுதியில்லாதவன் உலகில் ஒருவனுமில்லை எளிய பிச்சைக்காரனும் தனக்கு அன்று எவ்விடத்திலேனும் தன் வயிற்றுப்பசிக்கு உணவு கிட்டுமென்ற உறுதியிலேயே இருக்கிறான். ஏதாவது ஒரு உறுதிபற்றிக்கொண்டுதான் ஒவ்வொருவனும் தன் நாட்கடலைக் கழித்து வருகின்றான். ஒரு மாளிகை அதன் அஸ்திவாரத்தின் பலத்தைப் பொறுத்து நிற்பதுபோல், ஒவ்வொருவனுடைய ஜீவியமும் அவன் கொண்டுள்ள உறுதியின் போக்குக்குத் தக்கதாகவே இருக்கின்றது. உறுதி தளர்ந்தவனுக்குத் தற்கொலையே முடிவு. இனி தனக்கு மீட்சியில்லையென்று அவன் நினைத்துவிடுகிற ஒரு குறுகலான தன்மை வெகு பயங்கரமான குழப்பநிலைக்கு அவனைக்கொண்டு சென்று மரணத்தைத்தானே வலிய ஏற்றுகொள்ளவும் செய்கின்றது. எந்த நாளும் தன் உள்ளத்து உறுதி அழியவொண்ணாது. எத்தனை அபாயம் எதிர்ப்பட்ட ஞான்றும் தன் உறுதியை விட்டுவிடக்கூடாது. ஆரண்யத்தில் திடீரென்று புலியின் முன்பாகத் தான் நிற்க நேர்ந்த காலத்தும், தன் உறுதி குன்றாமல் எவ்விதமும் அதனைத் துரத்திவிடுவதென்ற தீரத்துடன் அத்தருணம் தன் கையிலிருக்கும் சிறு முறத்தினாலே அப்புலியை எதிர்த்து ஓட்டிவிடமுயலும் குறப்பெண்ணின் தைரிய மனோதிடத்தை நாம் நினைத்துப் பார்த்து, நம் உறுதியில் ஆழ்ந்த நம்பிக்கைகொண்டு மாறாதிருக்கக்கடவோம். "முறத்தினாற் புலியைக் காக்கு முழைவரைக் குறப்பெண்போல" என்றார் பாரதியார். கடைசியாக, கடவுள் எல்லாக்கஷ்டங்களினின்றும் விடுவித்துக் காப்பார் என்ற மனோ உறுதிவேண்டும். படைத்தவன் காக்க இருக்கிறாரென்ற உறுதி நெஞ்சில் திடமாக இருக்குமாயின், வணங்காத தலையுடனே எங்கும் தன் மதிப்பைப்பெற்று வாழமுடியும். திடமான உறுதியுள்ளோர் எத்தனைத் துன்பங்கள் வந்தகாலத்தும் மனம்கலங்க மாட்டார்கள். கடவுள் காப்பாற்றுவாரென்ற அன்னோரின் உறுதி எல்லா நலமும் தரும். எனவே, நீ ஒரு திடமான உறுதிகொண்டு, அவ்வுறுதியுடனேமெய சத்தியமார்க்கத்தில் தெய்வபக்தியுடன் வாழக்கடவாய். உன் வாழ்க்கையின் வெற்றி உன் உறுதியிலேதான்.

"விளக்கொளி மழுங்கிப் போக வெயிலொளி தோன்று மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங் கனகமா ளிகையு முண்டாம்;
அளக்கருந் தீதுற்றாலும் அச்சமே யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பார் ; துயருண்டோ துணிவுள் ளோர்க்கே? (பாரதி.)

புஸ்தகம் பயிண்டு செய்கிறவனிடம் முந்தியே ரூபாய் கொடுத்துவிடுவதில், வாரத்தில் கொடுக்கிறவன், மாதம்போல் இழுத்தடித்துப் பிறகு வேலையை முடித்துக் கொடுக்கிறான். வேலைசெய்து பணம் வாங்கவேண்டுமென்கிற சுறுசுறுப்பு இருந்தால்தான் வேலையும் நன்றாக நடக்கும். முன்னதாகப் பணம் தருவதில் இந்த சுறுசுறுப்பு ஓடி விடுகிறது. ஏதோ கடனுக்குச் செய்து தொலைப்பதாக அரை மனதோடும் வேலையைச் செய்ய முயல்வான். ஆதலின் முந்தியே கூலி தருவதுகூடாது.

சுயநலக் குப்பன் கதை.

குப்பன் தான் போய்ச் சேர்ந்த நெல்லிக் கிராமத்தில் ஒரு துக்க சங்கதி கேள்விப்பட்டான். அடுத்த இளாக்காய் கிராமத்தில் தன் பந்துவான ஒருவரின் மனைவி இறந்துபோனதாக அறிந்தான். நெல்லிக் கிராமத்தில் இவன் இறங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரரான மாசிலாமணி தானும் இளாக்காய் கிராமத்துக்குப் போய்த் துக்கம் விசாரிக்க வேண்டுமென்று கூறினார். குப்பன் இந்த இரவே புறப்படலாமா என்றான். மாசிலாமணி நாளை காலையில் போவோம் என்றார். இரவில் மாசிலாமணி புறப்படமாட்டாரென்பது குப்பனுக்குத் தெரியும். பிறகு பொழுது புலர்ந்தது. மாசிலாமணி பிரயாணத்திற்குத் தயாராய் விட்டார். குப்பனோ தனக்கு வர சௌகரியமில்லையென்றும், தான் குத்தகை சம்பந்தமான காரியங்களை அன்று கவனிக்கவேண்டி யிருக்கிறதென்றும், "மனைவிசெத்தாலென்ன, இன்னொருத்தி வருகிறாள்; இது ஒரு துக்க சமாசாரம் ஆகாது" என்று சிரித்துக்கொண்டே கூறிவிட்டு வெளியே போய்விட்டான். மாசிலாமணிக்கு மிக்க மனவருத்த முண்டாயிற்று. இப்படியாகக் கல்நெஞ்சும், சுயகாரியத்தைப் பார்த்துக்கொண்டு போகிற அல்பபுத்தியும் உண்டா? இவ்வளவு தூரம் ஊர்விட்டு ஊர் வந்தவன் ஒரு மைலில் இருக்கிற அடுத்த கிராமத்துக்கு வந்துபோகக்கூடாதா என்று ஆத்திரத்துடன் பேசிவிட்டுத் தான்மட்டும் இளாக்காய் கிராமம் போய்த் துக்கம் விசாரித்துத் திரும்பினார். அவர் பிறகு தன்வீட்டில் குப்பனைக் கண்டாலும் எதுவும் பேசவில்லை. குப்பனும் மௌனமாகவே இருந்துவிட்டுத் தன் ஊர் சென்றான்.

ஃ

வருஷம் ஒன்று கழிந்தது. குப்பன் மிகவும் துக்கமாய் நெல்லிக் கிராமம் வந்திருந்தான். மாசிலாமணி என்ன முகம் வாடி யிருக்கிறதே யென்றார். தன் மனைவி காலஞ்சென்றுவிட்டதைப்பற்றிக்கூறிக் கண்ணீர் விட்டான். உடனே மாசிலாமணி, நீங்கள்தான் முன்னொருதரம் வந்தபோது அலக்ஷியமாய்க் கூறியிருக்கிறீர்களே! அதற்கா துக்கப்படுவது என்றார். குப்பன் நான் என்ன கூறினேன் என்று கேட்டான். "நீங்கள் சொன்னது ஞாபகமில்லையா? மனைவி செத்தாலென்ன, இன்னொருத்தி வருகிறாள்; இது ஒரு துக்க சமாசாரம் ஆகாது" என்றீர்களே! அவ்வளவு கல்நெஞ்சுள்ளவர் இப்போது என் வருந்தவேண்டுமோ?— துக்கம் விசாரிக்கக்கூடத் தாங்கள் வர மறுத்துவிட்டதை மறந்து போனீர்களா? இந்தப் பெண்கட்டைபோனால் இன்னொரு பெண்கட்டை வருகிறாள்; ஆனதால் நான் அதற்கு விசாரப்படவில்லை; சீக்கிரம் வேறு கல்யாணம் செய்துகொள்ளும்" என்றார். குப்பன் பதில் பேசவேயில்லை. "தங்களின் சொந்தத்தில் ஆபத்து வந்தால் இப்படித்தான் மௌனமாகிவிடுகிறீர்கள்; ஊராருக்கு ஆபத்து வந்தால்மட்டும் அலக்ஷியமாய் வேதாந்தம் பேசத் தொடங்கிக்கொள்கிறீர்கள்" என்று மறுபடியும் மாசிலாமணி கூறினார். அதற்கும் குப்பன் ஒன்றுமே சொல்லவில்லை. தலைவலியும் காய்ச்சலும் தனக்கு வந்தால் தெரியும்போலும்!

குழந்தைகள் பக்கம்

சிறுமிகளுக்கு ஒரு புத்திமதி.

செல்வச் சிறுமிகளே! உங்களுக்கு ஒரு சின்ன சங்கதி சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் வீட்டில் இப்பொழுது எப்படி நடக்கிறீர்களோ, இதே விதமாகத்தான் நீங்கள் இனி வாழப்போகிற வீட்டிலும் நடப்பீர்கள். இங்கே உண்டாகிற பழக்கம்தான் இனிமேலும் உங்களைத் தொடர்ந்துவரும். இனி நீங்கள் நடந்துகொள்ளுகிற மாதிரிகளெல்லாம், இப்போது உங்கள் தாய்வீட்டில் நடக்கிற தினுசுகளாலேயே தெரிந்துவிடும். நீங்கள் இனி நல்ல பெண்ணாவதும், கெட்ட பெண்ணாவதும் இங்கே நடக்கிறதற்குத் தக்கபடியே இருக்கும்.

2. இன்றைக்கு உங்கள் தாயை எதிர்த்துப் பேசினால், இந்தப் பழக்கமே நீங்கள் வாழப்போகிற வீட்டிலும் வரும். தாயார் உங்களைப் பெற்றவளானதால் நீங்கள் எதிர்த்துப் பேசியதைப் பொறுத்துக்கொள்வாள். ஒரு சமயம் அதற்காக உங்களைக் கண்டித்து அவ்வளவுடன் விட்டுவிடுவாள். நீங்கள் வாழப்போகும் இடத்தில் இப்படி எதிர்த்துப் பேசினாலோ, அதை அவர்கள் ஒருபோதும் சகிக்கமாட்டார்கள்; மறக்கவு மாட்டார்கள்; "இப்படி அவள் பேசினாளே" என்று சொல்லி மனதிலே பகையும் விரோதமும் கொள்வார்கள். உங்களையும் வைது திட்டி அடக்குவார்கள். உங்களுக்கும் வாய் அதிகமுள்ள பெண் என்ற கெட்ட பெயர் ஏற்படும். அதனால் பெண் பிறப்புக்கே உங்களால் வெகு கேவலம் வரும்.

3. உங்கள் தங்கை, தம்பி, அக்கா, அண்ணா இவர்களிடம் நீங்கள் ஒரு சிறு சங்கதிக்குச் சண்டையிட்டுத் திட்டத்தொடங்கினால், நாளைக்கும் இந்த வழக்கமே நீங்கள் போகிற வீட்டிற்கும் வரும். அந்த வீட்டில் பல சிறுவர் சிறுமிகளும், பெரியவர்களும்

அதிக நாள் குந்திவழக்கம் செய்துகொள்ள நினைக்கும் உறவினர்களைப் பற்றி வீட்டுக்காரன் தன் மனைவியிடம் வாதிடுவதைவிட, அவ்வுறவினரிடமே ரகசியமாய் ஒரு சிறு துண்டு கடிதம் எழுதி அதில் தனக்கு சக்தியில்லையென்று தெரிவித்துக் கொடுத்துவிட்டால் எந்தக் கலகமுமின்றி அவர்கள் எழுந்து போய்விடுவராம்.

இருப்பார்கள். அவர்களிடம் இவ்விதம்சண்டையிட்டுக்கொண்டால், அவர்கள் அதைப் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் ஒரு சின்ன சங்கதியையும் பிரமாதமாக ஆக்கி, உங்களையும் தூஷித்துக் கண்டித்துக் கேவலப்படுத்துவார்கள். நீங்கள் அப்போது அழுது கண்ணீர்விடும்படியாக ஆகும். அந்த சமயம் உங்களைத் தேற்றக்கூட எவரும் அருகில் வரமாட்டார்கள்.

4. புசிப்பதற்கு நெடுநேரம் உட்காரக்கூடாது. சீக்கிரமாகப் புசித்து எழுந்திருக்கப் பழகவேண்டும். எனக்கு அந்தக் காய் வேண்டாம், இந்தக் கீரை பிடிக்காது என்று உங்கள் தாய்வீட்டில் நீங்கள் சொல்லலாம். உங்கள் அதிகாரம் தாய்வீட்டில் செல்லும். உங்களுக்குப் பிரியமானதையே சமைப்பார்கள். ஆனால், நீங்கள் வாழப்போகிற வீட்டிலும் இப்படியே உங்களுக்கு நடக்குமா? அது ஒருபோதும் இல்லை. உங்களுக்குப் பிடிக்காத காய்கறிகள் அங்குள்ளவர்களுக்குப் பிரியமாயிருக்கலாம். அதையே தினமும் அவர்கள் சமைக்கலாம். அவற்றைத்தான் நீங்கள் புசிக்கும்படியிருக்கும். அது வேண்டாமென்றால், உங்களைக் கோபித்துக் கண்டித்துத் தின்னும்படி கட்டாயப் படுத்துவார்கள். நீங்கள் அழுதுகொண்டே புசிக்கவேண்டிவரும். ஆனதால், தாய்வீட்டில் எந்தக் காய்களையும் உண்பதற்கு வழக்கப் படுத்திக்கொள்ளுங்கள். காலையில் பழயசோறும் சாப்பிட்டு அந்த வழக்கத்தையும் ஒருபக்கம் வைத்துக்கொள்ளுங்கள். இதனால் காபி, பலகாரம் கூடாதென்று சொல்லவில்லை. அதுவும் புசியுங்கள். அத்துடன் அடிக்கடி பழயசோறு புசிக்கவும் பழகியிருங்கள். ஏனென்றால், நாளைக்கு உங்களின் தலைவிதி எப்படியிருக்கிறதோ! பழயசோறும் புசிக்கும்படியாகத் தாழ்ந்துபோன பெரிய ஐசுவரிய குடும்பங்கள் எத்தனையோ உண்டு. வாழ்வு ஒரு நிச்சயமல்லவே.

5. உங்கள் வீட்டில் காலை ஏழுமணி வரையில் நீங்கள் தூங்கினாலும் கேட்பாரில்லை. உங்கள் தாய்க்கு அது ஒரு குற்றமாகப்படாது. ஆனால், நீங்கள் போகிற வீட்டில் இப்படித் தூங்கினால், அதற்கு அவர்கள் ஒப்பமாட்டார்கள். அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைச் செய்யாமல் இப்படி மூதேவிபோலத் தூங்கினால் குடித்தனம் எப்படி முன்னுக்குவரும்; அதிகம் தூங்குகிறவளின் வாழ்வு தூங்கித்

ஒரு வீட்டில் ஒரு குருவிகூடு கட்டியிருந்து அதனால் அடிக்கடி குப்பை ஏற்படுவதாகி, அதற்காக அதைத் துரத்திக் கூட்டை எடுத்துவிட நினைக்கையில் அந்தக் குருவி தருகிற சாபத்தில், தானும் அந்த வீட்டைவிட்டு வெளியேறி விடும்படியாகுமோவென்று அஞ்சி அந்தக் குருவிக்கும் பயந்து நடக்கும்படியாகிறது. எப்போதும் பேதைகளுடையவும், கபடமற்றோருடையவும் வயிறெரிந்து சொல்லும் வார்த்தை பலித்து விடுகிறதென்பது அனுபவத்தில் கண்ட விஷயம்.

தான்போகும் என்று கோபிப்பார்கள். அதிகாலையிலேயே எழுந்திருக்கும்படி கட்டாயப்படுத்துவார்கள். அப்படி எழுந்திருக்காவிட்டால் அது ஒரு பெரிய குற்றமாய்விடும். அதைப்பற்றிக் காலையிலேயே ஒரு பெரிய கலகம் தொடங்கிவிடும்.

6. உங்களுக்கு சமையல் வேலைகள் நன்றாகத் தெரியாவிட்டால், "எவளடி உனக்குக் குடித்தனம் செய்யக் கற்பித்தவள்" என்று உங்களையும் உங்கள் தாயையும் சேர்த்துத் திட்டுவார்கள். உங்களை விவாகம்செய்து அழைத்துப்போகிறவர்கள் அன்னியர்களே. பந்துவாயிருந்தாலுங்கூட அவர்கள் அன்னியர்கள் போலவே கண்டிப்பாக நடப்பார்கள். உங்களுடைய ஒரு சிறு குற்றமும் பொறுக்கமாட்டார்கள். அன்னிய வீட்டில் நீங்கள் நல்ல பெயர் வாங்கும்படி, உங்கள் தாய்வீட்டில் இப்போதே எல்லாம் கற்றுக்கொள்ளுங்கள். எதிர்த்துப்பேசுதல், சண்டையிடுதல் முதலிய கெட்ட குணங்களையெல்லாம் விட்டுவிட்டு, இப்போதே நல்ல பெண்ணாக அடக்கமாய், புத்திசாலித்தனமாய் நடந்துகொள்ளுங்கள். அப்போதுதான் நீங்கள் போகிற அன்னிய வீடு உங்களின் சொந்த வீடுபோலாகி, உங்களுக்கும் நல்ல பெயர் உண்டாகும். பிறகு சந்தோஷமாயிருக்க இப்போதே நல்ல பெண்ணாக நடக்கக் கற்றுக்கொள்வீர்களாக.

போட்டகிராப் கேட்கும் நண்பர்கள்.

"உங்களுடைய பொட்டகிராப்புப் படம் எனக்கு ஒன்று வேண்டுமே" என்று வெகு உருக்கமும் பிரியமும் ஆவலுமாகக் கேட்டுப் பெற்றுவந்து, அதைத் தங்கள் வீட்டில் ஒரு மூலையிலே எறிகிறார்கள். தாங்கள் படம் கேட்டதனால் அவ்வளவு பிரியமுள்ளவர்களென்று தங்களை நினைத்துக்கொள்ளவேண்டுமென்பது இவர்களின் எண்ணம். படம் கொடுத்தவர் ஒருசமயம் இவர்கள் வீட்டிற்கு வந்து தன் படத்தைக் காணோமே என்று வினவுவாராயின், அப்போது இவர்கள் உங்கள்மீது அதிகப் பிரியமுள்ள என் நண்பர் அந்தப் படத்தைக் கொண்டுபோய்விட்டார்; அன்புக்காக அப்படித் தரவேண்டியிருந்தது—என்று வெகு பக்குவமாகப் பதில் சொல்லிச் சமாளித்துவிடுவார்கள். இத்தகையோரையே உண்மையான நண்பர்களென்று உலகம் எண்ணி மண்ணுகிறது.

ஜேம்ஸ் க்ரிஹ்டன்

ஓர் அற்புத மஹா புருஷர்.

1560—1582.

எவ்வளவோ மகத்தான பாக்கியங்களுடனும், நல்ல அதிர்ஷ்டங்களுடனும் கூடியிருந்த போதிலுங்கூட, எங்கிருந்தோ ஒரு துரதிர்ஷ்ட விஷப்பூச்சி உள்ளே புகுந்துகொண்டு விடுகின்றது. ஜேம்ஸ் க்ரிஹ்டன் கி. பி. 1560-ம் வருஷத்தில் ஸ்காட்லண்டில் பிரபல வமிஸத்தில் பிறந்தார். தாயார் இராஜ வமிஸத்தைச் சேர்ந்தவர். தந்தையோ அந்நாட்டின் பிரதானிகளில் ஒருவராயிருந்தவர். க்ரிஹ்டன் தமது 20-வது வயதிற்குள்ளாக ஸகல கலா வல்லுநராகிப் பத்து பாஷைகளிலும் அபாரமான தேர்ச்சி வாய்ந்து பண்டிதமணியாய் விளங்கினர். சிலம்பப் பயிற்சிலும் தனக்கு நிகரில்லையென்ற கியாதி பெற்றார். அழகிலோ மிக்க விசேஷித்தவர். சங்கீத சாஸ்திரத்திலும் வல்லவர். எல்லா பாக்கியங்களும் ஒருங்கே அடையப்பெற்றவர்.

ஃ

மிக்க இளமையிலேயே பாரீஸ் நகரத்திற்குச் சென்று தாம் பத்து பாஷைகளிலும் தர்க்கம் செய்ய வல்லவரென்று வெளியிட்டார். இவரது குழந்தைப் பருவத்தைநோக்கிப் பலர் ஏளனம் புரிந்தனர். ஆயினும், அங்குள்ள பண்டிதர்கள் 9—மணி நேரம் வாதம் நடத்தி அபஜெயமுற்றனர். ஒரு பை நிறையப் பவுன்களும், ஒரு வைரமும் பரிசு பெற்றார். பிறகு ரோம் நகரத்துக்குச் சென்று அங்குள்ள பண்டிதர்களுடன் வாதம் நடத்தி வெற்றிகொண்டார். பிறகு வெனிஸ் நகரம் சென்று அரசன் முதலானோரால் சன்மானிக்கப் பெற்றார். அவ்வித சன்மானங்களை யடையுமுன்பு இவர் செய்த சிலபாடல்களால் அங்கு கையிற் பணமில்லாமல் வருந்தினர்போலுங் காண்கிறது. பின் பாட்யுவா எனும் நகரம் சேர்ந்து அங்குள்ள கல்விச்சங்கத்துமுன் 6-மணி நேரம் வாதம் செய்து அனைவரையும் தோல்வியுறச் செய்தார். இங்ஙனமாக இத்தலி தேசமுற்றும் அவரது கீர்த்தி பரவியது.

ஃ

பிறகு மாண்ட்யுவா எனும் நகரத்தை யடைந்து அங்கு மிக்க பேர் போன மல்லன் ஒருவன் வந்திருப்பதைக் கேட்டார். அவன் அங்கு மூவரை எதிர்த்துக்கொன்று தேய்த்துவிட்டதாகவும் தெரிந்தது. அரசனுடைய அனுமதிபெற்று அந்த மல்லனுடன் போர்புரிந்து கீழே வீழ்த்தி

ஒரே விஷயத்தை ஏழையொருவன் கூறினல் அதற்கு மதிப்பில்லை. அதனையே கேட்டு ஒரு திவான்பகதூர் பட்டம் பெற்றவர் திருப்பிக்கூறினல் அதைப் பத்திராசிரியர்கள் வெகு கௌரவமாய்ப் பிரசுரிப்பர்; ஜனங்களும் அச்சொல்லை வியந்து பாராட்டுவர்.

ஞர். அந்தச் சண்டையில் அவன் ஆவி துறந்தான். அந்நகரத்தரசர் அவரைக் கொண்டாடித் தமது குமாரனுக்கு ஆசிரியராக நியமித்து விசேஷ சன்மானம் செய்தார். அவ்வரசரின் குமாரனே தான்றோன்றியாகத் திரிந்தவன். இப்போது இவரின் கீழ்அடங்கிப் பயிலுவானுயினன். ஜேய்ஸ் க்ரிஹ்டனின் கீர்த்தி முன்னிலும் அதிகரித்தது.

ஃ


இத்துணைப் புகழ் பெற்றாலும், தலைவிதியைத் தடுப்பவர் யார்? ஒரு நாள் ஜேம்ஸ் க்ரிஹ்டன் தெருவழியே செல்லுகையில் மாறுவேடம் பூண்ட ஆறு பேர்கள் அவரை எதிர்த்தனர். வெகு சாமர்த்தியத்துடனே ஜேம்ஸ் அவர்களை எதிர்க்கவே அவர்கள் மூலைக்கொருவராக ஓடினர். அவர்களின் தலைவன் நிராயுதபாணியாகித் தனக்கு உயிர்பிச்சை தருமாறு வேண்டினன். இவ்விதம் மன்னிப்புக் கேட்டவன் அவரிடம் பாடம் படித்து வந்த அவரது சிஷ்யனான இராஜகுமாரனு யிருக்கவே திகைத்து மிக்க வியாகூல மடைந்தார். உடனே இராஜகுமாரனை நோக்கித் தம்மை வஞ்சகமாக மாற்றுடையுடன் கொல்ல வேண்டியதில்லை யென்றும், பிரியமானல் நேரிலேயே கொல்லலாமென்றும் கூறித் தமது உடைவாளை அவனிடம் தர, அந்தச் சண்டாளன் சிறிதும் யோசியாமல் அந்த ஆயுதத்தால் மார்பிலே குத்திவிட, ஜேம்ஸ் க்ரீஹ்டனும் தமது இருபத்திரண்டாவது வயதில் உலகைத் துறந்தார். ஹா! என்ன பரிதாப மரணம் இது! தீவிர விர்த்திக்குத் தீவிரத்திலேயே முடிவு போலும்!

பிறர் பாராட்டிப் பேசுவது அதிக கஷ்டம்.

"எவ்வளவோ நான் இவ்வீட்டில் உழைத்தும் எவராவது ஒரு சொட்டுச் சொல்லைச் சொல்லாமற்போவதில்லை. அதைக் கேட்டுக்கேட்டு மனம் முறிந்துபோய், பிறகு மறுபடியும் வேலைசெய்யப் போகிறேன். நான் வைத்த குழம்பு நன்றாகவே இருக்கிறதென்று விருந்தினர் யாவரும் ஒருமித்துக்கூற, என் மாமியோ சாக்கடையில்தான் அந்தக் குழம்பைக் கொட்டவேண்டுமென்கிருள். அந்த வார்த்தையையும் கேட்டுக்கொண்டே அடுத்த சமையலையும் நான் தயார்செய்ய வேண்டியிருக்கிறது. நன்றாக உழைத்தும் அதைப் பாராட்டிப் பேசுவோர் அருமையாகவே இருக்கிறார்கள்" என்று ஒரு பெண் தன் கணவனிடம் முறையிட்டுக்கொள்ள, அதற்குக் கணவன் "உன்னைப்போலவே நானும் என் உத்தியோக சாலையில் மனஸ்பூர்வமாய் வருந்திச் சிரத்தையோடு வேலை செய்தும் குற்றம் பேசுகிறார்களே தவிர, அதைக் கொண்டாடுவோரைக் காணேம் என் செய்வது" என்றார்.

ப்ரோபெஸ்ஸர்
மாக்ஸ் மூலர்.

1823—1900.



ப்ரோபெஸ்ஸர் மாக்ஸ் மூலர் ஜெர்மனியில் 1823-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் பிறந்தார். 1843-ம் வருஷத்தில் வித்தியா பட்டம் பெற்று இங்கிலாந்துக்கு வந்தார். 18-பிராயத்தில் பள்ளியை விட்டு விட்டாராயினும், அதுமுதற்கொண்டு தமது சொந்த முயற்சியிலேயே ஜீவனம் செய்துகொண்டு படித்தபடியும் இருந்தார். அராபிக், பெர்ஷியன், ஸம்ஸ்கிருதம், சப்தவிர்த்தி சாஸ்திரம், தத்துவ சாஸ்திரம் இவைகளைப் பயின்று தேர்ந்தார். பால்யத்தில் இவர் மற்ற வித்வான்களுக்கு ஸம்ஸ்கிருத முதலான கீழ்த்தேச பாஷைகளின் கிரந்தங்களைப் பார்த்தெழுதியதனால், வரும் ஊதியத்தைக் கொண்டு ஜீவனம் செய்துவந்தார். இங்கிலாந்துக்கு வந்ததும் இருக்கு வேதத்தைத் திரட்டி அச்சிடவேண்டுமென்று முயன்றார். அப்பொழுது இந்தியாவை யாண்டுவந்த கம்பெனி டைரெக்டர்கள் அதற்காக அவருக்கு வேண்டிய சாதகம் செய்வதாக ஏற்றுக்கொள்ள, உடனே அவ்வேலையை ஆரம்பித்தார். இருபது வருஷங்கள் வரையில் இராப் பகலாக அவ்வேலையில் உழைத்துக் கடைசியில் ஆறு பெரிய புஸ்தகங்களில் இருக்குவேத முழுமையும் பிரசுரித்தார். இதற்காகக் கம்பெனி டைரெக்டர்கள் அவருக்குக் கொடுத்துவந்தசம்பளம் வெகு ஸ்வல்பம். இந்தியா ஆபீஸில் தாழ்ந்த குமாஸ்தாவுக்குக் கொடுக்கும் சம்பளமே கொடுத்தார்கள்.

ஃ

ஆயினும், அவர் அதைரியப்படவில்லை. லோகோபகாரமான காரியமே பெரிதென்று எண்ணி அந்த சொற்ப சம்பளத்தையும் பெற்றபடி, தாம் மேற்போட்டுக்கொண்ட வேலையில் விடாமுயற்சியாய் விருப்பத்தோடும் உழைத்து அக்காரியத்தை ஸர்வ சிலாக்யமாகப் பூர்த்திசெய்தார். அப்புஸ்தகம் வெளியாகும்வரை அவர் மிகக் கஷ்டப்பட்டாராயினும், வெளியானபின்பு அவருடைய தரித்திரமெல்லாம் நீங்கிவிட்டன. இந்தியா கவர்ன்மெண்டார் அவருடைய வேலையை நன்கு மதித்து அவருக்குத் தக்க வெகுமானம் செய்தார்கள். 1868-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிட்டியில் ஸம்ஸ்கிருத போதகர் ஒருவரை நூதனமாக நியமிக்க ஏற்பாடு செய்தார்கள். அவ்வேலை இவருக்கு அளிக்கப்படவே, அதுமுதல் இவர் கஷ்டமின்றி சுகஜீவனம் செய்து, கீழ்த்தேசத்தாரின் பூர்வ மதத்தையும் கிரந்தங்களையும் மேற்

அவசரத்திற்குக் கடன் கேட்டால் செல்லாதரூபாயைக் கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். பிறகு அந்த ரூபாயை மாற்றுவதற்கு எவ்வளவோ பாடும் கலக்கமும் பட்டுப் பிறர் காலில் விழவேண்டியிருக்கிறது. அந்த சமயம் வேறு பணமும் கைவசமில்லாததால் பெரிய திகைப்பே.

தேசத்தார்க்கு உணர்த்தும் மேலான வேலையில் இடைவிடாது உழைத்து வருவதானுர். ஃ

இவர் பிறந்தது ஜர்மனி ; இவர் வசித்தது இங்கிலாந்து தேசம் ; கனவிலும் நனவிலும் இவர் மனதைக் கவர்ந்து வந்தது வேதபூமியாகிய இந்துதேசம். நமது வேதசாஸ்திரங்களையும், வேதாந்த சித்தாந்தங்களையும் உலகறிய மேற்தேசத்தாருக்கு எடுத்துரைப்பதே தொழிலாக உழைத்து வந்தார். நமது வேதங்களை நன்கு அறியக்கூடியமட்டில் பயின்று, அவற்றை விளங்கவைக்க அநேக கிரந்தங்களும், பிரபந்தங்களும் எழுதிப் பிரசுரித்தார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வாக்குகளைக் கேட்டு, அவருடைய மகிமையை ஸ்வாமி விவேகாநந்தர் மூலமாயறிந்து அவருடைய போதனைகளையும், அவர் சரித்திரத்தையும்பற்றிப் புஸ்தகமொன்று வரைந்துப் பிரசுரித்தார். இந்தியாவுக்கு வர எவ்வளவோ ஆவலிருந்தும் வந்து இந்தியாவைக் கண்டுவிடில் திரும்பிப்போக மனது வராதென்று சொல்லியவாறிருந்து கடைசியில் வராமலே போனுர்.

ஃ

இவரை நேரில் கண்ட விவேகாநந்த ஸ்வாமிகள் இவர் பூர்வீக ரிஷி போல் இருந்தாரென்று எழுதினுர். வேதங்களை யெல்லாம் இவ்வளவு கற்றுணர்ந்த இவர், வேதாந்த உண்மையை எந்தமட்டும் அனுபவத்தில் அறிந்தார் என்ற கேள்வி பிறப்பது சகஜமே. வேதங்களை அவர் பூர்வ சரித்திராராய்ச்சி நோக்கங் கொண்டே கற்றுவந்ததால் அந்த வழியில்மட்டுமே அதன் மேன்மையை யுணர்ந்தவரென்று அவரது வாக்கினுலேயே தெரியவருகிறது. 75-வருஷகாலம் வேதாந்த ஆராய்ச்சி செய்து அநேகம் மேலான உண்மைகளை யெல்லாம் எடுத்து வெளியிட்டவர் ஆத்மஞானமின்றி யிருப்பது கூடாமை. அவருடைய புஸ்தகங்களிலும், கிரந்தங்களிலும் நமது சாஸ்திர உண்மைகளை நன்ருகக் கிரகித்து வெளியிட்டிருக்கிறதுமன்றி, என்று மழியாது ஏகமாய், சத்தியமாய், நித்தியமாயுள்ள பரம்பொருள் இன்னதென்பதை நன்ருக எடுத்துக்காட்டி வற்புறுத்தியுமிருக்கிறுர். இவர் 1900-ம் வருஷம் அக்டோபர் மாதம் 29-ம் தேதி கடவுள்பத மடைந்தார்.



ஹாஸ்ய சஞ்சீவினி



நிருபநேயர்:—நான் எழுதிய சங் கதி அதிக நீளமா?

பத்திராசிரியர்:—இந்தக் குப்பை க்கு இவ்வளவு இடமா?

ஃ

ஐயர்:—முன்போல் அடிக்கடி உங்கள் வீட்டிற்குவர முடியவில்லை. அதற்காக வருத்தப்படக்கூடாது.

செட்டியார்:—இனி என்றைக் கும் நீங்கள் வராமலே போய்விட்டா லுங்கூட அதற்காக நான் வருந்த மாட்டேன். யாருமே தங்களைப் பெரிய மனிதர்களாய் நினைத்துக் கொண்டுவிட்ட பிறகு முன்போல் வருவது கஷ்டம்தான்.

ஃ

சுப்பி:—நாளைக்கு வெள்ளிக்கிழ மையல்லவா? அதற்காக இந்த இர வுக்கே வீட்டைமெழுகி மாக்கோலம் போட்டுவிட்டேன். நாளை கோயிலுக் குப் போவோமா?

சேஷி:—வீட்டிலுள்ள கணவன் மீது அன்பும் திருப்தியுமில்லாமல் நீ வீட்டை மாக்கோலமிட்டுச் சிங்கா ரிப்பதில் என்ன பிரயோஜனம்? வீட் டுக் கடவுளாகிய கணவனைப் பகைத் துத் தூற்றிக்கொண்டு, கோயிலிலு ள்ள கடவுளை வணங்கச் செல்வது சுத்த பைத்தியக்காரத்தனம்.

ஃ

—"என் ஜோஷியரே! ஐயர் உமது கையில் அகப்பட்டு விட் டாரோ?"

—"கையில் மட்டுமா? என் பணப்பையிலுங்கூடத்தான். இது வரை அங்கு ஆயிரம் ரூபா சுரண்டி யாய்விட்டது. திருப்பதியிலே மூன் ருந்தாரமாக விவாகமும் ஆச்சுது."

—"எல்லாம் உமது ஏற்பாடு தானே?"

—"பணம் பிடுங்கும்வழி அது தான்!"

ஃ

அவர்:—வீடு ரொம்ப அழகாகக் கட்டியிருக்கிறது பார்.

இவர்:—ஆமாம், அது முருகப்ப நாவிதன் வீடு.

அவர்:—எவ்வளவு பெரிய வீடா யிருப்பினும் இழிவான பெயர் போக வில்லையே?

இவர்:—தொழிலை இழிவாக நினை க்கிற வரையில் கேவலப்பெயர் போகாதுதான். ஊர்வாயை மூடவும் முடியாதுதான்.

ஃ

—"நான் மணியாடரில் அனு ப்பிய பணத்தை வரவு வைக்காமல் உங்கள் குமாஸ்தா மோசம் செய்து விட்டார்."

—"உங்கள் மணியாடர் கூபன் தவறிவிட்டதால் தனிக் கணக்காக எழுதியிருக்கிறது. மோசம் ஏது மில்லை."

நிலம், வீடு, நகைகள், ரொக்கமான பணம் இவைகளே ஒருவனுக்குப் பலமாகும். கடையிலிருக்கிற சரக்குகளோ விற்றால்தான் ஆயிரம் ரூபாய். விற்காவிடிலோ அவற்றின் மதிப்பு 200-ரூபாய்க்குக்கூட வந்துவிடலாம்.

—"அவ்வளவு அஜாக்கிரதையாயிருந்த குமாஸ்தாவை ஏன் தள்ளிவிடக்கூடாது?"

—"இந்த ஜென்மத்தில் தள்ளிவிட சக்தியில்லை. அந்த குமாஸ்தாதான் என் குழந்தைகளுக்குத் தாய்.

ஃ

குமாரன்:—அப்பா! மழை வந்துவிட்டதே!

தந்தை:—நாம் நடுவழியில் நடந்துகொண்டிருக்கவில்லையே?-நம் வீட்டார் யாரும் வெளியிற் போகவில்லையே?—பின் மழைவந்தால்தானென்ன?—இடிவிழுந்தால்தானென்ன?

ஃ

—"சிரிக்கிறாய் மானே! உதைப்பேன் நானே."

—"ஏனோ உதைப்பது என் பிராணநாதா?"

—"நீ சிரிப்பதில் என் பணப்பை அழுகிறது கண்ணே.

—"குழம்புச்சட்டியின் மசி உங்கள் முகத்தில் எப்படி வந்தது நாதா? எனக்குத் தெரியாமற் சட்டியைத் திறந்து ருசி கண்டீரோ? நான் நகைப்பதும் அதற்கே. பணத்திற்கல்ல.

ஃ

மோத்து:—பத்துமணி வண்டி எப்போது போகிறது?

முத்து:—ஒன்பதுமணி யடித்த பிறகு அறுபது நிமிஷத்திற்குப் புறப்படுகிறது.

ஃ

தாயார்:—வயதாய் விட்டதே! எத்தனை நாளைக்குப் பெண்டாட்டியில்லாமல் கஷ்டப்படுவாய்?

குமாரன்:—யார் பெண்டாட்டியைக் கட்டிக்கொள்ளச் சொல்லுகிறாய்?

ஃ

—"அடடா! இன்று டிராம் வண்டியிலே நல்ல அடி."

—"யாருக்கு?"

—"விழுந்தவனுக்கு!"

ஃ

காணவந்தவர்:—நீங்கள் எழுதிக்கொண்டிருக்கையில் வந்து பலபல பேசியதற்கு மன்னிக்கவேணும்.

ஆசிரியர்:—மன்னிப்பு வேண்டியதில்லை. தாங்கள் பேசியதில், என் கவனிப்பைச் செலுத்தாமலே எழுதியபடி யிருந்தேன்.

ஃ

சாவதும் பிழைக்கிறதுமாயிருந்த பரமலோபி யொருவர்:—"தீவட்டிபோல் அவ்வளவு பெரியதீபம் எண்ணெய்க்குக் கேடாக என்னத்திற்கு? கொஞ்சம் சிறிதாக்குங்கள்" என்றாராம்!

ஃ

ஒரு நூலாசிரியர் தம் வீட்டுக் குப்பையிற் கிடந்த எழுத்துப் பிரதியொன்றை எடுத்துப் பார்த்து வியந்து, வெகு சந்தோஷத்துடன் நான்கு பக்கங்களில் அதை எழுதி முடித்தார். பிறகு ஏதோ ஞாபகம் வந்து தாம் இயற்றிய பழயநூலொன்றைப் பார்க்கையில், அதில் இவை

சேர்மன் இறந்து விட்டதைப் பற்றித் தெரிவிக்க ஒருவன் வர, அவனிடம் தான் அவருக்குப் பதிலாகச் சேர்மனாகவரவேண்டியவ ரென்று ஒரு கனவான் தெரிவித்தாராம்.

யாவும் இருப்பதை நோக்கித் திகைத்து, அடடா! வீணுகக் கை நோக எழுதினுேமே என்ருராம்.

ஃ

நண்பர்:—பலர் அருகில் உட்கார்ந்திருக்கையில் நீங்கள் எழுதியவற்றையெல்லாம் மேஜையில் வைத்து விட்டுப் போய்விட்டீர்களே?

பத்திராசிரியர்:—அதனுல் கெடுதேயில்லை. பிறர் எழுதியவற்றை மெதுவாகத் திருப்பிப் பார்க்கிற புத்தி சூக்ஷ்மம் தங்களுக்கு இருப்பதுபோல் அவர்களுக்கு இல்லாததால் நான் கவலைப்படாமலே எழுந்து சென்றேன்.

ஃ

—"நான் சர்வகலாசாலைப் பட்டதாரி, முதல்வகுப்பில் தேறியவன்"

—"படிப்பு சரிதான். உங்களின் சாமர்த்தியத்துக்கு ஒரு உதாரணம் சொல்லுங்கள்."

—"நான் இரவல்பெற்ற புஸ்தகங்களை யெல்லாம் எவ்வளவோ சமர்த்தாக என் சொந்த புஸ்தகங்களாக்கிக் கொண்டுவிட்டேன். எவருக்கும் திருப்பிக்கொடுத்தது கிடையாது. இதனுலேயே என் சாமர்த்தியம் தெரியலாம்.

ஃ

சாஸ்திரிகளின் மனைவி:—நேற்று முதல் குழந்தைக்கு ஜ்வரமென்று எவ்வளவோ அலறுகிறேன். வீட்டிற்கு ஒரு வைத்தியனைத் தருவித்துப் பார்க்கக்காணுேம். கைச்செலவில்லாமல் ஆஸ்பத்திரி மருந்து வாங்கிவந்தாச்சுதாம்!

சாஸ்திரிகள்:—குழந்தையை டாக்டரிடம் காண்பித்துத் தக்க மருந்து வாங்கிவந்திருக்கையில் ஏண்டி இப்படிக் குறை சொல்லுகிருய்? எவ்வளவோ பிரியமாய்க் குடும்பத்துக்கு உழைத்தாலும் அதில் எப்போதும் கோணலும் சொட்டுமே பேசுகிருயே! கிஞ்சித்தும் விசுவாச புத்தியைக் காணுேமே?

ஃ

மலடி:—உங்கள் வீட்டில் கைகழுவக்கூட யோக்கியதையில்லை. எந்தப் பாத்திரத்தைத்தொட்டாலும் பாழுங் குழந்தைகளின் எச்சிலாயிருக்கு.

புத்திரவதி:—அந்த எச்சில்தான் எனக்குப் பெரிய பாக்கியம். உங்கள் வீட்டைப்போன்ற எச்சில்படாத பரிசுத்தம் எந்த ஜென்மத்திலும் எனக்கு வேண்டாம்.

ஃ

சுந்தரம்:—நீ கந்தசாமியோடு பாதிப் பேச்சு பேசி அவ்வளவில் நிறுத்திவிட்டாயே என்?

விஜயம்:—நான் ஏமாறுகிற புள்ளியல்லவென்றும், என்னிடம் எதுவும் பறித்துக்கொள்ள முடியாதென்றும் அவன் தெரிந்துகொண்டதால் என் வார்த்தைகளைக் கேட்க வெறுப்பாயிருந்தான். நானும் மோசக்காரனை அவனை மதியாமல் பாதிப்பேச்சில் நிறுத்தி எழுந்துவிட்டேன்.

ஃ

விநு:—ஒருவனுடைய நற்காலத்தையும், அழிவு காலத்தையும் எப்போது அறியலாம்?

வீடுகட்டுவதில் சுவற்றின்மேல் பூசிய காரை மறுவருஷத்தில் பொலபொல வென்றுஉதிர்ந்துபோய் உள்ளிருக்கும் செங்கல்லுகள் வெளிக்குத் தெரியத் தொடங்கிக்கொள்கின்றன. பணம் செலவிட்டவன் எங்குகிருன்-காரையைவிட சிமிண்ட் விலை அதிகமாயினும் நீடித்து நிற்பதாகிறது.

விடை;—அவன் ஒரு வருஷத்திற்குமுன்பு செய்திருக்கிற வேலைகளிலுள்ள நன்மை தீமைகளைக் கொண்டு.

ஃ

நாவிதன்:—என் வேலையை உங்கட்குக் கற்றுக்கொடுக்கிறேன். உங்கள் வேலையை எனக்குக் கற்றுக்கொடுக்கிறீர்களா? என் வேலையில் தினம் இரண்டு ரூபா கிடைக்கும். உங்கள் வேலையில் எவ்வளவு வரும்?

பத்திராசிரியர்:—என் வேலையை விட உன் வேலை மிக நல்லதே. ஒரே தினுசாக எல்லோருக்கும் க்ஷவரம் செய்து எங்கும் நல்ல பெயரைப் பெறலாம். வரும்படியும் உண்டு. என் தொழிலில் எத்தனை தினுசாக வேலை செய்தாலும் நற்பெயர் பெறவும் முடியாது. விரைவில் கற்றுக் கொள்ளவும் இயலாது. லாபமோ, நஷ்டமோ, வீடோ, காடோ, சிறையோ, ஏதோ !

ஃ

குமாஸ்தா :—தங்களின் இன்மொழி நிருபங்கண்டு அளப்பரும் மகிழ்ச்சி பூத்தேன்.

எஜமானர்:—என் கடிதத்தால் நீர் சந்தோஷப்படக் காரணமில்லையே. உம்மை அடுத்த மாதத்திலிருந்து விலகிக்கொள்ளும்படி யல்லவா எழுதியிருந்தேன்.

குமாஸ்தா:—நான் வேறிடத்தில் உயர்ந்த சம்பளத்துக்குப் பேசி முடித்தபிறகே உங்கள் கடிதம் கிடைத்தது. கவலைப்படாமல் விலக முடிந்ததற்குச் சந்தோஷப்பட்டேன்.


ஃ

அவர்:—சகுனங்கள் பொய்யா? மெய்யா?

இவர்:—என் மனைவி சில சமயங்களில் யதார்த்த மனமுள்ளவளாயும், சில சமயங்களில் சூது கபடம் பொய் கொண்டவளாயும் இருப்பதுபோலவே, இந்த சகுனங்களும் பொய்யாகவும் மெய்யாகவும் இருக்கின்றன.

ஒருவர் வேண்டிக்கோள்ளுகையில் அலக்ஷியம் செய்தல்.

ராமு ஒரு விஷயமாய்க் கோபுவை வேண்டிக்கொள்கிருன். அந்த விஷயம் ராமுவுக்குமட்டுமே பயன்தருவதாயிருப்பதுகண்டு, ஏன் அதைச் செய்துதர என்று கோபு அலக்ஷியமாக இருந்து விடுகிருன். ராமுவோ கோபுவின் அலக்ஷியத்தைக் கண்டு ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, மற்றவரைக்கொண்டோ தானே முயன்றோ அவ்விஷயத்தை முடித்து விடுகிருன். கோபு செய்து கொடாததினலேயே ராமுவின் சங்கதி தடைபட்டுப் போவதில்லை. ஆயினும், கோபுவின் கோணலான குணம் இந்த சங்கதியில் நன்ருக விளங்கி விடுகிறது.



சிநேக சச்சரவு.

கனம் ஆசிரியரவர்களுக்கு,

ஒருவன் தன் இரு நண்பர்களுடன் ஓரிடத்திற்குச் சென்று திரும்பி வந்துகொண்டிருக்கிறான். அம்மூவரில் ஒருவனிடம் மட்டுமே வேண்டிய பணம் இருக்கிறது. ஒரு நண்பன் தனக்கு அதிகபசியாக இருக்கிறதென்று பணம் வைத்துள்ள நண்பனையும் மற்றவனையும் ஹோட்டலுக்கு அழைக்கிறான். பணத்துடனுள்ள நண்பன் தன்னிடமுள்ள பணம் தன்னுடையதன்றாதலின் கண்டிதமாய் ஒருதம்பிடியும் தர இயலாதென்கிறான். பசித்த நண்பனோ தன்வீடு போகும் மார்கத்தின் ஓரமாகவே இருப்பதால் தன் வீட்டிற்குச் சென்றவுடன் ஹோட்டலில் ஆன செலவைத் தான் கொடுத்து விடுவதாயும், ஆகவே மூவருமாக உண்ணச் செல்வோமென்றும் அழைக்கிறான். இதற்குப் பணநண்பன் சற்றும் இணங்கவேயில்லை! பசிநண்பண் இதற்கு முன் இவ்விதம் பணம்கேட்டதுமில்லை, பெற்றுச் சென்று ஏமாற்றியதுமில்லை. ஏதோ அந்த சந்தர்ப்பத்தில் அவனிடம் பணம் இல்லாமற் போய்விட்டது. மற்றபடி பசிநண்பன் ஏழையுமல்ல. அவ்விதமிருக்க, இப்படிக் கேவலமாய் பணம்தர மறுத்து அந்தப் பணநண்பன் அவமதித்தானே என்று ஆத்திரமாய்ப் படுகிறது. இவ்விதம் அவமதித்த நண்பனை, அதிலும் பசி வேளையில் உதவ மறுத்த நண்பனைப் புறக்கணிப்பதா?—அன்றி அவனுடன் பின்னும் நட்பு குலாவுவதா? "கூடிப் பிரியேல்" என்பதையும் கவனித்து விடை தெரிவிக்க வேண்டுகிறேன்.

J. S. R.

ஃ


[இத்தகைய வேற்றுமைக் குணமுடைய நண்பர்களே எங்கும் மிகுதி. அவர்களின் செய்கையை நோக்கில் மனதிற்கு எவ்வளவோ ஆத்திரமுண்டாகிறது. சமய சந்தர்ப்பம் தெரியாமலும், அவசரமாய்க் கேட்கும் சமயம் மறுத்தும், பல தருணங்களில் பொய்மொழி புகன்று மிக்க ஈனமாய் நடந்தும் புண்படுத்தி விடுகின்றனர். நமது எதிரிகளின் பக்கமும் சேர்ந்துகொண்டு, நமது பக்கமும் குலாவுகின்றனர். நாம் கொடுப்பனவற்றை அவர்கள் பரிசுகளாக எண்ணுகின்றனர். அவர்கள் தருவனவற்றையோ ஒரு காசுகூடக் கணக்கு வைத்து வாங்கிக்கொள்கிறார்கள். நம் வீட்டுக்கு அடிக்கடி வந்துகொண்டிருந்ததை நிறுத்தி இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வந்தால் அது ஒரு கௌரவமாயிருக்குமென்று குருட்டெண்ணம் கொள்கிறார்கள். இதோ படித்துத் தருகிறேனென்று புஸ்தகம் பெற்றுச்சென்று, அப்படியே வேற்றாருக்குப் போய்விடுகி

எவ்வளவு உயர்ந்த அந்தஸ்திலிருந்தும், பிசகு செய்தால் போலீஸ் வீரர்கள் வந்து கொண்டு போய்விடுகிறார்கள்.

ளுர்கள். அந்த ஊருக்கே நாமும் போக நேர்ந்தபோது அவர்களைச் சந்தித்து, என்ன புஸ்தகம் திருப்பித் தராமலே கொண்டுபோய் விட்டீர்களே யென்ருல், சீக்கிரம் ஊர் வந்து கொடுப்பதாகச் சொல்லுகிருர்கள். பிறகு அவர்களிடமிருந்து வரும் கடிதத்தில் தாங்கள் இரவல்பெற்ற புஸ்தகத்தைப்பற்றி எதுவுமே குறிப்பிடாமல், வேறு விஷயங்களைப்பற்றி வரைந்து அதற்கு உடனே பதில் வேண்டுமென்கிருர்கள். பெரிய படிப்புப் பெற்றிருந்தும் இவ்விதம் ஏமாற்றுகிற இவர்களின் செய்கையைக் காணும்போது பதில் எழுதுவதற்கே மனம் ஒப்புவதில்லை. வேறு சில நண்பர்களுக்கு அவசரமான ஒரு விஷயம் வரைந்து பதிலுக்குத் தபால் தலையனுப்பினுலும் மௌனமாயிருந்து விடுகிருர்கள். இன்னும் சில நண்பர்கள் தங்களால் சுலபத்திலேயே ஒரு காரியத்தைத் தங்களின் நண்பனுக்குச் செய்துகொடுக்க சக்தியும் சௌகரியங்களுமிருந்தும், ஏன் செய்து கொடுக்க என்றெண்ணி மௌனமாயிருந்து விடுகிருர்கள். சில நண்பர்கள் தங்கள் வீடுதேடி வரும் மித்திரர்களைச் சரிவரக் கவனியாதிருந்துவிட்டு, அவர்கள் ஊருக்குப் புறப்படுகையில் அப்போதுமட்டும் வெகு உபசாரமாய்ப் பேசி வழியனுப்புகிருர்கள். ஒரு நண்பர் ஒரு சங்கதியில் தம் நேசனை ஏமாற்றப் பார்க்கிறவர்போலும் தோன்றுகிருர். அவரே மற்ருெரு சமயம் விடாமழையில் காலையில் காபியும் பருகாமல் பசியுடனே நனைந்துகொண்டு இரண்டு மைல் தூரம் தம் சிநேகனேடு நடந்துவந்து வண்டியேற்றி அனுப்பிவிட்டுச் செல்கிருர். இதைக் கவனிக்கையில், பொதுவாக நண்பர்களென்போர் சில தருணங்களில் ஸமய ஸஞ்சீவிபோன்று அருகிலிருந்து உதவுவோராகவுமிருக்கிருர்கள். சில சமயங்களில் பிரிந்துபோய் அலக்ஷியமாகவும் இருந்துவிடுகிருர்கள்; வேறு சில சமயங்களில் நாம் மிக அருமையாக மதித்துள்ளவற்றை மெதுவாகக் கொண்டுபோய்விடுவோராகவும்இருக்கிருர்கள் சில சங்கதிகளில் அனுவசியமாகப் பகைத்துக் கொள்வோராகவுமிருக்கிருர்கள். இவ்விதம் பலதிறப்பட்டு இவர்கள் நிற்பதால் வெறுக்காதிருக்கவும் கூடவில்லை; சிநேகியாது விலகிவிடவும் முடியவில்லை யென்றே சொல்ல வேண்டியதாகிறது. எவ்வளவோ விரோதமும் பொருமையுமாக இருந்துவிட்டுப் பிறகு நேரில் சந்திக்கும்போது வெகு அன்புடன் புன்னகை வதனத்தோடும் நிற்பதால் பழைய மனஸ்தாப விஷயங்களை மறந்து மறுபடியும் அவர்களுடன் குலாவும்படிநேருகிறது. மீண்டும் எவ்விதமோ ஒரு சிறு சச்சரவு முளைத்து வார்த்தைகள் பலக்கிறது. மறுபடியும் மறுதினம் கூடிக் கொள்ளும்படியாகிறது. இத்தகைய மத்திப சிநேகர்கள் தான் எங்கும் அதிகம். உத்தம நண்பர்கள் கிடைப்பது அரிது. அதற்குப் பூர்வபுண்ணிய மிருந்தால் சித்திக்கும். மத்திப நண்பர்களை அறிமுகம் என்ற குப்பையில் சேர்க்கும்படியான காலங்கள் வருவதுமுண்டு. ஒரு சங்கதியில் ஒருவருடைய குணத்தைத் தெரிந்துகொண்டபிறகு, அதற்குத் தகுந்தபடி நாமும் இசைந்து நடந்து, மன்னித்தவாறே சென்று "கூடிப் பிரியேல்" என்றபடி இயன்றவரையில் பொறுத்துத் தழுவிச் செல்வதே உத்தமம். குற்றம் பார்க்கில் சுற்றமுமில்லை; நட்புமில்லை. ஒருவரது பொறுமையிலிருந்தே இருவரது நட்பும் நிலவும்.—ப-ரா.]

பணம் சேர்க்க சிறுமையே போதும். செலவிடுவதானுல் எத்தனையும் போதாது. மனத்திருப்தி யிருந்தால் வென்னீர் பருக்கையும் அமிர்தம்தான்.

ஆத்திச்சூடிக்கு விபரீத அர்த்தம்.



முன்னொரு காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள சந்திரகுடி என்னும் ஊரில் கஜபதி என்ற ஒரு குடியானவன் இருந்தான். அவனுக்குஇரண்டு புத்திரரிருந்தனர். இளையவன் பெயர் பவானந்தம். அவன் அருகிலுள்ள ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தான். அவனுடைய உபாத்தியாயராகிய சாம்பசிவமூர்த்திப் பிள்ளை என்பவர் அவனுக்கு ஔவையார் அருளிச்செய்த ஆத்திச்சூடியை நன்றாகப் பாடம் செய்து வைத்திருந்தார். அதில் கூறியுள்ளவாறே நடக்க வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்.

ஃ

பவானந்தத்திற்குத் திடீரெனச் சுரம் கண்டிருந்தது. அதனால் அவனுடைய தகப்பனார் ஒரு வைத்தியரைத் தம் வீட்டிற்கு அனுப்பிவிட்டு வயலைப் பார்க்கப் போய்விட்டார். வைத்தியர் வீட்டுக்கு வந்தபோது பவானந்தம் வாயிற்படியின்மேல் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து, 'அப்பா, வாயிற்படியின் மேல் உட்காரக் கூடாதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்; ஆதலால் நீ கொஞ்சம் அப்புறம் நகர்ந்து உட்காரு' என்றார். அதற்குப் பையன் "நிலையிற்பிரியேல்" என்று ஔவையார் சொல்லியிருப்பதைத் தெரியீரோ? ஆகையால், நான் இந்த இடத்தைவிட்டு நகர்ந்து அப்புறம் உட்காரமாட்டேன் என்று பதில் சொன்னான். பிறகு வைத்தியர் 'உனக்கென்ன உடம்பு ?' என்று கேட்டார்.

ஃ

உடனே பவானந்தம், ஆத்திச்சூடியில் "உடையது விளம்பேல்" என்று கூறப்பட்டிருக்கிறது; நான் ஆத்திச்சூடியில் கூறியுள்ளபடி நடப்பவனாகையால், கட்டாயம் என்னுடைய வியாதி இன்னதென்று உள்ளதைச் சொல்லமாட்டேன் என்றான்.

ஃ

'சரி, உன்னுடைய கையையாவது காட்டு. நாடிபார்த்துச் சொல்லுகிறேன்' என்று வைத்தியர் சொன்னார்.

'என்ன ஐயா வைத்தியரே, என்' உபாத்தியாயர் 'ஏற்பது இகழ்ச்சி' என்று கூறியிருக்கிறார். என்னைக் கை நீட்டியா உம்மிடம் யாசிக்கச் சொல்லுகிறீர். உம்முடைய தந்திரமெல்லாம் என்னிடம் செல்லாது என்றான்.

ஃ

வைத்தியர், இதென்னடா சனியனாக இருக்கிறதே என்று நினைத்துக்கொண்டு, ஒரு மாத்திரையைக் குழைத்துப் பவானந்தத்தைச் சாப்பிடச் சொன்னார். ஆனால், அவன் வைத்தியரையே அதில் கொஞ்சம் முதலில் சாப்பிடும்படி வேண்டினான்.

வெகுநாட் காத்திருந்து பிறகு ஒருவரைச் சந்திக்கிறபோது, வெகுஆவலும் பிறமுப்புமாய் சம்பாஷணை தொடங்குகிறது. பிறகு அடுத்த தினம் சந்திக்கையிலோ பரஸ்பரம் புன்னகை வதனம் காட்டிக்கொண்டு ஜாடையாகப்போய் விடுகிறார்கள்.

அதற்கு வைத்தியர், 'என் உடம்பில் வியாதி யில்லாதிருக்க நான் மருந்து சாப்பிட வேண்டியதில்லை; நீ சாப்பிடு: உன் நோய் தீரும்' என்றார்.

ஃ

உடனே பையனுக்குக் கோபம் அதிகரித்துவிட்டது. 'என்ன நீர் ஆத்திச்சூடி படித்திருக்கிறீரா, இல்லையா? ஆத்திச்சூடிகூடப் படிக்காமல் வைத்தியம் செய்யவரலாமா, முதலில் ஆத்திச்சூடியைக் கற்றுக் கொண்டு பிறகு வைத்தியம்செய்ய வாரும். ஐயமிட்டுண் என்னும் முதுமொழியைக் கேள்விப்பட்டதில்லையா? நீர் அதில் கொஞ்சம் சாப்பிட்ட பிறகுதான் நான் அதைச் சாப்பிடுவேன்' என்று கடுகடுத்துப் பேசினன்.

வைத்தியர் இது ஆத்திச்சூடியின் விபரீத அர்த்தம்போலிருக்கிறது என்றெண்ணிக்கொண்டு திரும்பிப் போய்விட்டார்.

(மாணவர் போக்கிஷம்.)

தானே வலிய சொல்லிக்கொள்வது.

"தங்களுக்கு அந்தப்பழயபுஸ்தகம் பயன்படாதென்றே நினைக்கிறேனுதலால் அதை எனக்குக் கொடுத்துவிடுவதில் தங்களுக்கு ஒரு சிரமமும் இருக்காதென்று எண்ணுகிறேன்" என்பதாக வார்த்தையை வளைத்து வளைத்துச் சொல்லி -ஒருவன் பிறகு கொள்ளவேண்டிய ஒரு முடிவைத் தானே முன்னதாகக் கூறிக்கொள்வது. இதைக் கேட்கிற மற்றவன் பழய சரக்குக்கே மதிப்பு அதிகமாதலின் அப்பழய புஸ்தகத்தைத் தர முடியாதென்று கூறி விடுகிறுன். அவ்வளவு நீள வார்த்தையாலும் அவனை மயக்க முடிகிறதில்லை.

ஒரு பத்திராசிரியருக்கு ஒரு வியாசம் அனுப்பி— "இந்த வியாசம் தங்களின் மனதிற்கு மிக்க இனிமையூட்டுமென்று நினைக்கிறேனுதலின் இம்முறையே பிரசுரிக்க வேண்டுகிறே"னென்று எழுதுகிறுர்கள். அந்த வியாசத்தைப் படித்தபிறகு பத்திராசிரியர் கொள்ளவேண்டிய அபிப்பிராயத்தைத் தானே—முன்னதாக எழுதிவிடுவது அசங்கதமென்பதை யுணருகிறதில்லை.

சிலர் எப்பொழுதும் விஸ்தாரக்கடிதமே வரைந்து எந்த சங்கதியையும் தாமே வலியச்சொல்லிக்கொண்டு, பிறர் அபிப்பிராயம் கொள்ளுமுன்பாக, அவர் அபிப்பிராயத்தைத் தாமே சொல் முற்பட்டுக்கொண்டு அருவருப்பான காரியம் செய்கிறுர்கள். அதிகப் பிரசங்கமான இவற்றையெல்லாம் வாசிக்கும்போது தலைவலி யுண்டாகி விடுகிறது.

பிறரது கஷ்டத்தில் சந்தோஷப்படுதல்.

பிறருக்குக் கஷ்டம் வந்த காலத்தில் சந்தோஷப்படும் பிரமுகர்களில் முதலாவதாக வைத்தியரை வைக்கலாம். அவருக்கு ஊரிலுள்ளோரெல்லாம் வாந்திபேதி, அம்மை, முதலிய கொடிய வியாதிகளில் அவதிப்பட்டால் சந்தோஷ மிகுவார். தன்னிடம் அனேகர் தங்களுடைய நோய் நொடிவுகளைக் கொண்டுவந்து காட்டித் தனக்கு வருவாயைக்கொண்டுவந்து கொடுப்பார்களென்று அவருக்குப் பூர்ண நம்பிக்கை உண்டு. நமக்கு நோய்வந்த காலத்தேதான் ஒரு வைத்தியரைத் தேடுகிறோம். இல்லையேல் வைத்தியர் என்று ஒரு சாரார் இருக்கிறார்களென்று நாம் நினைப்பதுமில்லை; அவர்களுக்கு வருவாய்வரும் வழியாக எவ்விதப்பிரயோஜனமுள்ள காரியமும் செய்வதில்லை. எவ்வளவு நண்பனாக இருந்தாலும் நாம் நோய் வாய்ப்பட்டு இருக்கையில் தான் அதைச் சிகிச்சை செய்வதற்காக அந்நண்பனை அழைக்கிறோம். இவ்வழியில் அந்நண்பனுக்குப் பண உதவி கொடுப்போமே யொழிய, சாதாரண காலத்தில் அவனிடத்திலிருந்துதான் ஏதாவது பறித்துச் செல்வோம். ஆகவே, வைத்தியர்களுக்குப் பிறருக்குக் கஷ்டம்வந்த காலத்தில்தான் சந்தோஷம்.

ஃ

இரண்டாவதாக, வக்கீல்களை எடுத்துக் கொள்ளலாம். அவருக்கு இரு சினேகிதர்களாவது பந்துக்களாவது ஒற்றுமையா யிருந்தால் பிடிக்காது. ஏதாவது சிறு வித்யாச எண்ணம் அவர்களில் ஒருவன் மனதில் உண்டாகும் வழியையே தேடுவர். இந்த பந்துவுக்கும் அந்த பந்துவுக்கும் சொந்தமான வீடுகளுக்கு நடுவில் ஒரு சின்னசந்து சென்றால் அது ஒரு பந்துவினுடையதென்று வக்கீல் அதில் நுழைந்து அவனுக்குப் புத்திபோதிப்பார். அவனும் தனக்குச் சொந்தமில்லாத நிலத்தைப்பெற விருப்பம் கொள்கிறான். இருவரும் கோர்ட் ஏறுகிறார்கள். இருவரிடத்திலும் பிடுங்கித்தின்ன இரு வக்கீல்கள் முற்பட்டுக் கொள்கிறார்கள். கடைசியில் அந்நிலம் எவ்வளவு பெறுமோ அதற்கு இரட்டிப்புக்கு மேல் ஒவ்வொருவனும் வக்கீல்களுக்கு அழுதிருப்பான். அது அப்போதும் தொலைகிறதா? ஹைகோர்ட்டுவரையும் ஏறுகிறார்கள். கடைசியில், ஒருவன் ஓட்டையும், மற்றவன் அந்தச் சிறு பாக நிலத்தையும் தலையில் கட்டிக் கொண்டு போகிறார்கள். இவ்வாறாக, வக்கீல்கள் என்னும் சாரார் பிறரிடத்தில் ஒற்றுமை குறைவதில் கவனம் செலுத்தி அதிலேயே ஜீவனவழி தேடிக் கொண்டிருப்பர்.

ஃ

மற்றொரு வகையார் மார்வாடிகளும், வட்டிக்குப் பணம் கொடுக்கும்

புதிதாக ஜனிக்கும் ஒவ்வொரு குழந்தையும், கடவுள் இன்னமும் மனித ஜாதியிடத்து நம்பிக்கையற்றுச் சலித்து விடவில்லை யென்ற செய்தியைக் கொண்டு வருகிறது.

புண்ணியசீலர்களுமாய் எவர்களுக்காவது அவசர பண நெருக்கடி வராதா? நம்மிடத்தில் ஏதாவது நகை நட்டு கொண்டுவந்து அந்நகையின் கால்பாகப் பணத்தை அபார வட்டிக்குப்பெற்றுப்போகானு என்பதுஅவர்களின் எண்ணம். மார்வாடியின்கடையில் வைத்த நகையைத் திருப்பிப்பெறுவது மிகவும் கடினமான காரியமாகும்.நாமும் பணத்தைத்திருப்பிக்கொடுக்கக் கொஞ்சநாளாகும்.அதற்குமுன் அந்த மார்வாடியும் நம் முகத்தையே பார்க்கமாட்டான். வட்டி, அசலைவிட அதிகமானபின்பு நம்மைக் கேட்பான். அப்போது நாம் நகைபோனுலும் போகிறதென்று விட்டுவிடவே மனம் வருகிறது. அதைத் திருப்புவதற்கு இன்னும் எவனிடமிருந்தாவது நாம் பணம் கடன் வாங்கித்தானுக வேண்டும். அந்தக் கடன் எதற்கென்று இந்த நகையை இழக்கவே நாம் நினைக்கிறோம். ஆகவே, இம்மூன்ரும் சாராராகிய மார்வாடிகளும் வட்டிக்குக் கடன் கொடுப்போரும் இன்னொருவனுக்குப் பண நெருக்கடி உண்டாகி நம்மிடம் வரமாட்டானு என்று அந்தக் காலத்தை எதிர்பார்ப்பர்.

ஃ

நாலாவது வகையினராக, சைகிள் ரிபேர் கடைக்காரர்கள், மோட்டார் ரிபேர் கடைக்காரர்கள், இன்னும் பலவும் ரிபேர்கள் செய்பவர்களைச் சொல்லலாம். இவர்களுக்கு இன்னெருவனுடைய சைகிள்களோ, மோட்டாரோ. நல்ல ஸ்திதியிலிருக்குமளவும் வயிற்றெரிச்சல்தான். எங்கேயாவது முட்டிக்கொடுத்துச் சின்னுபின்னமாகச் சைகிளையும் மோட்டாரையும் கொண்டுவந்து சேர்க்கானு என்றுதான் எதிர்பார்ப்பார்கள்.

ஃ

இன்னெரு வகையினர் புரோகிதக்கூட்டமாகும். இவர்களுக்கு சுப, அசுபங்களில் வரும்படி கிடைத்தாலும், அசுப காரியங்களில் கிடைப்பதிலேயே அதிக விருப்பம். எவனுவது உடம்பிற்குக் குணமில்லாது பாயும்படுக்கையுமாயிருந்தால் அவன்எப்போது இவ்வுலகிலிருந்து அகலுவான்? அவனுக்குச் செய்யவேண்டிய கருமாதி முதலிய சடங்குகளில் தனக்கு வரும்படியை என்றைக்குத் தேடிக்கொள்ளலாமென்றே பார்ப்பர். ஆகவே, இப்புரோகிதக் கூட்டமும் நம் கஷ்டகாலத்தில் சந்தோஷப்படும் வகையினரே.

ஃ

கடைசியாக, நாம் வீட்டில்புகுந்து நம்முடன் கூடிக்குலாவி நம் சங்கதிகள் பூராவும் அறிந்து நம்மை நடுத்தெருவில் நிற்குமளவிற்குச் செய்யும் ஒரு சாராரை முதன்மையாகக் கூறலாம். அவர்களுக்கு இருவர் ஒற்றுமையாகக் காலம் கழித்தால் மனது பிடிக்கவே பிடிக்காது. அவர்கள் நம் விவகாரங்களில் நுழைந்து, அவர்கள் நம் வீட்டில் தலைமை ஸ்தானம் வகித்துக்கொண்டு நம்மையும் மற்ருேரையும் வேறுபடுத்தி, அதனுல் அவர்களுக்கு வேண்டியவற்றைப் பறித்துக்கொண்டு நம்மை நடுச்சந்தியில் தன்னந் தனியாகத் தவித்து நிற்கும்படி செய்வர்.

ஃ

இவர்களெல்லோரும் நம்மிடமிருந்து ஏதாவது பறித்தாலும், ஆபத்தில் இவர்களுடைய உதவி இன்றி

ஒரு வேலையில் புதிதாய்ப் பழகுகிறவர் சிறு விஷயங்கட்கெல்லாம் கேள்வி கேட்டுத் தெரிந்துகொள்ள ஆரம்பிக்கும்போது, அந்த வேலையிலேயே நெடுநாளாக உள்ளவர் இந்த சாமான்ய சங்கதிக்கு ஒரு கேள்வியா என்று புன்னகை கொள்ளுவார்.

யமையாததாக இருக்கிறது. காய்ச்சல் அல்லது ஏதாவது நோய் வாய்ப்பட்டால் நமக்கு வைத்தியருடைய ஆறுதல் மொழிகள் அவசியம் தேவையாயிருக்கின்றன. அவ்வாறே, ஏதாவது அநியாயமான விஷயங்களில் வக்கீலினுடைய உதவியை நாம் பெரிதும் வேண்டுகின்றோம். அவர் அச்சமயத்தில் தன்னாலான உதவியைச் செய்வதாக வாக்குறுதி கொடுக்கிறார். அவ்வாறே, ஆபத்தில் நமக்குப் பண உதவிக்கு மார்வாடிகளும் கடன் கொடுப்போரும் பெரிய உபகாரிகளாக இருக்கிறார்கள். அவர்கள் உதவி அவ்வாபத்தான சமயத்தில் நமக்குக் கிடைக்காவிட்டால் நாம் மிகவும் மோசமான ஸ்திதிக்கு வருவதில் எள்ளளவும் சந்தேகமில்லை. சைகிள் ரிபேர் கடைக்காரர்களும் மற்றும் பல பழுதுபார்ப்போரும் நமக்கு அவ்வாபத்தான சமயத்தில் ஆறுதல்கூறி செப்பனிட்டுக் கொடுக்கிறார்கள். புரோகிதர்களும் நம்மால் ஒரு கலியாணத்தைச் செய்யமுடியுமா என்று தயங்கிக்கொண்டிருக்கையில் நமக்கு ஆறுதல்கூறி அவ்விவாகத்தை முடித்துக் கொடுக்கிறார்கள். நம் வீட்டில் கலகத்திற்குக் காரணமாக இருக்கும் பேர்வழிகள் நமக்கு வேண்டிய இடையூறு விளைவித்தாலும், அவர்கள்உதவி நமக்கு இன்றியமையாததாகவே இருக்கிறது. அவர்கள் பெரிய பந்துசமூக பலம் நம் பக்கத்திலிருப்பதாகப் பிறருக்குக்காட்டி மதிப்பை யுண்டாக்கி நமக்குப் பேருதவியாக நிற்கிறார்கள்.

ஃ

இவர்களெல்லோரும் நம் கஷ்டத்தில் சுகப்படுகிறவர்களென்று ஒரே பழிப்பாக முடிவுசெய்து கூறுவதற்கில்லை. வைத்தியர்களில் எத்தனையோ பேர் இலவசமாக வைத்தியம் செய்யத்தான் செய்கிறார்கள். வக்கீல்களில் எத்தனையோ பேர் பீஸுக்காக உழைக்காது நீதிக்காக உழைப்பவர்களாக இருக்கிறார்கள். சைகிள் கடைக்காரர்களில் எத்தனையோ பேர் தங்களிடம் மறுதடவையும் வாடிக்கையாக வரவேண்டுமென்ற நோக்கத்துடன் சரியானபடி ரிப்பேர் செய்துகொடுத்து உழைக்கிறார்கள். இவ்வாறே, எந்த வகையிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

ஃ

இந்த வகையான மனிதவர்க்கங்களில் பெரும்பான்மையோருக்கு இன்னொருவர் அவதிப்படுவது மிகவும் சந்தோஷம். அவர்கள் ஜீவனமே அவ்வழியிலிருப்பதால் நாம் அவர்களை நோவதற்கில்லை. ஜீவனோபாயத்திற்கு மட்டும் அவர்கள் இக்கெட்ட அபிப்பிராயம்கொள்கிறார்களே தவிர, மற்ற விஷயங்களில் அவர்கள் ஆப்த நண்பர்களே. எப்படியும் அவர்கள் நாம் கஷ்டப்படுகையில் அதிலிருந்து ஒரு லாபம் தேடிக்கொண்டு சந்தோஷமிகுகின்றனராகையால் இவர்களெல்லோரையும் பிறர் கஷ்டப்படுகையில் சந்தோஷமிகும் சாரராகவே சொல்லும்படியாகிறது.

S. ஸ்ரீரங்கராஜு,

ஜெகன்னாதபாக், சைதாப்பேட்டை.

ஒருவர்தனது மனைவிக்கு ரொம்ப கஷ்டமென்று திண்டுக்கல், நாமக்கல், செங்கல், கருங்கல், இவ்விடத்திற் கெல்லாம் தந்தி தந்ததில், ஆவணிமாதம் வந்து கூடிக்கொண்ட பந்துக்கள், மனைவி பரலோகம் போனபிறகும் மூன்று மாதம் போல் தங்கியிருந்து விட்டு அப்பால் தங்களின் ஊருக்குப் புறப்பட்டார்களாம்!



ஸ்திரீ சக்தியும் கல்வியும்.

ஸ்திரீகட்கு ஸ்வாதந்திரியம் கொடுக்கக் கூடாதென்பது சிலருடைய அபிமதம். இதற்குக் காரணம் போதுமான தெளிந்த புத்தியில்லாமையே. எதையும் எளிதில் நம்பி ஏமாறக் கூடிய பேதமையான சிந்தையே அவர்களுக்கு அதிகம். உலகம் கபடமுள்ளது என்பதைத் தெரிந்து, அதற்கேற்றபடி தீர்க்காலோசனையுடனும், பக்குவஞானத்துடனும் நடந்துகொள்ளும் தன்மை அபூர்வம். எந்த உறவினன் கபடசிகாமணியோ, எவன் தன் கற்பை உறிஞ்சுவதற்குத் தருணம் நோக்கியுள்ளானோ அவனையே தனக்கு மிக்க வேண்டியவனாக நினைத்து, அவன் வருகிறபோதெல்லாம், இன்னும் இரண்டொரு அதிக பதார்த்தங்களும் செய்து பரிமாறி உபசரிப்பர். அவனோ இவள் தன் வசமாய்விடக்கூடியவளென்று தீர்மானித்து விடுவான். திடீரென ஒரு நாள் மேல்விழுந்து கெடுத்துவிடவும் துணிவான். இவ்வளவுக்கும் ஸ்திரீயின் அவிவேகமே காரணம். ஆதலின், அதிக ஸ்வதந்திரம் சுந்தரிகட்கு ஆபத்தாகிறது.

ஃ

பால்யத்தில் அவர்கட்குத் தகுந்த ஸத்போதனைகளையும், படிப்பையும் கற்றுக்கொடுத்திருந்தால் யௌவன காலத்தில் புருஷர்களுக்கு ஸமானமான புத்தியோடு கிருக கிருத்தியத்திலும் மற்றுமுள்ள ஸகாயக விஷயத்திலும் சிரத்தையுடன் வேலைகளைச் செய்வர். ஹிந்து மாதர்கள் தெளிவான புத்தியைக் கொண்டவர்கள். அதற்கு ஸந்தேகமில்லை. உபயோகப்படுத்தும் வழியைக் கற்பியாததால் அவர்கள் அவிவேகிகளாகின்றனர். ஹிந்து சரித்திரத்தில் அதிக மேன்மையடைந்த அநேக ஸ்திரீகளின் விருத்தாந்தங்களை நாம் கேட்டதில்லையா? சாண்டு பீபீ என்பவள் வெகு பராக்கிரமசாலியான அக்பர் பாதுஷா சக்ரவர்த்தியோடு வெகுவாய் யுத்தம் செய்து முதல் தடவை ஓட்டிவிடவில்லையா? ஸுல்தானா ரிஜியா என்பவள் ஸ்வஜாதி ஸம்பிரதாயப்படி கடினமான குடும்பக் கட்டுப்பாடுகளுக்குள் அடங்கி ஸ்வதந்திரம் குறைந்தவளாயிருந்தாலும், அவளே இராஜ்ய பாரத்தை வகித்து நன்றாய் நடத்தி

கெட்ட காலத்தில் எல்லோரும் சேர்ந்துகொண்டு எதிர்க்கிறார்கள். அவனுக்கு நற்காலம் கூடும்போதோ எதிர்த்தவர்கள் எங்கெங்கோ பிரிந்து தூர ஒதுங்கி மறைந்து மாயமாகிறார்கள்.

வரவில்லையா? பால்யாரம்பத்திலிருந்து ஸ்வதந்திரமில்லாதிருந்து பதி வியோகமானவுடன் புத்திரன் பாலனானதால் அவனுக்காக அகல்யாபாய் இந்தோர் ராஜ்யத்தை ஆண்டு மிகுந்த அபிவிர்த்திக்குக் கொண்டுவரவில்லையா? தாராபாய் வெகு பிரஸித்தி பெற்றவள். இவ்விதமே அநேகம் ஸ்திரீகள் ஸ்வதந்திரமில்லாவிட்டாலும். காலம் நெருங்கின பொழுது ஸ்வய ஸாமர்த்தியத்தால் பிரக்யாதி யடைந்திருக்கின்றனர்.

ஃ

இவ்விதமிருக்க, ஸ்திரீகள் சிறுவயது முதற்கொண்டு லோக பரிசயத்தை யடைந்து தங்கள் பர்த்தாக்களுக்கு அனுகூலிகளாயிருந்து நற்காரியங்களைச் செய்வதில் தடையென்ன? ஹிந்துக்களின் விவாக காலத்தில் உபயோகப்படும் வேத மந்திரங்களெல்லாம் ஸ்திரீகளின் ஸ்வாதந்திரியத்தையே குறிக்கின்றன. ஆகையால், ஸ்திரீகட்கு ஸர்வ விதத்திலும் ஸ்வதந்திரமடைய பாத்தியமுண்டு. ஸ்திரீகள் ஸ்வதந்திரமடைந்தால் ஏக கிருத்தியமான கிருக கிருத்தியத்தில் ஸகல விதங்களிலும் நன்மையே கிடைக்கும். கிருக கிருத்தியம் ஏக கிருத்தியம் அதாவது ஒருவரே செய்யவேண்டிய வேலை என்று சொல்லப்பட்டாலும், அதில் அநேக பிரிவு பாகங்கள் இருக்கின்றன. பலர் கூடிச் செய்யவேண்டிய வேலைகளுமுள்ளன. ஒரு ஸ்திரீயே தலைவியாய் நிர்வாகம் செலுத்தினாலும், துணைக்குக் கூட மனுஷ்ய ஸகாயம் தேவை. ஒரு ஸ்திரீயின் திட்டப்படியே சமையல் காரியங்கள் நடக்கவேண்டுமானாலும், உதவிக்கு மற்றவர்களும் இருந்து சில்லரை வேலைகளைச் செய்கின்றனர். இதுபோலவே. ஒரு விஷயத்தில் பதியும். மற்றொரு அம்சத்தில் பத்நியும் ஸ்வதந்திரம் வகிக்க நேரிடும். எந்த விஷயத்தில் புருஷனுக்கு ஸ்வதந்திரமுண்டோ, அந்த விஷயத்தில் மனைவி தடையில்லாமல் அனுமதி கொடுக்கவேண்டும். எந்த அமிசத்தில் மனைவி காரியங்களை நிர்வகித்துச் செய்யவேண்டுமோ அதற்குப் பதியும் ஸம்மதித்து நடக்கவேண்டும். இவ்விதம் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஸ்வதந்திரத்தைக் கொடுத்துக்கொண்டு கிருக தர்மங்களை நடத்தினால், அந்த ஸம்சாரத்தில் லக்ஷ்மீ தேவி ஆநந்தமாய் வஸிப்பாள். ஸகல பாக்கியங்களும் பெருகும். மனோ ஸந்தோஷமும் விருத்திகொள்ளும். இவ்வித அந்நியோந்நிய வாழ்க்கை இருவரின் சௌக்கியத்துக்கும் முக்கியமானது.

ஃ

வித்தியாப்பியாஸம் கணவனுக்கும் வேண்டும்; கணவிக்கும் வேண்டும். கட்டடத்திற்கு ஆதாரமான ஒரு கல்லைப் பிடுங்கினால் முழுக்கட்டிடத்திற்கும் எப்படி ஹானியுண்டாகுமோ. அப்படியே கிருக கிருத்தியத்தில் தாரதம்மிய ஞானமில்லாதவர் ஒருவரிருந்தாலும் அந்த வீட்டிலுள்ள ஸகலருடைய சௌக்கியத்துக்கும் ஹானி நேரிடும். எனவே, இருவருக்கும் விசாலமான வித்தை அவசியம். வித்யாப்பியாஸமென்றாலென்ன? எந்தக் காரியத்தைச் செய்தாலும், அதை சீக்கிரமாயும் ஸுலபமாயும் ஸௌகர்யமாயும் உபாயமாயும் செய்து முடிக்கிற பக்குவஞானத்தை அடைவதாகும். வித்தியாப்பியாஸம் செய்யாத காட்டு மனிதர்களுக்கும், நாகரீகமாய் நகரத்தில் வஸிக்கும் மாந்தர்களுக்கும் இருக்கும் பேதத்தை எல்

சத்தியம் தவறிய மனிதனும், பத்தியம் தவறிய மருந்தும் விபரீதமாய் முடிகின்றது.

லோரும் அறிந்திருக்கின்றனர். இதில் யார் உயர்ந்தவர்கள். நகரவாசிகளல்லவா? அதைப்போலவே. வித்யாவந்தர்களுக்கும், வித்யாவிகீனர்களுக்கும் ஒத்திட்டுப் பார்க்கலாம். இருவரில் எவர் உயர்ந்தவர்?—வித்தியாவந்தர்கள்தான். ஆகையால். ஸ்திரீகட்கு வித்தை அவஸியமென்று மறுபடியும் சொல்லுகிறோம். வித்தையென்றால் அக்ஷர ஞானமுண்டாய் விடுவது மட்டுமல்ல. ஒரு புஸ்தகத்தை வாசித்துத் தனக்குள்ளாக ஆநந்திக்கக்கூடிய பக்குவத்தை யடைவதற்கான அவ்வளவு வரைக்கும் கற்கவேண்டும். நகைகளுக்காக ஆசைப்படுவதுபோலவே நூதன புஸ்தகங்களை வாசிப்பதற்காகவும் ஆசைப்படுகிற அறிவு உண்டாக வேண்டும். ஆபரணங்களுக்காகக் கணவனைத் தொந்தரை செய்வதுபோல், புதுப் புஸ்தகங்களை வாங்கித் தரும்படியும் கணவனை வேண்டிக்கொள்ளுகிற அறிவு உண்டாகுமானால், அத்தகைய மனைவியை யடைந்தவனே பாக்கியவானவான். அத்தகைய சுந்தரியே ஸர்வோத்தமியாவாள். நகைகளைச் சேர்த்துவைப்பது போலவே பல சிறந்த கிரந்தங்களையும் சேர்த்து வைக்கும் ஆசை நமது பெண்மணிகட்கு உண்டாய்விட்டால், ஹா! அதனினும் பெரிய குடும்பலாபம் வேறில்லை. இதனை முக்கியமாய்ப் பெற்றோர்கள் கவனித்து, தமது சிறுமிகள் பிற்காலத்தில் நல்வாழ்வு வாழ்ந்து உத்தம ஞானகலா சுந்தரிகளாய் விளங்கவேண்டு மென்பதை நினைவிற்கொண்டு அதற்கேற்றவாறு சிரத்தையுடன் பாலிகைகளின் கல்வியை விருத்தி செய்யுமாறு வேண்டுகின்றோம். படித்த பெண்மணிகளால் இப்போதுள்ள ஸந்ததியார் மட்டுமேயன்றி, இனி வரும் ஸந்ததியாரும் க்ஷேமமடைவரென்பது நிச்சயம். ஒரு தேசத்தின் அபிவிருத்தி பெண்களைப் பொறுத்திருக்கிறது. பெண்களின் அபிவிருத்தி அவர்களுடைய கல்வியையும் ஞானத்தையும் பொறுத்திருக்கிறது. தொட்டிலையாட்டும் கையே உலகத்தையும் ஆள்கின்றதென்பது உண்மை.

இந்தா என் ஆசீர்வாதம்.

என் செல்வச் சிறுமியே! நீ உன் தாய் தந்தையருக்குச் சிறந்த புத்திரியாகுக. இனிவரும் உன் மணாளனுக்கு நன் மனையாட்டியாகுக. இனி உனக்கு உதிக்கப்புகும் குழந்தைகளுக்கு நல்ல தாயாகுக. உலகுக்கோ இவளைப்போல் உத்தமியுண்டோ என்று உன்னைக் குறிப்பிட்டுச் சொல்லுமாறு குணபூஷணியாய் உயருக. எவ்வளவுகாலம் வரையில் நீ உன் வாயைக்கட்டி அடங்கி நடக்குந் தன்மைகொண்டு, சுறுசுறுப்புடன் காரியங்களைச் செய்து, தெய்வபக்தியுடன் இருக்கிறாயோ அதுவரையில் நீ சுகமாகவே நன்றாக வாழ்வாய். அங்ஙனமே ஆகுக. இந்தா என் ஆசீர்வாதம்.

ஏமாறிக் குமுறிய நெஞ்சு.



என் பழய நண்பனே! இவ்வளவு காலமாக உன்னிடம் எவ்வளவோ நம்பிக்கை கொண்டிருந்த எனக்கு, நீ செய்யத்துணிந்த பிரதிபலன் இதுதானா? ஆ! இளைத்த இடத்தில் பேரன்போடு ஆதரிக்கக் கூடிய தாயைப்போலவும், தவறாக நடந்தால் தக்க நற்புத்தி கூறித் திருத்தி நடத்தக்கூடிய தந்தையைப்போலவும், அவ்வப்போது எனது நன்மைக்கேற்ற சிறந்த ஆலோசனைகள் கூறத்தக்க மந்திரியைப்போலவும் அல்லவா உன்னை இதுவரையில் மதித்திருந்தேன்! 'துன்பம் நேர்ந்தபோது மனதைத்தேற்றித் துயரை ஆற்றக்கூடிய தோழன் ஒருவன் இருக்கிறான்' என்று எவ்வளவோ தைரியத்துடனிருந்தேனே! நான் சந்தோஷப்படும்போதெல்லாம் அச் சந்தோஷத்தில் நீயும் பங்கெடுத்துக்கொண்டு எனது மகிழ்ச்சியைப் பெரிதும் பெருக்கிவந்ததேபோல், நான் துக்கப்படும்போது அதிலும் பங்கெடுத்துக்கொண்டு அத்துக்கத்தைப் பெரிதும் குறைக்க முயல்வாய் என்று எவ்வளவோ நம்பிக்கைகொண்டிருந்தேனே! என் எண்ணமெல்லாம் பின்னமாயினதே! நெஞ்சம் புண்ணாயினதே! என்னை ஏமாறவிட்டனையே! என் நெஞ்சு கொதிக்கச் செய்தனையே!

ஃ

இறைவனது கொடிய சோதனையின் பயனாக நான் பாயும் படுக்கையுமாக நோயுற்றுக் கிடந்தபோது ஒரு நாளேனும், ஒரு நாழிகையேனும் என்னைக் காணவராது மறைந்த மாயமென்னவோ! இதுவேயோ அன்பு? இதுவேயோ நட்பு? எக்காலத்திலும் அநுபவித்தறியாத 'அவஸ்தையைப்பட்டுக் கொண்டு கிடக்கையில் என் அருகேவந்து ஓர் ஆறுதல் வாசகம் பேசக்கூட உனக்கு ஒய்வு வாய்க்கவில்லையா?

ஃ

என்னுடைய நோயின் பிரலாபிப்பில் நீ என்னுடன் கண்ணீர் சொரியவில்லையென்று யான் வருந்தவில்லை; அருகில் அமர்ந்து என்னைத் தொட்டுத் தேற்றி ஆறுதல் கூறிக்கொண்டிருக்கவில்லை என்பதற்காகவும் நான் துயருறவில்லை; எனக்கு எந்த உதவியும் அந்த வேளையில் நீ செய்யவில்லையே என்றெண்ணியும் நோகவில்லை; ஒரு அநுதாபச் சொல்கூட நீ கூறாததற்கும், என்னை வந்து காணாததற்கும், தூரவிலகிப் போய்விட்டதற்குமே என் மாசற்ற உள்ளம் மிக்க வேதனையுடன் ஆத்திரப்படுகின்றது. அத்துணை ஆத்திரம் பொங்குமாறு உன்மீது நான்கொண்ட அன்பும் நிஷ்களங்கமா யிருந்ததென்பதும் உண்மை.

ஃ

“நெருங்கிய தோழன்” என்ற முறையில் இல்லாவிடினும், கேவலம் 'மனிதன்' என்ற முறையிலாயினும், நான் அனுபவித்த பிணியின் அவஸ்தையில் உனக்குச் சிறிதுகூட இரக்கம் தோன்றாமற்போனது கொடுமையி

லும் கொடுமையே. இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத நெஞ்சினர் யாவரும்—அரக்கரே ஆவர் என்பதை நீ மறுக்க முடியாதல்லவா?

ஃ

ஆன்மார்த்த விஷயங்களைப்பற்றி நாம் இருவரும் உவகை பொங்கும் உள்ளத்துடன் உரையாடிக்கொண்டிருந்த நாட்களையும், சில்லரைச் சச்சரவுகளால் 'பிரிந்துபோய் விடுகிறேன்' என்று நீ அச்சுறுத்தியகாலே, நான் உன் மீது கொண்டுவிட்ட பரிவின் மிகுதியால் பிரிவின் துயரம் ஆற்ருது கண்ணீர் சொரிந்து கலங்கி உடனே உன் இஷ்டத்திற்கெல்லாம் இணங்கி நடந்துகொண்ட நாட்களையும் இப்போது என் புண்ணுன ஹிருதயத்தில் நினைத்துப் பார்க்கின்றேன்!

ஃ

நண்பர்களாக நடிக்கும் நயவஞ்சர்களது போலி நட்பை உணராது உறங்கிக்கொண்டிருந்த என்னைத் தட்டி எழுப்பிவிட்ட உனது உபகாரம் பெரிது பெரிதே. துன்பம் நேர்ந்தகாலத்தில் பொய்நட்பு பூண்டவர்களின் கள்ளத்தன்மையைக் கண்டுகொண்டு விடலாம் என்பதை உன்னளவில் நீ நன்ருக விளக்கிக் காட்டிவிட்டாய். நான் விழித்துக்கொண்டு விட்டேனென்பதைத் தெரிந்துகொண்ட நீ இனி என்னிடம் வருவதற்கே வெட்கப்படுவாய்.

ஃ

நம்முடைய தேகத்தில் யாதாயினும் ஒரு ரணம் உண்டாகுமாஞல், உடனே அதனைக் கத்திவைத்தறுத்து ஆற்றவேண்டுமேயன்றி அதனை மறைத்து மூடிவைக்கவொண்ணுது. அதுபோல, புறத்திலே சிநேகம் பாராட்டி மனத்திலே பகைமை கொண்டிருப்போருடைய நஞ்சுத்தன்மையான செயலை நாம் உடனே அவருக்கு வெளிப்படுத்திப் பிரிந்துகொள்வதே முறையாகுமென்று "நீதிநெறி விளக்கம்" என்ற நூலில் நீ படித்திருக்கலாம். அதன் படியே உனது இழியசெயலைத் தெரிவித்துவிட்டு நான் விலகிக்கொள்கிறேன். கடவுள் உன்னை மன்னிப்பாராக.

"புறநட்டகம் வேர்ப்பார் நச்சுப்பகைமை
வெளியிட்டுவேறுதல் வேண்டும்—கழிபெருங்
கண்ணேட்டஞ்செய்யேல் கருவிவிட்டாற்றுவார்
புண்வைத்துமூடார் போதிந்து."

"கேட்டிலும் உண்டோர் உறுதி: கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்."

பத்மா.

[நண்பர்களாயினேர் தங்களைக் கவனியாது அலக்ஷியம் செய்ததுமட்டும் தங்களுக்கு நன்ருகத் தெரிந்து, அதைப்பற்றி மிக மிக ஆத்திரமும் வருத்தமும் கொள்கிருர்கள். ஆனல், தாங்கள் மற்ற நேயர்களிடத்தில் எத்தனை முறைகளில் பிழைபட நடந்து புண்படுத்தியிருக்கிருர்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிடுகிருர்கள். தங்களை எந்தக்குற்றமும் செய்யாத மாசற்ற ஸத்பாத்திரமாக நினைத்துக்கொண்டு பிறரைத் தூற்றுகிற பேதமையே எங்கும் அதிகமாயிருக்கிறது. எதிலும் முதல் தடவையில்தான் மிகுந்த ஆத்திரம் தோன்றும்; பிறகு சாதாரணமாகிவிடும். உலகமே தவறுதல்கள் நிறைந்தது தான் முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்.—ப-ர்.]

நவீன அழகுசாலை

மாப்பிள்ளைக்குப் பம்பாயில் உத்தியோகம்!

“உங்கள் மூத்த பிள்ளைக்குப் பம்பாயில் என்ன வேலை? மற்ற இரண்டு பிள்ளைகளும் அங்கு எந்த உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறார்கள்?” என்று அப்புக்குட்டி சாஸ்திரிகள், பெண் பார்க்கவந்த சுப்பு சாஸ்திரிகளை விசாரித்தார்.

சுப்பு சாஸ்திரி :—மூத்தபையன் சாம்பசிவன் பி. ஏ. படித்திருக்கிறான். இளையவன் லோகசுந்தரம் எப். ஏ. வரை வாசித்திருக்கிறான். கடைசிப்பையன் மகாதேவன் ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறியிருக்கிறான். மூவரும் பம்பாயில் 100, 80, 60, ரூபாய் வேலையில் இருக்கிறார்கள். வரதக்ஷிணை ஒரு காசுகூடக் கேட்கக் கூடாதென்று எனக்குக் கண்டிப்பாய் எழுதியிருக்கிறார்கள்.

அப்புக்துட்டி சாஸ்திரி:—உங்கள் பிள்ளைகள் மகா உத்தமர்களென்று தெரிகிறது. பாவபுண்ணியங்களுக்குப் பயந்தவர்கள் பெண்வீட்டுக்காரர்களைக் கொள்ளையடிக்கமாட்டார்கள். வரதக்ஷிணை வேண்டாமென்ற ஒரு வார்த்தையே உங்களுடைய பிள்ளைகளின் யோக்கியதாம்சங்களுக்குப் போதுமானது. எந்த ஆபீஸில் உத்தியோகமா யிருக்கிறார்கள்?

சுப்புசாஸ்திரி:—பம்பாயில் எங்கோ “நவீன அழதுசாலை”யில் உத்தியோகமாம்.

அப்புக்குட்டி சாஸ்திரிகளுக்கு மிக்க சந்தோஷமாய்விட்டது. அவருக்கு மூன்று பெண்கள். வெகு தயாளுவானதால் வீட்டுச்செலவுகள் அதிகம். சொத்து சேர்ப்பதற்கு ஒன்றும் மிஞ்சவில்லை. ஆயிரம் ரூபாய்க்கு நிலமும் ஒரு ஓட்டுவீடும் உண்டு. மூத்த பெண் சேஷிக்கு 13-வயது ஆகிவிட்டது. “இன்றைக்கோ நாளைக்கோ என்றிருக்கிறாள்.” இளைய பெண் பாரிஜாதத்துக்கு 11-வயதாகிறது. கடைசிப்பெண் மீனாக்ஷிக்கு வயது 9- நடந்துகொண்டிருக்கிறது. மூன்று பெண்களையும் சுப்பு சாஸ்திரியின் மூன்று குமாரர்களுக்கும் பேசி முடித்துவிட்டார். விவாகத்திற்கு நாளும் பார்த்தாய்விட்டது. வரதக்ஷிணையில்லாதது எவ்வளவோ அதிர்ஷ்டம்!

ஃ

சொக்காபுரம் கிராமத்தாருக்கு இந்த சங்கதிகள் பெரும் வியப்பைக் கொடுத்தன. எந்த ஏமாந்த மிருக ஜன்மம் வரதக்ஷிணை யில்லாமல் மூன்று பெண்களையும் கொள்ளத் துணிந்ததோ என்று மூக்குமேல் விரலை வைத்தனர். “அப்புக்குட்டி சாஸ்திரிகளின் சமர்த்தே சமர்த்து; எவ்வளவு ரகசியமாகப் பெரிய இடத்தில்—அதிலும் நூறு ரூபாய் உத்தியோகமுள்ளவர்களுக்கு ஏற்பாடு செய்துவிட்டார்” என்று பேசிக்கொண்ட

தனக்கு வரவேண்டிய ஒன்றை வாய்திறந்து கேட்கவும் கூடாது; கேளாவிட்டாலோ வராது என்ற நிலையில் என்செய்வது?

னர். விவாகத்திற்கு மாப்பிள்ளைகள் மூவரும் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் ஏதாவது கால் கை கோணிப் போய் இருந்தார்களா? சுப்புசாஸ்திரி இந்த ஐம்பத்தி ஆருவது வயதில் கூட மன்மதனைப்போல் சிவப்பாய் எந்த நரை ரோமமுமில்லாமல் 35-வயது மனிதர்போல் பரமசுந்தர புருஷராகத் தோற்றுகிறாரென்றால், அவர் பெற்ற பிள்ளைகளின் அழகுக்குக் கேட்கவும் வேண்டுமோ? வைரக் கடுக்கன்களும், வைர மோதிரங்களுமாய் விளங்கினார்கள். அப்புக்குட்டி சாஸ்திரிகளின் அதிர்ஷ்டத்தைப் பார்த்து எத்தனையோ பேருக்குப் பொருமையும் உண்டாயிற்று. நமக்கு இந்த இடம் தெரிந்திருந்தால் நமது பெண்ணைக் கொடுத்திருக்கலாமே என்று பலர் எண்ணி எக்கமுற்றனர். விவாகமும் வெகு நன்ராய் நிறைவேறிற்று. பெண்கள் பெரிய மனுஷிகளானபிறகு அழைத்துச் செல்வதாகக் கூறி மாப்பிள்ளைகள் மூவரும் தங்களின் தந்தையோடு பம்பாய்க்குச் சென்றனர்.

ஃ

சுப்பு சாஸ்திரிகள் பம்பாய்க்கு வந்த இரண்டாம்நாள் "நவீன அழகு சாலை"க்கு விஜயம்செய்தார். தமது குமாரர்கள் செய்கிற ஆயுத உத்தியோகத்தையும் தூர இருந்து பார்த்தார். பெரிய பங்களாவில் மூன்று அறைகள் கூடியதாய் அநேக நாற்காலிகளும் நிலைக்கண்ணாடிகளுமாய் சோபித்தது. சாஸ்திரிகள் வியப்பும் கோபமுமாய் ஆத்திரத்துடன், "அட சண்டாளா இது என்ன பிழைப்பு?" என்று கூறினார். அதற்கு மூத்த குமாரனான சாம்பசிவம், "அப்பா என்மீது கோபித்துக்கொள்ள வேண்டாம்; நாம் பூர்வீகமான வைதிகத்தை விட்டுவிட்டு ஆங்கிலக் கல்விபடிக்கத் தொடங்கிய தோஷம் இது. பி. ஏ. படிப்பு முடிந்து இரண்டு வருஷமாய் நான் போட்ட மனுக்களுக்குக் கணக்கேயில்லை. 25-ரூபாய் உத்தியோகம் கூடக் கிடைக்கவில்லை. பம்பாயிலாவது பார்ப்போமென்று இங்கு என் தம்பிகளுடன் வந்தேன். இங்கும் எந்தவேலையும் காலியில்லை. எனக்கே மனம் வெறுத்துப்போயிற்று. பசியும் வறுமையும் தாளக்கூடவில்லை. நிலங்களை யெல்லாம் விற்றுப் படித்த படிப்புக்கு ஜீவனம் கிடைக்கவில்லை. ஒரு தினம் நானும் என் தம்பிகளும் க்ஷவரம் செய்துகொள்ளப் போன போது, அங்கு நாவிதர்களுக்குக் கிடைக்கும் ஏராளமான வருமானத்தைக் காணவும் எனக்குப் புதிய யோசனையுண்டாயிற்று, ஆறுமாத காலமாக நாவிதர்களிடத்தில் நாங்கள் மூவரும் எந்த சம்பளமுமில்லாமல் வேலையை நன்ராகக் கற்றுக்கொண்டோம். எங்கள் வேலையில் வரும் பணத்தில் அவர்கள் பாதியை எடுத்துக்கொள்வார்கள். தொழிலில் கேவலமில்லை. எந்தத் தொழிலும் தொழிலேதான். யாசகம் செய்கிற தொழில்தான் ஈனமே தவிர, உழைத்துச் சம்பாதிக்கிற எத்தொழிலும் கௌரவமுள்ளதேதான். ஆனதால், சில பெரிய மனிதர்களிடம் சென்று நான் வித்தியாபட்டம் பெற்ற பரிதாபக் கதைகளைத் தெரிவித்து அவர்களிடம் கடன் வாங்கி, மேல்நாட்டு நாகரீகமுறையாய் ஸ்நான

வயிறு எரிந்து சொல்லும் வார்த்தைகள் மற்றவர்களுக்குச் சிரிப்பாகவும் பரிகாசமாகவும் இருக்கின்றன. சொல்லுகிறவனின் கருத்து அதைக் கேட்போரின் மனதில் நியாயம்தானென்று தைப்பதுமில்லை. சிரித்துக்கொண்டே மெதுவாக அந்தப் பரிதாப வார்த்தையை நழுவ விட்டு விட்டு வேறு சங்கதியைப் பேச ஆரம்பித்துக்கொள்கிறார்கள்.

அறை முதலிய சௌகரியங்களுடன் இந்த "நவீன அழகுசாலை"யை ஏற்படுத்தினேன். நானும் தம்பிகளும் உயர்தரமான க்ஷவரங்கள் செய்யும் முதல் வகுப்பில் இருந்து தொழில் செய்கிறோம். இரண்டாம் வகுப்புக்கு வேறு ஆட்களைச் சம்பளத்திற்கு ஏற்படுத்தியிருக்கிறோம். தினம் 150-பேர்களுக்குக் குறையாமல் க்ஷவரம் செய்துகொள்ளவும், புது நாகரீகமுறையில் மயிர் கத்தரித்துக்கொள்ளவும் வருகிறார்கள். க்ஷவரம் ஆனதும் ஸ்நானம் செய்வதற்கு வேறு அறையும் நவீன சௌகரியங்களுடன் அமைத்திருக்கிறோம். அதற்குத் தனியாக ஒரு அணா கொடுக்க வேண்டும். இவ்விதமே பலவித க்ஷவரங்களுக்கும் தனித்தனியாகப் பிரத்தியேக சார்ஜ் உண்டு. குறைந்தபக்ஷம் எப்படிப் பார்த்தாலும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 800-வரையில் தாராளமாகக் கிடைக்கும். அதில் கட்டிட வாடகை, சிப்பந்திகளின் சம்பளம், சோப் சென்ட் வாசனைகள் முதலிய சாமான்களின் செலவுகளெல்லாம் சேர்ந்து 270-ரூபாயில் அடங்கும். 20-ரூபாய் தர்மத்துக்காகத் தனியே எடுத்து வைத்துவிடுகிறோம். எல்லாச் செலவுகளும் போக எனக்கும் என் இருதம்பிகளுக்கும் மாதம் 170-ரூபாய்களுக்குக் குறைவில்லாமல் வருகிறது. தெய்வபக்தியுடன் எங்கள் தொழிலைச் செய்கிறோம். மாமிசம் விற்பவனொருவன் ஞானியாக இருந்து தன்னிடம் வந்த ஒரு முனிவரை "அந்தப் பெண் அனுப்பி வந்தீரா" என்று கேட்டதாக நாம் வாசிக்கவில்லையா? அந்தப் பெண் இந்த முனிவரைப்பார்த்து "கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா?" என்று கூறியதாகவும் பழமொழி யிருக்கிறதன்றோ? தொழிலில் எவ்வித கேவலமுமில்லை. பகவத் பக்தியையும் தர்மகுணங்களையும் மறவாமல் சத்திய மார்க்கத்தில் நடந்தால் எத்தொழிலும் மேன்மையுள்ளதே. பூர்வீக வைதீகத் தொழிலும்போய், உத்தியோகமும்கிடைக்காத நிலையில். பசியால் சாவதைவிட இது மேலென்று கொண்டேன். இந்த உத்தியோகத்தில் மாதம் 170-ரூபாய் வருமானமானால் இது கௌரவமுள்ளதுதான். நாங்கள் தினமும் ஸ்நானம் செய்த பிறகு வைதீகமாய் உண்ணுகிறோம். தந்தாய். கோபம்வேண்டாம்" என்று யாவும் தெரிவித்தான். சுப்புசாஸ்திரிகள் பதில் சொல்லவேயில்லை. ஐயோ! தெய்வமே என்று திகைத்து நின்றார்.

ஃ

வருஷங்கள் நான்கு ஆயின. "நவீன அழகுசாலை" வெகு பிரபலமாய்விட்டது. க்ஷவரம் ஆனதும் ஸ்நானம்; ஸ்நானம் ஆனதும் பசி களைப்பு தீர பிராமணர்களால் அமைக்கப்பட்ட காபிஹோட்டலுடன் கூடியதாய் விர்த்தியாகிவிட்டது. மூவரின் மனைவிகளும் பெரிய மனுஷிகளாகி சாந்தி நடந்து பம்பாய்க்குவந்து பெரிய மாடிவீட்டில் சுகமாக இருக்கிறார்கள். சுப்பு சாஸ்திரிகளும் தமது பத்தினி சகிதம் பம்பாயிலேயே நிலைத்துவிட்டார். "நவீன அழகுசாலை"யில் நடக்கிற வேலைகள் என்னவென்று சாஸ்திரிகளின் மனைவிக்காவது, அவருடைய மூன்று மருகிகளுக்காவது தெரியவே தெரியாது. ஃ

மாற்றாந்தாய் தன் மூத்தாளின் மக்களுக்கு வயிறு நிறையச் சாதம் போடாவிடினும், பசி பசி என்ற வார்த்தையை மட்டும் அவர்கள் சொல்லக் கூடாதாம். அது தன் கணவனின் முன்பு தன்னைத் தாழ்த்தும் இழிசொல்லாகுமாம்.

மேலும் மூன்று வருஷங்கள் சென்றன. இப்போது "நவீன அழகு சாலை"யின் புரோப்ரைட்டர் ஸ்ரீமான் எஸ். சாம்பசிவம் பி. ஏ. அவர்கள் பம்பாய் சட்டசபையில் ஒரு அங்கத்தினராக இருக்கிறாரென்றால்-அதற்குமேல் நாம் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. ஆனால், ஒரு சிறு குறிப்புமட்டும் இங்கு தேவை. சாம்பசிவனாரும் அவரது இரு தம்பிகளும் தங்களின் உத்தியோகத்திற்கு வேறு சம்பள ஆட்களை நியமித்துவிட்டு, தலைமை நிர்வாகத்தைமட்டும் இப்பொழுது மேல் பார்த்துக்கொண்டு வருகிறார்களென்பதே!

"பழயன கழிதலும்
புதியன புகுதலும்
வழுவல;—
காலவகையினானே"

என்று "நன்னூல்" ஆசிரியர் பவணந்திமுனிவர் கூறிய வாக்குப்படி நடந்துகொண்ட சாம்பசிவனார் பி. ஏ. அவர்களின்மீது நாம் குற்றங்கூற இடமும் உண்டோ? "பசி வந்திடிற் பத்தும் பறந்துபோம்" அன்றோ?

நண்பனின் மீது கோபம்.

ஒருவர் தனது நண்பனின்மீது சிறுபிழை யொன்றைக் கண்டுவிட்டு அவனைப்பற்றி மிகு கேவலமாய்த் தூஷித்து வெளியூர் நண்பருக்கு எழுதுகிறார். வெளியூர் நண்பரோ, இக்கடிதம் எழுதியவர் நேரில் வெகு சாதுவாக நடந்துகொண்டிருந்து, கடிதத்தில் இவ்விதம் நெருப்புமழை கொட்டியிருக்கிறாரே யென்று அதனாலேயே அவரது குணப்போக்கை நிதானித்துக்கொண்டு, இனி ஒருகாலம் தம்மைப் பற்றியும் இன்னொருவருக்கு இவ்விதமே தூஷித்துக் கடிதம் எழுதக்கூடுமென்று நீள யோசித்தவராகி விடுகிறார். அதுமுதல் தம்மைத் தூஷிக்காதிருக்கும்படியாகச் சற்று விலகித் தூர ஒதுங்கிக்கொள்கிறார். இது தன் நண்பனைத் தூஷித்து வெளியூர் நண்பர்களுக்கு எழுதப்போனதின் விளைவாகும். அக்கடிதம் வெளியூர் நண்பரை விழித்துக்கொண்டு ஜாக்கிரதைப்படவைத்து விடுகிறது.

தென்தேசத்துத் தற்கால சில்லரைத் தெய்வங்கள்:—குட்டிச்சாத்தான், கறுப்பண்ணன், கடம்பன், இடும்பன், மொண்டிக்கறுப்பன், சண்டிக்கறுப்பன், மதுரைவீரன், முனீசுவரன், மொட்டையாண்டி, நயனார், இருளண்ணன், மருளண்ணன், அண்ணன்மார், மன்னார்சாமி, ஐயனார், காளி, கூளி, காட்டேரி, கன்னியம்மாள், பொன்னியம்மாள், நாரி, மாரி, பிடாரி, அங்காளம்மாள், கொங்காளம்மாள், கோனியம்மாள், சின்னாயி, பெரியாயி, முதலியனவாம்.

பழமொழிக் குறிப்புகள்

4. மக்கள்.

(23-ம் பக்கத் தொடர்ச்சி.)

326. "மாதா செய்தது மக்களுக்கு"

தாய் சுற்றந்தழுவியவளாய், வீட்டிலுள்ள அனைவரையும் அனுசரித்து நின்று சற்குணாலயமாய் நடந்துவந்திருப்பின், அவளிடம் தோன்றிய மக்களுக்கும் அந்த நற்குணங்களே படிந்திருக்கும். தாய் சாமர்த்தியவதியாகி, எதிலும் அதிகம்பட்டுக்கொள்ளாமல் எல்லோரிடத்திலுமே நல்ல பெண்ணாகப் பேரெடுத்திருந்தால், அந்த சமர்த்தான குணங்கள் அவளுடைய குழந்தைகளுக்கும் உண்டாகியிருக்கும். எங்கும் நற்பெயர் பெறுகிற பெண்களில் இருவகையுண்டு. ஒன்று எதும் அறியாத பேதையாய் சாதுவாக நடந்துகொண்டு தனது உத்தம குணங்களினாலேயே எல்லோருக்கும் பிரியமுள்ளவளாவதாம். மற்றொன்றோ கபடகுணத்துடன் எவரெவருக்கு எங்கெந்தப்படி நடக்கவேண்டுமோ அதற்குத் தகுந்தபடி யெல்லாம் தாளம்கொட்டி எவர் மனமும் நோகாதபடி அவரவருக்கிசைய நடந்துகொண்டு. பொதுவில் யாவருக்கும் நல்ல மனுஷியாகத் தன்னைத் தோற்றுவித்துக் கொள்வதாம். ஒருவர்மீது உண்மையான அன்பை ஒரு காலத்தில் காட்டுவதும், பிறகு அந்த அன்பை அடியுடன் மறந்துவிட்டு, மேலுக்கு அன்புடனிருப்பதாகவே நடித்துச்சென்று பசப்புவது முதலாகிய சமர்த்துகளும் இரண்டாவது சொன்ன சாமர்த்தியத்தில் அடங்கும். இவ்வளவு தந்திர சமர்த்துடன் எங்கும் புகழப்பெற்று நற்பெயரையடையும் பெண்ணரசிகளுக்குப் பிறக்கிற குழந்தைகள் தாயாரின் சமர்த்தெல்லாம் திரண்டு பெரிய தந்திரக்குட்டிகளாகவே இருக்கும். தாய் தன்னைச் சேர்ந்தவர்களைமட்டும் தழுவிக்கொண்டு மற்றவர்களைத் தூர உறவென்றும், அன்னியர்களென்றும் பாவிப்பதாயிருந்தால், அவளுடைய பிள்ளைகளுக்கும் அவ்வித புத்தியே உண்டாகியிருக்கும். தாய் எங்கும் நற்பெயரடைந்தது போலவே, இந்தப் பிள்ளைகளும் அவரவர்களுக்குத் தகுந்தபடி ஸமத்காரமாய் நடந்துகொண்டு வெகு நல்லபெயரைப் பெற்றுக்கொள்வர். வெளிக்கு நற்பெயரேயாயினும், உள்ளுக்குக் கபடங்களும், தந்திரங்களும், ஆத்திரப்பொறாமைகளும்கூடி நாற்றமெடுத்துக்கொண்டிருக்கும். சமர்த்தான தாய்மாரது

எளிதான உன் தாய் மொழியில் கடவுளைத் துதி. உன் தாய் மொழியில் உன் பெற்றோரையும் உற்றாரையும் தழுவு. உன் தாய் மொழியில் உனது ஊரார் நாட்டாரோடு பழகு. உன் தாய்க்கேற்ற நடையினால் தாயை மகிழச் செய். அதனால் உன் மேன்மை குறைவதாக எண்ணுவையோ? உன் மனைவி மக்களையும் உன் தாய் மொழியின் வெளிச்சத்திலே நடத்து. அதுவே சிறந்த வாழ்க்கை. ஸ்ரீ ப. கா. ஈஸிம்சா.

குழந்தைகளின் குணங்கள் இவ்வாருக, இனி, பேதமையும் சாதுவுமான பெண்களுடைய குழந்தைகளோ தங்களின் தாயைப்போன்றே கள்ளங்கபடு அற்றவர்களாய் நெஞ்சில் அழுக்கில்லாமல் சாந்தமாய் நடந்துகொள்வோராயிருப்பார்கள். தாய் தன்னைச் சேர்ந்தோர்களையும், கணவனையும் அவனுக்கு வேண்டியவர்களையும் எதிர்த்து நின்றவளாயிருந்தால், அவளது மக்களும் பிற்காலத்தில் அன்னியோன்னிய சிந்தையற்றவர்களாய் வேற்று மனத்தினராகவே இருப்பார்கள். ஒரு மாற்ருந்தாயின் குழந்தைகள் மூத்த தாரத்துக் குழந்தைகளுடன் சேர்ந்து ஒற்றுமையுடன் இருப்பது அருமை. ஏனெனில், அந்த மாற்ருந்தாய் மூத்த தாரத்துக் குழந்தைகளைப் பகைத்து நின்றவளாதலால், அந்தப்புத்தியே அவளது குழந்தைகளுக்கும் தோன்றிவிடுகிறது. தாய் வாய்ப்பட்டியாயிருந்தால் அவளிடமிருந்து அவள் குழந்தைகளும் வெகு சுளுவில்தானே கற்றுக்கொள்கின்றன. குழந்தைகள் கெட்ட வார்த்தைகளைப் பயின்றுகொள்வது தங்களின் தாய்மாரிடமிருந்துதான். தாயும் சமர்த்தாய், அவ்விதமே தந்தையும் மிகுந்த தந்திரசாலியாய் இருந்துவிட்டால் இவ்விருவரும் சேர்ந்து உற்பத்திசெய்கிற பிள்ளைகளும் அதற்குத் தக்கபடி பெரிய தந்திர ஜித்துகளாகவே இருப்பார்கள். இவ்விதமே, உத்தமகுணங்களால் அலங்கரிக்கப்பட்டோர்க்கு உதிக்குங் குழந்தைகளும் அந்த உத்தம விசேஷ நலன் கொண்டவர்களாய்ப் பரிமளிப்பார்கள். தாய் தந்தையருடைய குலத்துக்கும் குணத்திற்கும் தக்கபடியே மக்களுடைய குணஅமைப்பும் எற்படும். தாய் எந்தவழியில் தன் மக்களைப் பயிற்றுவித்துச் செல்லுகிருளோ, அதற்கேற்றபடியே மக்களும் பிற்காலத்தில் விளங்குவார்கள். தாயின் நடத்தைகளைக் கொண்டும், அவள் வளர்க்கும் முறைகளைக்கொண்டும் மக்களின் குணங்களை அளவெடுத்துக்கொள்ளலாம். "மாதா செய்தது மக்களுக்கு" என்ற பழமொழி முற்றிலும் அநுபவ சாரமேயாகும். (தொடரும்)

நீதிமொழிகள்:—

1. ஞானமுள்ளவன் பயந்து தீமைக்கு விலகுகிருன்; மதியீனனே மூர்க்கங்கொண்டு துணிகரமாயிருக்கிருன்.

2. முன்கோபி மதிகேட்டைச்செய்வான்; துர்ச்சிந்தனைக்காரன் வெறுக்கப்படுவான்.

3. பேதையர் புத்தியீனத்தைச் சுதந்தரிக்கிருர்கள்; விவேகிகளோ அறிவினுல் முடிசூட்டப் படுகிருர்கள்.

4. தீயோர் நல்லோருக்கு முன்பாகவும், துன்மார்க்கர் நீதிமான்களுடைய வாசற்படிகளிலும் குனிவதுண்டு.

5. தரித்திரன் தனக்கடுத்தவனுலும் பகைக்கப்படுகிருன்; ஐசுவரியவானுக்கோ அநேக சிநேகிதருண்டு.

6. பிறனை அவமதிக்கிறவன் பாவஞ்செய்கிருன்; தரித்திரனுக்கு இரங்குகிறவனே பாக்கியமடைகிருன்.

7. ஞானிகளின் உதடுகள் அறிவை இறைக்கும்; மூடரின் இருதயமோ அப்படியல்ல.

8. புத்திமானுடைய மனம் அறிவைத்தேடும்; மூடரின் வாயோ மதியீனத்தை மேயும்.

(S. K. A.)

கவிதா  விலாஸம்

இறைவனின் விளையாட்டு.

நின்னையே இரவு பகல் நினைந்துருகும்
　　அடியாரை நெடிய காலம்
பன்னரிய இடுக்கண்கள் படவிடுத்துச்
　　சிரிக்கின்றாய்! பாவமே செய்
கன்னெஞ்சர் தமைப்பெரிதும் களித்துழலச்
　　செய்திடவே கருதுகின்றாய்!
என்னையே கருணைநிறை இறைவ! நீ
　　விளையாட்டிங்(கு) இயற்றுமாறே! (1)

கடவுளுக்கும் இந்நாளிற் கண்ணில்லை—
　　எனப் பழிப்பர் கயவர் உன்னை:
மடமொழியாம் அது கேட்டு மனஉறுதி
　　குன்றி சிலர் மயங்குகின்றார்;
உடல் இதனை உதவிய நீ உவகையிலும்
　　கவலையிலும் உழல வைப்பின்,
திடநெஞ்சம் இல்லாதார் திருவருளில்
　　பெரும் ஐயம் சேர்கின்றாரே! (2)

வினைப்பயனைக் கழித்திட நீ விளைக்கின்ற
　　இடுக்கண்கள் மேவுங் காலம்
உனைப் பழிப்பார்; மற்றவர்தம் உவகை கண்டு
　　கவலை மிக உடையராவர்:
அனையவர்கள் ஆண்டவ! நின் அருள்
　　விளையாட்டதன் இயல்பை அறிவர்கொல்லோ?
கனைகடலிற் பெரிய அருட்கடலே! நின்
　　பெருங் கருணை கருதுவாரோ? (3)

தகப்பனார்தான் எதிலும்படாத தந்திரசாலியென்றால், அவரது குமாரன் அவரைவிட மிஞ்சிவிடுகிறான். தந்திரங்கள் அதிகரிக்குந்தோறும் பெண் குழந்தைகளே மிகுதியாய்ப் பிறக்கின்றனவாம்!

வெறுத்திடினும் தாயன்றி வேறு புகல்
சேய்க்குண்டோ ? விளைந்த புண்ணை
அறுத்திடினும் மருத்துவனை அல்லல் படும்
பிணியாளன் அகற்றுவானோ ?
மறுத்து விலக்கிடினும் தன் மணவாளனன்றி
புகல் மனைவிக்குண்டோ ?
ஒறுத்திடினும் மெய்யன்பர் உயர் இறைவன்
துணையன்றி உன்னுவாரோ ? (4)

வன்பிணியே ! வந்தாயோ ? வருக !
வினைப்பயன் கழித்து மறைந்துபோவாய் !
துன்பமே! தொடர்வாயோ? தூய
மன உறுதியினில் சோர்வு கொள்ளேன் !
இன்பமே! எய்தினையோ? என் அறிவை
நீ மயக்க இயலுமேயோ?
அன்புருவாம் ஆண்டவனின் அருள்நாடும்
அடியனினி அஞ்சுவேனோ ? (5)

உன்னுடைமையாம் உடலை உன் மனத்தின்
படி செய்யும் உரிமை தன்னால்
இன்னல்களை விளைவிப்பின் யான் கலங்கி
நிற்பேனோ? இறைவ! நின்றன்
பன்னரிய விளையாட்டின் பண்புணர்ந்து
சிரிக்கின்றேன்! பரம!" இங்கு
என் செயல்கள் எவையும் இலை "—
எனும் அன்பர் துன்பத்தைஎன்றுங் காணார். (6)

"வேதனை செய் துன்பங்கள் விமலன் நமைத்
தூய்மையுற விளைத்திடும் பல்
சோதனைகள்"— எனத் துணிவோர் துயருக்குத்
துயர் செய்வோர்; தூய நெஞ்சு
நாதனையே துணைவன் என நம்பியிருந்தால்
என்றும் நடுக்கமில்லை ;
ஆதரிக்கும் துணை நமக்கு ஆண்டவனை
அன்றி இலை; அறிந்திடீரே ! (7)

ஆரியூர் வ. பத்மநாப பிள்ளை.

"தலையைக் காணோமாம்!"

தென் தேயத்தில் ஒரு கிராமத்தில் ஒரு வேளாளர் இருந்தார். அவருக்கு ஒரு மனைவியும் ஒரு குமாரனும் உண்டு. குமாரனுக்கு விவாகம் ஆகி மனைவி வீட்டுக்கு வந்துவிட்டாள். இவருடைய குடும்பத்தில் நடந்துவரும் வியாஜ்ய விஷயமாக தந்தையும் குமாரனும் சென்னப்பட்டணத்தில் ஒரு மாதம்வரையும் இருக்கும்படி நேரிட்டது. மகனுடைய மனைவி பூரண கர்ப்பவதியாதலால் சகலரும் குடும்ப சமேதராய்ப் புறப்படக்கூடவில்லை. ஆதலால், மாமியார் மருமகளும் ஊரிலேயே இருந்தார்கள். குறிப்பிட்டபடி தக்க காலத்தில் பிதாவும் புத்திரனும் சென்னைபோய்ச் சேர்ந்தனர்.

⁂

மகன் கொடிய வைதீகம். ஆசார அநுஷ்டானங்களை மிகக் கண்டிப்பாக மேற்கொண்டொழுகுபவர். வீட்டில் அவருடைய பூஜைக்கென்று ஒரு தனியான இடமுண்டு. அதற்கென்று சில பாத்திரங்களும் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும். இவர்கள் பட்டணம் செல்லுகையில் தவலை, குடம், செம்பு முதலியவைகளேயல்லாமல், மேற்கண்ட பாத்திரங்களையும் தங்களுடன் கொண்டுபோயிருந்தனர். மேற்குறித்த சாமான்களை மற்றவைகளிலிருந்து பிரித்துக் காட்டவேண்டி 'பையன் தவலை', 'பையன் குடம்' என்று வழங்குவது வழக்கம்.

⁂

மாமி மருமகளிருவரில் ஒருவர்க்கேனும் எழுதப்படிக்கத் தெரியாது. அதனால் சென்னையிலிருந்து பெரிய பிள்ளை இவர்களுடைய அயல்வீட்டாராகிய சிநேகிதருக்குக் கடிதம் எழுதினால் அதில்கண்ட சங்கதிகளை இவர்களுக்கு எடுத்துக் கூறும்படி சொல்லிவிட்டுப் போயிருந்தார். அந்தப்படியே. அவர்கள் பட்டணம் சென்றபிறகு, அவர்களுடைய சுக க்ஷேமத்தைத் தெரிவிக்கும்படி இரண்டு கடிதங்கள் வந்து, சிநேகிதர் மூலமாக விஷயங்களை அறிந்துகொண்டனர். மூன்றாவது காகிதத்தில், சின்னப்பிள்ளைக்குப் பட்டணம் ஊர் பிடிக்கவில்லையென்றும், அதனால் அவர் தலைவலி, ஜலதோஷம் இவைகளினால் சொற்பம் வருந்துகிறாரென்றும், வெளியில் போகக்

அச்சுக் கலைப்பு (2)

ெ	தி	ே	ப	ஞ	ப	ந
ம	ல	ன	ஜ	ா	ன	
ே	ஜீ	ஷ	ா	ஜி	ே	
ப	ப்	ர	ஷ	ஷ	ஒ	
ல	ா	ர்	ப	ஜி	ட	

காலஞ்சென்ற இந்தியத் தலைவர்களின் பெயர்களை அச்சுக் கோர்த்திருந்ததில் கை தவறி இடறி இவ்விதம் கலைந்துவிட்டன. இந்த எழுத்துகளை ஒன்றாய்ச் சேர்த்துக் கிரமப்படுத்தினால் ஆறு தலைவர்களின் பெயராகும். கண்டுபிடித்துத் தெரிக.

கூடவில்லை யென்றும், இவர்கள் வசித்துவரும் தெருவில் திருடர்பயம் அதிகமாயிருக்கிறதென்றும் கண்டிருந்தது. அதனால் ஸ்திரீகள் இருவரும் சற்று கலக்கமடைந்தனர். இவ்விதம் ஒருவாரம் கழிந்தது. (நம் கவனத்திற்குரிய) நான்காவது கடிதம் வந்தது.

ஃ

இவர்களுடைய அண்டைவீட்டுச் சிநேகிதர் கடிதத்தைக் கையில் வைத்துக்கொண்டு தலைவிரி கோலமாய் இவர்கள் வீட்டினுள் நுழைந்து, அப்பேதைப் பெண்களில் சிறியவளை நோக்கி "அடி பாவி! நீ முண்டையாகப் போனாயடி!! உன் மணவாளன் தலையைக் காணேமாம்! குடல்மட்டும் கட்டிலுக்குக் கீழே கிடந்ததாம்! காகிதம் வந்திருக்கிறது! ஐயோ! உன் தலை எழுத்து இப்படியா ஆயிற்று!" என்று சொன்னார். இவ்வளவு சொன்னால் போதாதா? அப்பெண் அழுதாள்! விழுந்தாள்! குய்யோ முறையோ எனக் கதறினாள். பெண்கள் கூடி ஒப்பாரிவைத்தழுதனர். உற்றார் உறவினர் எல்லாரும் வந்து துக்கம் கொண்டாடிச் சென்றனர். 14-வயதுள்ள கர்ப்பவதியை விதவைச் சடங்குகளுக்கு உட்படுத்தியாய் விட்டது. பாவம்! அப்பெண் பாயும் படுக்கையுமாகவே கிடந்தாள். சதா அழுகைதான்!

ஃ

பத்து பகல்கள் நகர்ந்தன. இவர்களுடைய வீட்டுவாயிலில் வந்து நின்ற வண்டியிலிருந்தும் இருவர் இறங்கி வீட்டிற்குட் சென்றனர். பெரியவரின் மனைவி அங்கு வந்தவர்களில் பாலியமுள்ளவரைக் கட்டிக்கொண்டு, "ஐயோ! மகனே! உன்னைக் காணக்கிடைத்ததா! நீ இறந்துவிட்டாய் என எண்ணி அழுதோமே! நீ எங்கிருந்தடா வந்துவிட்டாய்! எந்த உலகத்திலிருந்து தோன்றிவிட்டாய்! மறுபடியும் நான்பெற்ற பாக்கியத்தை எனக்குப் பார்க்கக் கொடுத்த தெய்வமே! கடவுளே! ஈசா! என்று இம்மாதிரி பிரலாபித்துக்கொண்டு படுக்கையிற் கிடந்த மருமகளான காமாட்சியைப் பார்த்து—" அடி காமாட்சி! குழந்தை சாகவில்லையடி! நமக்கு உயிர்ப்பிச்சை கொடுத்துவிட்டானடி! எழுந்திரடி! பாரடி! என்று கதறியழுதாள். காமாட்சி குபீரென எழுந்து, ஒரே ஓட்டமாக ஓடிவந்து தன் நாயகனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு ஒன்றும் சொல்ல வாயெழ மாட்டாதவளாய்க் கண்களில் தாரை தாரையாக நீரை வடித்துக்கொண்டு நின்றாள்.

ஃ

இச்சமயம் அண்டைவீட்டுக்காரரான சிநேகிதர் அங்குவந்து வீட்டுக்காரரான பெரியவரையும், அவர் குமாரனையும் கண்டு பிரமித்தவரானார். பெரியவருக்கு சிறிது நேரத்தில் எல்லா சங்கதியும் தெரிந்தது. தம் சிநேகிதரைத் தாம் எழுதிய கடிதம் கொண்டுவரும்படி வேண்டித் தருவித்துப் பார்த்துவிட்டுப் பின் வருமாறு கூறினார். "நான் இந்த விஷயத்துக்கு ஒருவரையும் நொந்துகொள்ளக் கூடாது. என்னையே நான் கடிந்து கொள்ளவும் முடியாது. என் கையெழுத்து சற்று கிறுக்கலாகத்தான் இருக்கும். அதற்கு நான் என்செய்வது? நான் வெளியூர்களுக்குச் சென்றிருந்தகாலையில, நம்முடைய க்ஷேம லாபங்களை வீட்டிலுள்ளவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டுக் கடிதம்

மேல்தளுக்குக்கே மதிப்பு. உண்மைக்கு மதிப்பில்லை. நல்ல சமையலுக்கே குற்றம் பேசுகிறது. உத்தமியின்மீதே சந்தேகம். யதார்த்தஸ்தனிடத்திலே தான் அருவருப்பு.

எழுதுகிறேன். இம்மூட ஸ்திரீகள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். நம்முடைய சிநேகிதர்களுக்குக் கடிதம் வரைந்து. அவர்களின் மூலமாகத்தான் நம்மனைவி மக்கள் நம்முடைய க்ஷேமத்தை அறியக்கூடியவர்களாயிருக்கிறார்கள். அங்ஙனம் நாம் நம் சிநேகிதர்களுக்கு லிகிதம் அனுப்ப, அவர்களுக்குப் பரிச்சயமில்லாத இரண்டொரு வார்த்தைகளுக்கு நமது கிறுக்கலான எழுத்தால் சரியானபடி அர்த்தம் செய்துகொள்ள முடியாமல் இவ்விதம் துக்கம் கொண்டாடச் செய்துவிடுகிறார்கள்! என் சிநேகிதர் மீது தப்பிதமில்லை. என் கிறுக்கு எழுத்துகள் அவருக்குச் சரியாக விளங்காததால் அவர்தான் என்ன செய்வார்? இதோ பாருங்கள்! நான் எழுதிய இக்கடிதத்திலே. குமாரனுடைய பூஜைக்கு உபயோகப்படுத்துகிற தவலையைத் திருடன் கொண்டு போய்விட்டான்; ஆனால் குடம் கட்டிலின்கீழே இருக்கிறது என்று பொருள்படும்படி, "பையன் தவலையைக் காணவில்லை, குடம் மட்டும் கட்டிலின்கீழ் இருக்கிறது" என்று எழுதியிருக்க, "பையன் தவலை" என்பதில் 'வ' தெளிவாகத் தெரியவில்லையாதலின், "தலை" என்றும், "குடம்" என்னும் வார்த்தையில் 'ம்' என்பது 'ல்' மாதிரித் தோன்றுகிறபடியால், "குடல்" என்றும் வியாக்கியானம் செய்துகொண்டு பையன் மாண்டுபோனதாகக் கருதி வெளியிட்டுவிட்டார்! அவர்பேரில் குற்றமில்லை. நம் மனைவியாவது மருமகளாவது எழுதப்படிக்கத் தெரிந்திருந்தால் இவ்வளவு சஞ்சலம் ஏற்பட்டிருக்காது. நாமும் அவர்களுக்கு நேராகவே கடிதமும் எழுதலாம். அக்கடிதங்களை அவர்கள் ஊன்றிப்படித்துப் பதில் லிகிதம் வரைந்தனுப்புவார்கள். அவர்கள் காகிதம் கணக்கு எழுதத் தெரியாத ஒரு குற்றத்தினால் இவ்வித தண்டனைக்குள்ளானார்கள். படிப்பில்லாதவர்களை மணந்துகொண்ட நமது மடத்தன்மையையும் கடிந்துகொள்ள வேண்டியதுதான்" என்று சொல்லி வருந்தினார். இவற்றைக் கேட்டபின் அயலார் யாவரும் சந்தோஷத்துடன் வெளிச்சென்றனர்.

ஃ

கல்வி கற்காத ஸ்திரீகளால் எவரும் இவ்விதத் துன்பத்திற்கு ஆளாவார் என்று போதிக்க நான் வந்தவனல்ல. கடிதம் எழுதப்படிக்கத் தெரியாமலிருக்கும் கஷ்டங்களில் மிகக் கொடியது இது ஒன்றாகும் என்பதை எனது அருமைச் சகோதரிகளுக்கு எடுத்துச் சொல்லவேண்டியவனாயிருக்கிறேன். இச்சிறிய சம்பவத்தைவிட விசேஷமாக நான் ஒன்றும் எடுத்துக் கூறவேண்டியதில்லை. இவ்வளவும் படிப்பின்மையால் பட்டபாடுதான்.

ஃ

பதினன்கு வயதேயுள்ள அந்த வாலிபப்பெண்ணை விதவையாக்கும்படி செய்த உத்தரவு அடங்கிய கடிதத்தையும் நீங்கள் கவனிக்கும்படி அடியில் குறிப்பிடுகிறேன்.

சென்னப்பட்டணம்
தேதி.

"உபயக்ஷேமம். திருடர்கள் உபத்திரவம் அதிகமென்று முன் கடிதத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

சூரியன் எப்பொழுதுமே பிரகாசித்தபடி யிருக்கிறான். இடையிலே மேகங்கள்தான் சூரியனை மறைத்து விடுகின்றன. அதுபோல், உழைப்பாளி எப்போதும் உண்மையுடன் வேலைசெய்தபடியே இருக்கிறான். குறைசொல்வோரால்தான் மற்றவர்கள் அவன் சரியாக வேலை செய்யவில்லை யென்று எண்ணத்தொடங்கி விடுகிறார்கள்.

நான் பயந்தபடி இன்று காரியம் நடந்துவிட்டது. பையனுக்குச் சரீர அசௌக்கியமாகையால் வீட்டிலேயே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். நான் மாத்திரம் வெளியே சென்றிருந்தேன். இரவு ஏழுமணிக்கு வீட்டிற்குத் திரும்பிவந்தேன். வந்து பார்க்கையில் நான் பயந்துவிட்டேன். பையன் தலையைக் காணவில்லை. ஆனால், முடம்மட்டும் கட்டிலின்கீழ் இருக்கிறது. இது விவரத்தை நீங்கள் பெண்பிள்ளைகளுக்குத் தெரியப்படுத்திப் பீதியடையச் செய்யவேண்டாம். கேஸ் நமக்கு அனுகூலமாகிவிடும். இன்னும் ஒருவாரத்தில் வந்துவிடுவேன். கையொப்பம்.

ஃ

கேஸ் நடத்துதற்குச் சென்றிருந்த பெரியவரின் காகிதமும், வழ வழ என்றுதான் எழுதப்பட்டிருக்கிறது எனச் சொல்வார்களாயினும், பழக்கமுள்ளவர்கள் விஷயங்களை எளிதில் அறிந்துகொள்ளலாம். எல்லாத் தீங்குகளுக்கும் பெண்களுக்குப் படிப்பின்மையே காரணம். ஆதலினல், உங்கள் பெண்களுக்கு எவ்வாறேனும் கல்வி கற்பித்து அறிவுக்கண் பெறச் செய்வீர்களாக.

படிக்கவேண்டிய நேரத்தில் வீட்டுவேலைகளைச் செய்யும்படி ஹிம்ஸித்துப் படிப்பைக் கெடுக்கவேண்டாம். முதலில் படிப்பு. பிறகே இரண்டாவதாக வீட்டுவேலை. இரண்டும் முக்கியமே எனினும் படிப்பை முதலில் வைத்துக் கௌரவப்படுத்துங்கள்.

நாளுக்கு நாள்
நகர்ந்ததுகாணம்மானை.

பழங்காலத்திய பத்திரிகைகளில் ஒருவரைக் குறிப்பிடுகையில் பெயருக்குமுன் மிஸ்டர் என்ற பதம் மரியாதையாக வழங்கிவந்தது. 1904-ம் வருஷத்தில் ஸ்ரீ ஸ்ரீயுத ஸ்ரீஜத் என்று மாற்றப்பட்டது. பிராமணரல்லாதாரின் கிளர்ச்சி கிளம்பியவுடன் திருவாளர்—திருமிகு, உயர்திருமிகு என்ற பதங்கள் தோன்றின. பகிஷ்காரம் - என்ற பதத்திற்குப் பதிலாக வர்ஜனம் என்ற பதம் பழயநாளில் ஊக்கதுடன் உபயோகிக்கப்பட்டது. இப்போது அந்தப் பதப்பிரயோகமும் காணோம்!

அறம் பொருள் இன்பம் வீடும் தருவது எது? கல்வியே உற்ற துணையாகும். நீ குழந்தையாயிருக்கையில் முதல் முதல் சொன்ன "அம்மா" என்ற சொல்லே மந்திரமாகும். உனது தாய் எவள்? உன்னைப் பெற்றவள் யார்? உன்னை வளர்த்தவள் யார்? உனக்கு அறிவும் உணவுந் தந்தவள் யார்? உன் மாதா. தமிழ் மாதுதான் பாரத தேவி. தமிழ் வாழ்க!வாழ்கவே!! ஸ்ரீ ப. கா. ஈஸிம்ஸா.



1. நவீன நாகரீகப் பித்து:—கல்வி கற்று பெண்மணிகள் மூலையில் குந்தியிருந்து, குடும்ப விஷயங்களைக் கவனிப்பது மானக்குறைவு; உத்தியோகத்தில் அமர்ந்து நாலுதுட்டு சம்பாதித்து வாழ்வதுதான் கௌரவம்-என்று பட்டம்பெற்ற நாரீமணியொருத்தி கூறுகிறாள்.

2. பெண்களின் விரதம்;—தலை போவதாயினும் ஒருமுறை வாங்கிய தினுசை மறுமுறை வாங்கலாகாது என்ற விரதத்தை நம் பெண்மணிகள் விடாமல் அனுஷ்டித்துவருகிறார்கள். அதற்கேற்ப நாடோறும் புது புது தினுசான சேலைகளும், நகைகளும் புறப்பட்டவண்ண மிருக்கின்றன.

3. சிலர் போக்கு:—தனிமையில் சந்திக்கும்போதெல்லாம் அன்போடும் நன்றியோடும் பேசும் சிலர் கூட்டங்களில் சந்திக்கும்போதுமட்டும் முன்பின் அறியாதவர்கள்போல் நடந்துகொள்ளுகிறார்கள். அப்போது பேசினால் தமது கௌரவம் குறைந்துபோகுமென்ற எண்ணம்போலும்!

4. முடிகிறதா?—இரண்டு மாதத்துக் கொருமுறை ஒரு புதுப் புடவை வாங்கி விடலாம். ஆனால், இரண்டுமாதத்துக் கொருமுறை ஒரு புது நகை வாங்க முடிகிறதா?

5. இருக்கிறதா?—அந்த உயர்ந்த ஸ்தானத்தை அடைய விரும்புவது சரிதான். ஆனால், அதற்கேற்ற யோக்கியதையும் படிப்பும் இருக்கிறதா?

6. மாறுகிறதா?—என்ன தான் உயர்ந்த அந்தஸ்தை அடையினும் ஒருவனுடைய இயற்கையான யோக்கியதைக்குறைவு மாறுகிறதா?

7. தெரியாததைத் தெரிந்தவர்கள் எடுத்துக் கூறினால் அதைக் கவனியாமலே அவர்களுக்கு முன்னதாகவே தாங்கள் அந்த விஷயத்தை அறிந்திருப்பவர்கள்போல் காண்பித்துக் கொள்கிறார்கள்.

8. கொடுத்த கடனைக் கேட்கப் போனால் சீறிவிழுந்து வசை மொழிகளைச் சரமாரியாய்ப் பொழிகிறார்கள். இது கொடுத்த பணத்துக்கு வட்டி!

9. எழ்மை நிலையில் இருந்த போது எட்டிப்பாராத உறவினர் இப்போது உயர் நிலையை அடைந்ததும் உறவு கொண்டாட வருகின்றனர். இவர்கள் சகவாசமே இனி வேண்டாமென ஒதுக்கித் தள்ளிவிட மனம் துணிகிறதில்லை. மிக வஞ்சகர்களாயினும் அவர்களும் ஒரு சமயத்துக்கு வேண்டியவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

10. வரும்போதே எதையாகிலும் நினைத்துக்கொண்டு வருவது; வந்தவுடன் வீட்டிலுள்ள பெண்கள் மீது சீறிச் சினந்து விழுவது. இது சில புருடர் வழக்கம்.

11. கணவனுக்குப் பிடித்த குழம்போ, பதார்த்தமோ, பொருளோ மனைவிக்குப் பிடிப்பதில்லை. மனைவிக்

ஒருவனுக்கு சுகந்த வாஸனையாகத் தோற்றும் கை வேறொருவனுக்கு வெறுப்பாயும் நாற்றமாயும் படலாம்.

குப் பிடித்தது கணவனுக்குப் பிடிப்ப தில்லை. இதிலிருந்தே இவ்விருவரின் ஒற்றுமையும் வெளிக்குத் தெரிந்து விடுகிறது.

12. வீடுதேடிவரும் ஏழை யுற வினனை ஏனென்றும் கேட்பதில்லை; ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவனே மோட்டாரில் வந்து இறங்கினுலோ?

13. ஆய்ந்தோய்ந்து பாராமல் அவனைச் சந்தேகித்து வீண் துவே ஷங் கொள்ளுவதேன்? இதனுல் அந்தக் குற்றமற்றவன்விடும் கண்ணீர் —படும் வாதனை வீணுகுமா?

14. சிறிய அறிவைக்கொண்டு எல்லா மறிந்தோமென நினைக்கும் பேதையைத் திருத்துவதும், திருப்தி செய்வது மியலுமோ?

15. கணவன் உண்ட எச்சில் இலையில் உண்ண மறுக்கும் நங்கை தன் குழந்தை உண்டுக்கழித்த எச் சிலை உட்கொள்ள சற்றும் தயங்குவ தில்லை.

16. தம்பதிகளுக்குள் நேசப் பான்மையும் ஒற்றுமையும் குறைந்து விடின் குடும்பவாழ்க்கை குறுகிக் கூச் சல் சத்தம் அதிகமாகி விடுகிறது.

த. சு. சங்கரலிங்கம்,
திருவனந்தபுரம்.

பெரியவர்களின் பெருமை.

பெரியோர்களை நாம் எவ்வளவு கௌரவிக்கிறுேமோ அவ்வளவுக்கு நாமும் கௌரவப்படுகிறுேமென்று சொல் லலாமல்லவா? உதாரணமாக, நாம் நம்மைப்போல உள்ள சிறு பெண்களுடன் சேர்ந்து கூட்டாஞ்சோறு சமைக்கி றுேம். அதை நாமே தின்றுவிடுவதில் ஒரு பெருமையு மில்லை. அந்த சமயம் நமது பெரியோர்களை அழைத்து வந்து உட்கார வைத்து நமது விளையாட்டுச் சோறு குழம்புகளை அவர்களுக்கும் பரிமாறி, அவர்களோடு நாமும் சேர்ந்து புசித்தால் அது அதிக சந்தோஷமாயிருக்கும். இந்த மாதிரி யாக, நாமே செய்யக்கூடிய ஒன்றைப் பெரியவர்களின் பேரால், அவர்கள் மூலமாகச் செய்தால், அதற்கு ஒரு புதிய மதிப்பு ஏற்படுகிறது. எப்போதும் பெரியவர்கள் பெரியவர்கள்தான். சின்னவர்கள் சின்னவர்கள்தான். பெரியவர்கள் எழுதிவைத்துப்போனவைகளைப் படித்தும், அவர்களையும் நமக்குத் தெரியும் என்று சொல்லிக்கொண் டுமே நாம் கௌரவமடைகிறுேம். கம்பரைத் தெரியும், ஔவை திருவள்ளுவர் முதலியவர்களையும் தெரியும் என்று நாம் பிறருக்குச் சொல்லும்போது அது நமக்கு எவ்வளவோ கௌரவமாக இருக்கிறதல்லவா? **S. R.** கமலவல்லி.

அறியாமையைவிடத் தவறு மகா மோசமானது.

விவேகம்
வினோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

வயிற்றுப்பிழைப்பு வேடிக்கைகள்!



விகடன் உலகம் போகிற போக்கைப் பார்த்துக் குலுங்கச் சிரிக்கிறேன்! இந்தப் பாழும வயிற்றை நிரப்புவதற்காக எத்தனையோ வழி வகைகளை என் விகட உலகத்தார் தொட்டுக்கொண்டும் முட்டிக்கொண்டும் கிடக்கிறார்கள்! அதிலே இராஜாங்க உத்தியோகமும், கூலியாள் வேலையும் இரண்டும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவைகள், அதாவது மேலுக்குள்ளவர்கள் சொன்னதுபோலக் கீழுக்குள்ளவர்கள் நடக்கவேண்டியதே! மேலுத்தியோகஸ்தன் எங்கேயாவது கொஞ்சம் லஞ்சம் வாங்கினால் கீழ் உத்தியோகஸ்தனும் அதற்கு ஒத்தாசையாக இருந்து பங்கு பெற்றுக்கொள்ளவேண்டியது! மேலுத்தியோகஸ்தர் தன்வீட்டில் மிளகாய் அறைக்கச் சொன்னால் கீழ் உத்தியோகஸ்தரும் அப்படியே செய்யவேண்டியது! இப்படி முகம்கோணாது நடந்தால்தான் உத்தியோகமும் நிலைக்கும்! எவ்வளவோ நல்ல படிப்பு படித்திருந்தாலும், அவற்றையெல்லாம் ஆற்றிலே கொட்டிவிட்டு, உத்தியோகத்திற்கு வேண்டியவரையில் மட்டுமே அந்தப் படிப்பைச் செலவிட்டுக்கொண்டு அதற்குமேல் எதுவும் செய்யாமலே இருந்திடவும் வேணும்! இனிக் கூலியாள் சங்கதியோ அவனைச் செருப்பு தூக்கி வரச்சொன்னாலும் அப்படியே செய்ய வேண்டியதுதான்! இந்த இருவகைகளிலும் முப்பதுநாளேபோடி! பூவராகனே வாடி! என்பதாக மாதம் பிறந்ததும் தித்திப்பான பிளாச்சொளைகளை எண்ணுவதுபோல சம்பளப் பணத்தையும் மொத்தமாக எண்ணி வாங்கிக் கொள்ளலாம். எவ்வளவு தான் வாங்கினாலும் உள்ளுக்குள் அடிமை நாற்றம் வீசிக்கொண்டிருக்கத்தான் செய்யும்! இரண்டுநாள் சேர்ந்தாற்போல் வேலைக்குச் செல்லாவிட்டால் உத்தியோகம் ஓடிப்போகும்! கூலியாள் வேலையும் அப்படியேயானாலும், உத்தியோகஸ்தனைப்போலக் கூலியாள் அத்தனை ஏங்கவேண்டியிராது. சரீரப் பிரயாசையால் உழைத்துஉண்ணுகிறவனுக்கு எங்கேயாவது இன்னொருவேலை அகப்பட்டுக்கொள்ளும். நாற்காலி உத்தியோகஸ்தனின் பாடுதான் திண்டாட்டம்!

ஃ

முதல் மனைவியுடன் இனித்தது சிலநாள். சண்டையிட்டது பலநாள்.

இந்த இரண்டும்போக, மூன்ருவதான சங்கதிக்கே வர்த்தகம், வியாபாரம் என்று சொல்லப்படுகிறது! அரசன் தர்பாருக்குள்ள அத்தனை செல்வாக்கும் சிறப்பும் வியாபார வர்த்தக தர்பாருக்கும் உண்டு! அரசனுக்குப் பல உத்தியோகஸ்தர்கள் இருந்து வேலை செய்வதுபோல, வியாபாரிக்கும் பல சிப்பந்திகளும் குமாஸ்தாக்களும் கூலிகளும் இருந்து வேலை செய்கிருர்கள். அரசனுக்குள்ள ஸர்வ சுதந்திரமும் வியாபாரிக்கும் இருக்கிறது! வியாபாரம் என்ருல் என்ன அய்யனே! தான் தயாரித்த—உண்டாக்கிய—செய்த–ஒரு பொருள் மற்றவனுடைய சௌகர்யத்துக்கு மிகவும் தேவைப்பட்டதானதென்றும், அதை அவன் வாங்கி உபயோகித்துப் பல சௌகரியங்களை யடைந்து கொள்ளலாமென்றும் நம்ப வைத்து மயக்கிக் காட்டுகிற ஒரு சங்கதிக்கே வியாபாரம் என்று சொல்வது! இப்படி மயக்கி அந்தப் பொருளிலே பிறருக்கு விருப்பமுண்டாக வைத்து, அந்தப் பொருளைப் பிறர் சதாகாலமும் உபயோகிக்கும்படியான தினப்பழக்கத்திலாக்கிவிட்டு, பிறகு அவர்களே வலியவந்து வாங்கிக் கொள்ளும்படிசெய்து, அந்த வகையில் தன் வியாபாரப் பொருள்களையெல்லாம் விற்றுத் தானும் நாலுகாசு சம்பாதித்துக்கொள்வதே! இவ்விதமான வர்த்தகம் ஒரு காசு சக்கரை மிட்டாய் முதற்கொண்டு எத்தனையோ லக்ஷம்ரூபாய் வரைக்கும் எட்டிக்கொண்டும் தொட்டுக்கொண்டும் ஒட்டிக்கொண்டும் இருக்கின்றன! இவ்விதம் வர்த்தகம் செய்வதிலே ஒருவித வியாபாரத்தைப் பிடித்தவனுக்கு, இன்னெரு புதிய வியாபாரம் பொருந்துவதில்லை! மற்ரெரு வியாபாரிக்குக் கைகூடி வருகிறதானது இன்னெருவியாபாரிக்குக் கைகூடி வருவதில்லை! ஆகவே, முன்பு தாங்கள் செய்துகொண்டிருந்த வியாபாரத்தைமட்டுமே பார்த்துக்கொண்டு ஒதுங்கிவிடுகிறவர்களுமுண்டு! காய்கறி வியாபாரம் இரும்புக்கடை வியாபாரிக்குத் தெரியாது! காய்கறிக் காரனுக்குக் கருவாடு கசாப்புக்கடை வியாபாரம் தெரியாது! அழுகிப்போன மீனை விற்கிறதற்கு மீன் கடைக்காரனுக்குத் தெரியும்! கொளகொளத்துப்போன பழத்தையும் நல்ல விலைக்குவிற்றுத் தள்ளிவிடப் பழக்கடைக்காரனுக்குத் தெரியும்! இப்படியாக ஒவ்வொன்றிலே ஒவ்வொருவருக்கும் விசேஷப்பயிற்சி! மற்றதிலே அவ்வளவு பழக்கமில்லை! பழகினுலும் விருத்திகொள்வதில்லை! அப்படிப் பல வற்றிலும் கைநனைத்துக்கொண்டு பணம் பணமாக வாருகிறவர்கள் எங்கோ சில அதிர்ஷ்டசாலிகள்தான்!

ஃ

மேலே விகடன் சொல்லிய வியாபாரத்திலெல்லாம் அவ்வளவுக்கு மோசமில்லை! தன் வியாபாரப் பொருள் பிறருக்கு ஒரு மயக்கைக் கொடுத்து வாங்கும்படி செய்யவேண்டுமென்று வியாபாரி பல தந்திர ஜித்துக்களைச் செய்தாலும், மற்றவர்கள் தாங்கள் கொடுக்கிற பணத்துக்கு ஏதாவது ஒரு பொருளைப் பெற்றுக் கொண்டு போகும்படியாக இருக்கிறது! இதிலே நஷ்டமில்லை! இன்னும் எந்த விளம்பரப் பலகையுமில்லாமல், விளம்பரமுமில்லாமல் செய்கிற வியாபாரங்கள் எவ்வளவோ! இதோ அரிசியிருக்கிறது, அதோ உளுத்தம்பருப்பு

வக்கீலுக்கும் வைத்தியருக்கும் பணம் கொடாமலே போனவர்கள் பலர். ஒருவரிடம் பணம்பெற முடிகிறது. சிலருக்குத் தர்மத்துக்கு உழைக்கவேண்டியுமிருக்கிறது.

இருக்கிறது, இரண்டையும் அரைத்துச் சேர்த்து அதோ அந்த உப்பிலே ஒரு காசுக்கு வாங்கிக் கலந்து விட்டுச் சுட்டால் வெகு ருசியான தோசையாகும்; இதோ இந்த உளுத்தம்பருப்பிலே யிருந்து நேர்த்தியான வடைகளையும், அதோ அந்த ஜவ்வரிசி, சேமியா, ரவை, சக்கரை இவற்றிலிருந்து ஆயாஸம் போக்கும் பாயாஸத்தையும் சிருஷ்டி செய்துவிடலாமென்று மளிகைக் கடைக்காரர்கள் வாய் திறவாமலே யிருந்தபடி சொல்லாமலே சொல்லுகிறார்கள்! அவைகளும் விலையாகி விடுகின்றன! எப்படியோ ஜனங்கள் போட்ட காசுக்கு மற்றொன்றை யடைந்து திருப்திபடுகிற சங்கதி இருக்கிறது! ஆதலினால், இதிலே நஷ்டமில்லை! மோசம்போவதும் அவ்வளவு அதிகமில்லை!

ஃ

விகடன் இப்போது முழுமோசமான வியாபாரங்கள் சிலவற்றைக் குறிப்பிடுகிறேன்! சூரியன் உதயமாகி அஸ்தமித்துப் போகிறதற்குள்ளே தொடங்கி முடிந்துபோகிற வியாபாரங்களின் வேடிக்கையும் மோசமும் சொல்ல முடியாதவை! பார்வைக்கு அழகாய்த் தோன்றி மறுதினத்தில் பாழாய்ப்போகிற சாமான்கள் எத்தனை எத்தனையோ! நமது சென்னப்பட்டணத்துச் சாமிகள் இந்த மாதிரியான வியாபாரங்களிலேயும், புது புது விதமான வியாபாரங்களை உண்டாக்குவதிலேயும் ரொம்ப ரொம்ப கைதேர்ந்தவர்கள்! இவர்களுக்கு மேலே பம்பாய் கல்கத்தா வியாபாரக்காரர்கள்! எல்லாவற்றுக்கும் மேலே நம்ம சீமை லண்டன் ஜெர்மனி அமரிக்கா வியாபாரிகள்! ஒவ்வொரு நாளும் ஒரு நூதன வியாபாரங்கள் புறப்பட்டபடியே யிருக்கும். ஜனங்கள் அதை மோசப்புரட்டு என்று தெரிந்துகொள்ளாத வரையிற் அந்த வியாபாரங்கள் பிரபலமாகவே நடந்து, பிறகு அது இருந்த இடமே தெரியாமல் மறைந்துபோகும்! அதற்குள்ளாகவே வியாபாரிகள் கனத்த பணமூட்டை கட்டிவிடுவார்கள்!

ஃ

ஐயோ! இந்தக் கோணமாணலான விகாரப்பற்கள் முகத்தின் பார்வையைக் கெடுக்கின்றனவே! அவற்றைப் பிடுங்கிவிட்டு எங்களிடமிருக்கும் செயற்கைப் பற்களைக் கட்டிக்கொண்டால் எவ்வளவோ நேர்த்தியாக இருக்குமே என்று பல் வியாபாரி கூறுவதைக்கேட்டு அவ்விதமே தங்களின் கோணற்பற்களைப் பிடுங்கிவிட்டு வேறு பற்கள் வைத்துக்கொண்டவர்களு மிருக்கிறார்கள்! அட அநியாயமே! கோணல் பல்லானாலும், அதற்கு இருக்கிற உறுதியும் கெட்டியும் இந்தச் செயற்கைப் பல்லுக்கு வருமா? இது எலும்பைக் கடிக்குமா? கரும்பைமெல்லுமா? முருங்கக்காயை முன்னம்பற்களின் உதவியால் உறிஞ்சுவதற்கு இதனால் அத்தனை லேசாக முடியுமா? இப்படியே எத்தனையோவித வியாபாரங்களும் ஏமாறுகிற மயக்குச் சங்கதிகளும் நடக்கின்றன.

ஃ

ஒரு ரூபாய் கொடுத்தால் உங்களது வாழ்நாளின் பலனெல்லாம் தெரிவிக்கிறே னென்றும், ஐந்து கேள்விகள் கேட்கலாமென்றும்

தாங்கள் காலணா கடன் பெற்றிருந்தாலும், அதைத் திருப்பிக்கொடுக்காதபோது மறுபடியும் அவர்களிடம் கடன் கேட்க வெட்கமாகிறது. மீறிக் கேட்டாலும் கிடைக்கப்போகிறதில்லை. ஒருதரம் தந்து ஏமாறியவர்கள் மறுபடியும் தரார்.

ஜோஷியர்கள் பத்திரிகைகளிலே விளம்பரங்கள் செய்து பணம் வாருகிறார்கள்! அதிலே அநேகம் பலிப்பதேயில்லை! காந்தி ஜோஷியர் என்று பெயர் வைத்துக்கொண்ட புண்ணியவான் ஒருவர் காந்தி மகாத்மாவின் விடுதலை ஜோஷ்யம்பேசி அதுவும் நடக்காமலே போய்விட்டது! எங்கள் மந்திரரக்ஷையைக்கட்டிக்கொண்டால் வியாபாரம் விருத்தியாகும்—பரீக்ஷை தேறும்—புது உத்தியோகம் வரும்—பிள்ளை பிறக்கும்—ஊரார் சொத்தெல்லாம் கிடைக்கும் என்ற மாய மயக்குகளும் வேறே! இப்படியே எத்தனையோ சங்கதிகளை விகடன் நீட்டலாம்! இவைகளுக்கெல்லாம் வியாபாரங்களென்று பொதுவாகப் பெயர்! என்ன வியாபாரங்களோ! ஆண்டவனுக்கே வெளிச்சம்! எல்லாம் மோசம்!! மயக்கே!!!

ஃ

கடைசியாக, லாட்டரிச் சீட்டுகளின் ஏமாற்றுதல்களை விகடன் சற்றே சொல்லுகிறேன்! ஸ்ரீரங்கத்திலே ஸ்ரீரங்கநாதர் முதற்கொண்டு எல்லா கோயில் நாதர்களும் இப்பொழுது லாட்டரிச் சீட்டுகள் போடத் தொடங்கிவிட்டார்கள்! கோயில் திருப்பணி தர்மம் என்று எத்தனையோ லாட்டரிச் சீட்டுகள் முளைத்திருக்கின்றன! முதல் பிரைஸ் பதினாயிரம் ரூபாய் என்று முதலிலே சொல்வது! பிறகு சேர்ந்த தொகைக்குத் தக்கபடி இரண்டாயிரமோ ஆயிரமோ முதல் பிரைஸ்ஸாகத்தருவது! இது யார் கைக்கோ கிடைக்கிறது! மற்ற ஏமாந்த இளிச்சவாயர்களெல்லாம் தலையில் கையை வைத்துக் கொண்டு அழுகிறது! எப்பிரல் மாதம் கட்டாயம் சீட்டு குலுக்கப்படுமென்று முதலில் சொல்லுகிறது! பிறகு பல மாதங்கள் வருஷங்களைக் கடத்திக்கொண்டே போய் அப்பால் ஒருநாளில் சீட்டைக்குலுக்கிப் போடுகிறது! மொத்தம் ஐயாயிரம் ரூபாய் சிக்கியிருந்தால் அதிலே இரண்டாயிரம் ரூபாயைக் கோயில் சாமிக்கோ, கோயில் திருப்பணிக்கோ எடுத்து வைத்துவிடுகிறது! இன்னொரு ஆயிரம் ரூபாயை லாட்டரிபோட எற்பாடு செய்த நிர்வாகச் செலவுகளுக்காகத் தாம் தூம் என்று வாரிச் செலவிட்டு விழுங்கி விடுவது! மிகுந்த இரண்டாயிரம் ரூபாயிலே முதல் பிரைஸ் ஆயிரம் ரூபாய் என்றும், மற்ற பிரைஸ்களுக்கு அதற்குத் தகுந்தாற்போலும் பங்கிட்டுக் கொடுத்து விட்டு, எஞ்சியது மிஞ்சியதெல்லாவற்றையும் ஏப்பம்விட்டு விடுகிறது! இதிலே ஒரு பெரியமோசம் என்னவெனில், லாட்டரிச்சீட்டுப்புஸ்தகங்கள் பலரிடமும் விற்கும்படிக் கொடுக்கப்படுவதில், அந்தச் சீட்டுகளை விற்றவர்கள் அவ்விற்ற பணத்தை லாட்டரிச்சீட்டுக் காரியஸ்தலத்திலே கொடுத்தால்தான் குலுக்கும் சீட்டிலே பணம் தந்தவர்களின் பெயரும் இருக்கும்! அவ்விதமின்றி சீட்டுப் புஸ்தகங்களை விற்றவர்கள் அந்தப்பணத்தைத் தாங்களே எடுத்து விழுங்கிவிட்டாலோ, அதைக் கண்டுபிடிப்பதும் கஷ்டம்தான்! லாட்டரிக்காகவென்று ஒரு ரூபாய் வாங்கிக்கொண்டவர்கள் லாட்டரி விழாததற்கு ஒரு கடிதமாவது அனுப்பித் தொலைக்கிறார்களா வென்றால் அந்தப் பாடுமில்லை! லாட்டரி ஜாப்தாவாவது இலவசமாய்த் தபா

ஒருவர் சினிமாவுக்குச் செல்லும்போது தம்முடன் வந்த நாயை உள்ளே விட அங்குள்ளவர் மறுக்க, அதற்கு அவர், இந்தப் படக்காட்சி இச்சிறிய நாய்க்குட்டிக்கு என்ன தீமையைக் கற்றுக்கொடுத்துவிடப் போகிறது என்று வினவினர்.

வில் தருகிறார்களாவென்றால் அதுவுமில்லை! சீட்டு விழுந்தவர்களுக்குமட்டும் இந்த ஜாபிதா ஒன்று கிடைக்குமாம்! மற்றவர்களின் வாயிலே மண்ணுதானும்! ஒரு லாட்டரிச்சீட்டு ஆரம்பித்து நன்றாகத் தின்று ருசி பார்த்து லாபம் கண்டதும் இரண்டாவது லாட்டரிச்சீட்டு ஆரம்பித்துவிடுகிறார்கள்! எண்டா அப்பா! இப்படி ஏமாந்து ரூபாயைக் கொடுக்கவேண்டுமென்றாலோ—முதல் பிரைஸ் நாலாயிரம் ரூபாய் நமக்கே விழுந்து விடாதா என்கிற ஆசைப்பேயால் தான்! சீட்டு விழாவிட்டால் தாங்கள் தந்த ரூபாயைக் கோயில்சாமிக்கும், திருப்பணிக்கும் கொடுத்ததுபோல நினைத்துக்கொண்டு அந்தத் துக்கத்தை மறக்க முயன்று தங்களின் தொந்தியைத் தடவிக் கொள்கிறது! எல்லா மோசங்களும் உழைப்புகளும முடிவிலே வயிற்றுப் பிழைப்பு வேடிக்கைகளே! உலகின்போக்கு எத்தனை தினுசுகளிலே இருக்கிறது பார்த்தீர்களா? ராம்! ராம்! சுபம்! சு! சுவாஹா!!

தனக்கே சரியென்று படாத காரியங்கள்.

தான் செய்த ஒரு காரியம் பிறகு அது தனக்கே சரியென்று படுவதில்லை. நியாயத்தவறாகவே தான் நடந்துகொண்டுவிட்டதாகத் தன்மனம் கூறும்பொழுது அதைச் சினந்துகொள்ள முடிகிறதில்லை. நன்றித் துரோகமாகவும், மகிழவேண்டிய இடத்தில் இகழ்ந்தும், பிறரைக் கண்ணீர் விட வைத்தும் தான் நடந்துகொண்ட பின்பு, அந்த செயலைச் சரியல்லவென்று தன் நெஞ்சு தன்னைக் குத்தித்தொளைக்கிறது. ஒருவனை ஆத்திரம்மீறி அடித்துவிட்ட பின்பும், ஒருவனைத் தந்திரமாக வஞ்சித்து ஏமாற்றிய பின்பும் மனது படும் சஞ்சலம் மிகப்பெரிதே. இவ்விதமாகப் பிறரை நோக நோகச் செய்ததற்குப் பதிலாகத் தான் ஒரு சோதனையையடையும்போது, தான் முன்பு அக்கிரமமாக நடந்துகொண்டதற்குப் பலனோ இது என்று ஏங்கவைக்கிறது. ஆனால், அதை வெளியிற் சொல்லிக்கொள்வதில்லை. பிறர் ஐயோ! என்று அலறுகையில், அதற்குக் காரணமாயிருந்தவர்களுக்குக் கட்டாயமாக அதற்குப் பிரதிபலன் ஏற்பட்டுவிடுகிறது. நியாயத்தவறான காரியங்களுக்கோ லாபங்களுக்கோ அதன் பலன் சமீபத்தில் இல்லாவிடினும், தூரத்திலிருந்து எட்டி வந்துகொண்டேயிருக்கிறதென்பது நிச்சயம். தசரதனை நோகச்செய்து கைகேசியம்மை பெற்றவாழ்வு என்னவோ!

ஒருதரம் மனம் புண்பட்டுப்போன பின்பு அதை மாற்றுவதற்கு எந்த ஸஞ்சீவியாலும் முடிகிறதில்லை.

மைகேல் பாரடே.

அவரது சரித்திர படிப்பினைகள்.

(21-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொல்லன் மகனாய்ப் பிறந்து கூலிக்குவேலை செய்து சிறிதுகாலம் பிழைத்துப் பின்பு பெருமுயற்சிசெய்து சாஸ்திர சங்கத்தில் ஒரு அற்ப வேலையில் அமர்ந்து, நாளுக்குநாள் பெருமை பெற்று யாவரும் மரியாதை செய்யத் தக்க சாஸ்திரி என்று பெயரெடுத்துக் கடைசியில் அந்தச் சங்கத்திலேயே அக்கிராசனாதிபதி யாவதற்கு மனவிருப்பமில்லாமல் அந்தப் பெரிய கௌரவத்தை வெறுத்தவராகிய பாரடேயினுடைய சரித்திரத்தைச் சென்ற சஞ்சிகையில் படித்துப் பார்த்தோமல்லவா?

∴

இனி அவர் விருத்தியடைந்த விதத்தை இன்னதென்று தெரிந்துகொள்ளவேண்டும். அவர் தாழ்ந்த குடும்பத்தில் பிறந்தவராயிருந்தும், அவருக்கு அரசன் முதலாக சகலரும் மரியாதை செய்ததற்குக் காரணமென்ன? வெளித்தேசத்தாரெல்லாரும் அவர் கதையை ஆவலாய்க் கேட்டு மகிழவேண்டியதென்ன? வித்வ சங்கத்தாரெல்லாரும் அவருக்குப் பெருமைதங்கிய பட்டங்களைக் கொடுத்தவிதம் என்ன? இதைச் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

∴

அவரோ பணக்காரரல்லர் பணத்தைச் சேர்க்கிற தொழிலிலிருந்து தானே விலகிக்கொண்டார். பெரிய பிரபு என்று பெயரெடுக்க வேண்டுமென்று அவருக்குச் சற்றேனும் விருப்பமில்லை. இப்பேர்ப்பட்ட விஷயங்களை அவர் கவனித்ததேயில்லை. சிலர் நல்ல குலத்திற் பிறந்ததினாலேயே பெயரெடுக்கிறதுண்டு. பாரடேயினுடையதோவெனில் இழிகுலம். கொல்லக்குடியிற் பிறந்தவரை யார் மதிப்பார்? தந்தை திரண்ட திரவியம் சம்பாதித்து வைத்திருந்தால், அது குமாரனுக்குப் பேருதவியாக இருக்கும். விசேஷமான சாஸ்திரங்களைப் படித்து முடிப்பதற்குச் செல்லும் செலவைத் தந்தையினுடைய ஆஸ்தியிலிருந்தும் எடுத்துச் செலவு செய்யலாம். மகன் தானாக வருத்தப்பட்டுச் சம்பாதியாமல் சாஸ்திரப் பயிற்சியில் காலம் கழிக்கலாம். பாரடேயினுடைய தகப்பனோ ஒரு எளிய கொல்லன்; அவன் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுவதே பெரிய காரியமாயிருந்தது. ஆகையால், பாரடேயும் வாலிபத்திலேயே வேலையில் அமர்ந்துவிட்டார்.

∴

உயர்ந்த நிலையில் பிறந்திருக்கிறவர்கள் எளிதில் பெரிய பிரபுக்களைப் பார்க்கவும், அவர்களுடைய சிநேகத்தைச் சம்பாதிக்கவும், அவர்களால் நினைத்த காரியத்தை முடிக்கவும் கூடும். கொல்லன் பிள்ளைக்கோவெனில், இவையெல்லாம விசேஷ பிர

காலம் கூடிக்கொண்டால், எவர் தடுத்தாலும், எவர் இல்லாமற்போயினும், நடக்கவேண்டியது எவ்விதமோ நடந்துவிடுகிறது.

யத்தனத்தால் ஆகவேண்டிய விஷயங்கள். முயற்சி செய்தாலும் நிறைவேறுகிறது அரிது. சிலர் அதிர்ஷ்டவசத்தால் இழிகுலத்திற் பிறந்தும் உயர்குலத்தாரோடு சிநேகம் செய்து விர்த்தியடைகிறார்கள். அப்படிப்பட்ட அதிர்ஷ்டமும் பாரடேயிக்கு இருந்ததில்லை. அவர் விருத்தியடைந்ததெல்லாம், அவருடைய நற்குண நற்செய்கைகளாலேயேயன்றி வேறொன்றினாலல்ல. அவருடைய குணாதிசயங்களை நன்றாய் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவர் எந்தெந்த குணங்களாலும் செய்கைகளாலும் விருத்தியடைந்தாரென்பதைத் தெரிந்து கொள்வோமானால், நம்முடைய விர்த்திக்கும் அந்த குணங்களும் செய்கைகளும் ஏதுவாகும்.

ஃ

பாரடேயிக்கு அதிர்ஷ்டமில்லாவிடினும் பெரிய விக்கினம் ஒன்றும் அவருக்கு ஏற்படவில்லை. நடுவே அவரது தொழில் முறிந்துவிட்டுப் போனதுமில்லை. ஓயாமல் தனது தொழிலிலேயே தொடர்ச்சியாய் ஆராய்ச்சி செய்துவர அவருக்கு அடுத்தடுத்துச் சௌகரியங்களும் அதற்கேற்ற மனுஷ்யர்களின் உதவியும் காலத்திற்குத் தகுந்தாற்போல் கிடைத்துக்கொண்டிருந்தது. இவைகள் ஒரு பாக்கியமாகவே கொள்ளவேண்டும். அவர் இழிகுலமாயினும், அவரது வமிஸத்தார் கெட்டவர்களென்று பெயரெடுத்ததில்லை; மரியாதையாகவே காலத்தைக் கழித்தார்கள். அவர்கள்மீது யாதொரு பழுதும் சொல்வதற்கும் இடமில்லை. அவர்களெல்லோரும் மானிகள், எக்காலத்திலும் எவ்விஷயத்திலும் அவமானமடைந்தவர்களல்லர். பாரடே தெளிவான அறிவுடையவர். நுனிப்புல் மேய்கிற வழக்கமில்லை. எந்தக் காரியமானாலும் தீர விசாரித்தறிவதே அவருடைய வழக்கமா யிருந்ததனால், அவ்வழியாகவே முயன்று எல்லாச் சிறப்பும் பெறுவதானார்.

ஒரு பிணியாளின் பிரலாபம்.

அரியடிகள் மறவாத எனை கொடிய வைசூரி
அடைந்ததை நினைந்தழுவனே !
ஆற்றொணு வேதனை செய் கொடிய சோதனை தனக் (கு)
ஆளானதற் கழுவனே !
பரிவுடையர் போல் நடித்திட்டவர்கள் எட்டியும்
பாராததற் கழுவனே !
பந்துக்கள் அனைவரும் அன்பின்றி கைவிட்ட
பான்மையை நினைந்தழுவனே !
உரிய என் உடலை யான் பார்க்கச் சகிக்கவும்
ஒண்ணாததற் கழுவனே !
ஒரு சிசுவின் நிலையுற்று தனியாய்க் கிடக்கவே
உற்றதை நினைத்த ழுவனே !
தரித்திட படிக்கவோ எழுதவோ இயலாத
தன்மையை நினைத்த ழுவனே !
தயைநிறை பரந்தாமன் வினோத விளையாடல்கள்
தமை நினைத்தேய ழுவனே !

பத்மா.

சென்றமாதம்

மகாத்மாவின் உபவாசம்:—

மாசற்ற பெரியோர்களும், மாமுனிவர்களும் தங்கட்கு சக்திகுறையுங் காலத்தும், தங்களின் பிரயத்தனங்களுக்கு விக்கினங்கள் எதிர்படும்போதும், உபவாசம்-தவம் இருந்து ஆத்ம பலத்தை யதிகரித்துக் கொள்வதும், தங்களை முன்னிலும் உயர்நலஞ் சார்ந்த பரிசுத்தமான நிலைக்கு ஏற்றி வைத்துக்கொள்வதும் இப் பாரதனுலத்தின் புராதன வழக்கங்களில் ஒன்ருகும். இந்தியாவுக்கு மகாத்மா குடியேற்றநாட்டரசை விரும்பி எத்துணையோ முயன்றும் ஏமாற்றமாகித் தீர்ந்தது; ஹரிஜன முற்போக்கில் மிக்க பிரயாசை ஏற்றும், கடைசியில் சர்க்கார் சட்டமொன்று குறுக்கிடுவதாய்த் தெரிந்து, அது பெருந்தடையாயிற்று. இவ்விரண்டிலும் விருத்தி காணுமைக்கு வருந்திய மகாத்மாவின் தூய உள்ளம் தம்மைச் சுற்றிலும் இன்னும் ஏதோ ஒரு பாவ இருள் படிந்திருப்பதாகக் கருதத்தொடங்கி, அதன் நிவாரணார்த்தம் தம் சக்திக்கு மீறிய 21-நாள் உபவாசத்தை ஏற்றுப் புனிதமடைவதென்று ஒரே உறுதிப்பிடியாய்த் தீர்மானித்துவிட்டதுபோலும். தமது ஆத்ம பரிசுத்தத்திற்கெனத் துவக்கும் இவ்வுபவாசத்தினை சர்வலோக சரண்யன் தமது கிருபாவிலாஸத்தால் நடத்திக்கொடுத்துப் பூர்த்திசெய்து தம்மையும் உஜ்ஜீவிக்குமாறு புரிவாரென்றே மகாத்மாதிடமாக நம்பியிருக்கின்ருர். சென்ற மே மாதம் 9-ம்தேதி முதற்கொண்டு மகாத்மா தமது உபவாசத்தை ஆரம்பித்துவிட்டார். அவரது பலஹீன நிலையில் இந்த உபவாசத்தைத் தாங்கச் சக்தியில்லையென்பதே பொதுவாக அபிப்பிராயம். சர்க்காரும் அவரைச் சிறைவாசத்தினின்றும் எவ்வித நிபந்தனையுமின்றி விடுவித்து விட்டனர். ஆதிமத்யாந்த ரகிதனுன எம்பெருமான் மகாத்மாவுக்குப் பூர்ணுயுள் ஈந்து, உபவாச தவத்தினை நிறைவேற்றிவைத்துக் கடாக்ஷிக்குமாறு பிரார்த்திக்கின்ருேம்.

ஃ

மீண்டும் பிரயாணம்:—

அரசாங்கத்தவரின் பிரீதி வாத்ஸல்யங்களுக்குப் பாத்திரர்களாகப் பரிமளித்த பிரமுகர்கள் லண்டனில் கூடிய மூன்று ஸர்வகட்சி மகாநாடுகட்கும் சென்று திரும்பி ஸமுத்திர ஸஞ்சாரத்தால் விசேஷித்த ஆரோக்கிய லாப மெய்தினர். இப்பொழுது புது அரசிய லறிக்கையைத் திருத்தி நேர்மைப் படுத்துதலின் பொருட்டு மீண்டும் லண்டனுக்குச் சென்றுள்ளார்கள். இன்னேரால் செய்யப்படும் திருத்த முடிவுகள் எதுவரை ஏற்றுக் கொள்ளப்படுமென்பது இனி மேல்தான் அறியவேண்டும்.

ஃ

தமக்கு நேர்ந்த அவமதிப்புகளையும் அலக்ஷியங்களையும் புத்திசாலிகள் மனதில் வைத்துக்கொண்டு இனி அந்த இடத்திற்கு வரக்கூடாதென்று தீர்மானம் செய்வார்கள். புத்திஹீனர்களோ அவ்விடமோ அப்பொழுது ஒரு சண்டையிட்டுக்கொண்டு பின்னும் அவமானப்பட்டுப் போவர்.

கொள்ளையும் வெடிகுண்டும்:—

ஒரு பாங்கியைக் கொள்ளையிட்ட சம்பவம் உதகமண்டலத்தில் நடந்து, அதிற் சேர்ந்தோரும் கைதியாயினர். இது முதல் அத்தியாயமாகும். இரண்டாவது அத்தியாயத்தில் சென்னையில் ஒரு வங்கநாட்டு இளைஞன் தன் கையில் மறைத்துக் கொணர்ந்த வெடிகுண்டுடன் தடுக்கிக் கீழ்விழுந்து அது வெடித்து அதற்கு இரையானான். இனி இதிலிருந்தும், வங்க வாலிபர் ஒரு சாரார் சென்னையிலிருக்கப் போலீஸார் சந்தேகித்ததும், பெருமுயற்சியுடன் கண்டுபிடித்து அன்னோரைச் சிறைசெய்ததும், அவர்களிலொருவன் சுடப்பட்டு உயிர் நீத்ததும் மூன்றாவது அத்தியாயமாகி, முதலிரண்டு அத்தியாயங்களுடன் சம்பந்தமும் பெற்றுக்கொண்டது. சென்னையிற் காணப்பட்ட வாலிபர்களே உதகமண்டல பாங்கிக் கொள்ளையிலும் கலந்தவர்களெனப் பல சாக்ஷியங்கள் எழுந்துள்ளன. இதன் பின்னர் எத்தனை அத்தியாயங்கள் தோன்றுமோ!

புதிய ஆண்டு.

வாராய் சீமுக ஆண்டே வாராய்!
போராட்டமெல்லாம் ஒழிந்திந்த நாட்டிலே
சீரே பெருகத் திருவருள் புரிவாய்!
கல்வியும் செல்வமும் கலைகளும் பெருக
நல்லன வெல்லாம் நாட்டிலே பெருக
அல்லல்கள் நீங்க அருள்புரிந் திடுவாய்
சாதிப் பூசல் சமயப் பூசல்
ஆதிப் பூசல்கள் அனைத்தும் ஒழிந்து
நீதி வளர நீ அருள் புரிவாய்
வேதத் தமிழும் மிகச் சிறந்தோங்க
பசுக்குலம் பெருகப் பாவையர் வாழ
சிசுக்கள் வளரத் திருவருள் புரிவாய்
மழைவளம் பெருக வளமெலாம் பெருகப்
பழைய சைவம் பாரினில் ஓங்க!
அன்பு வளர அறமெலாம் வளர
இன்பம் ஓங்க இனிதருள் புரியே.

(லோகோபகாரி.) செ.

தங்கள் வீட்டில் பிறரை உபசரித்து அறியாதவர்கள் தாங்கள் போன இடத்தில் நெருங்கிய பந்துக்களிருந்தும், அங்கு சென்றிருந்து வருவதற்கு மனம் ஒப்பாமல் திரும்பிவிடுகிறார்கள். தங்களின் குற்றம் தங்களையே வதைக்கிறது.

ஜான்ஸன் பண்டிதரின் வாக்கு.

1. வேறு முயற்சியின்றிக் கலை பயிலும் விருத்தியுடையோர் காலம் ஆரவாரமற்று அமைதியாய்க் கழியும்.

2. நாலுபேர் கூடும் சமூகத்தில் பேசுவதும், தனித்திருக்கும்பொழுது விஷயசிந்தனை செய்வதும், நூல் வாசிப்பதும், வாசிக்கக் கேட்பதும், தெரிந்தோரைக் கேட்டுச் சந்தேகந் தெளிவதும். தெரியாதவர்க்குச் சந் தேகந் தெளிவிப்பதும் இதுவே வித் தியா விநோதனின் வேலையாம்.

3. பிறர்து துக்கத்தையும் தன் சுகத்தையும் எதிர் எதிராக வைத்துப் பார்க்கும்பொழுதன்றி, அசூயைக் குத் தன் சுகம் தெரியாது.

4. கற்றதனால் ஆகும்பயன் கற்ற வைகளைப் பிறருக்கு உணர்த்திப் பெருமையடைவதே.

5. ஸ்தானபேதம் பக்தியின் அபி விருத்திக்கு இயற்கையான துணை யல்ல. ஸ்தானபேதத்தால் மனநிலை சிதறிப்போவது திண்ணம்.

6. பாபகர்மம் தீர ஈஸ்வர கடா க்ஷத்தை ஸ்தல விசேஷத்தால் எளி தில் பெறலாகுமென்று எண்ணுவது வீணராகிய மூடபக்தர் காணும் சொப்பனம்.

7. இவ்வுலகில் இன்பமல்ல, துன்பமதிகம். யாவரும் அவரவர் துன்பத்தில் உழன்று அவதிப்படுகி றார்கள். தன் சுகத்திற்கும் பிறர் சுகத் திற்கும் தாரதம்மியம் கண்டறிய ஒரு வனுக்கு அவகாசமில்லை.

8. அறியாத ஒன்றை அறியும் பொழுதெல்லாம் நமக்கு ஆனந்தமும், அறிந்ததை மறக்கும்பொழுது வியா குலமும் உண்டாகும்.

9. எந்தெந்த தேசத்திலும் மனி தருக்குத் துன்பம் மிகுதி; இன்பம் மிதம்.

10. ஸ்தானபேதம், ஸ்திதிபே தம், இதாகித போகபேதம் முதலிய பேதாபேதப் பாடுகள் கண்டவனுக்கு எளிதில் மனந்தளராது.

11. பாரதூரமான வேலைகள் சாதிக்கப்படுவது திடகாத்திரத்தா லல்ல; கடைப்பிடியால், ஊக்கத்தால்.


12. நித்த நித்தம் மூன்றுமணி நேரம் சலிப்பற நடக்கும் தைரியபுரு ஷன் எழு வருஷத்திற்குள் பூகோ ளத்தின் சுற்றளவுதூரம் நடந்திடு வான்.

13. ஆசைக்கும் அச்சத்திற்கும் இடங்கொடுத்து மனநிலை குலையத் தகாது. சுபசகுனங்கண்டு இன்புறு கிறவன் அபசகுனங்கண்டால் துன் புறுவான்.

14. எவனும் தன் உள்ளத்தைச் சோதித்துப்பார்த்துப் பிறர் உள்ளத் தில் நிகழ்வது எதுவென்று உணர லாம்.

புராதன ஸம்பிரதாயங்களிற் பல ஆசரிக்கப்படுங்காலம் விவாகத்தின் போதும், மரணத்தின்போதுமே. ஜீவித்துள்ள நாட்களிலோ அவற்றைக் கவ னிப்பதேயில்லை.

ஸமாஜத்தின் அவயவிகளாயுள்ள ஸ்திரீ புருஷர்கள் நிரபராதிகளாய் ஈசுவரபக்திசெய்து, மனவில் களங்கமின்றி நன்னடக்கையோடிருக்க வேண்டு மென்பதை இந்நாளில் பாராட்டுவோர் சிலரே.



இரங்கூனிலே ஒருவர் சிகரட்டு பிடிக்கப்போய் அதிலிருந்த விழுந்த நெருப்பால் கட்டிடமும் சாமான்களுமாக எரிந்து லக்ஷம் ரூபாய் சேதமானதைக்கேட்ட விகடன் இனி சிகரட் பிடிப்பவர்கள் இவர்களிடம் போய் கற்றுக்கொள்ளலாமென்று சிபாரிசு செய்தானாம் !

ஃ

கடனைத் திருப்பிச் செலுத்த சக்தியில்லாதவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பகூடாதென்று ஒரு புதுசட்டம் செய்யப்போவதைக் கேட்டு எண்ணூரு கடன்காரர்கள் அந்த நல்ல சட்டத்தை எதிர்பார்த்து நிற்கிறார்களாம் !

ஃ

கரூரில் ஒரு வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கும் வழக்கமாயிருந்த ஒருவன் அவ்வீட்டுப் பெண்ணுடனும் தூங்கத் தொடங்கிவிடவே, அதில் எற்பட்ட சண்டையில் மண்டை பிளந்து சாக, பிறரைத் திண்ணையில் படுத்துக்கொள்ள இடந் தருவதின் விபரீதத்தை விகடன் தண்டோரா போட்டுத் தெரிவித்தானாம் !

ஃ

எதெது தேவாமிர்தத்திற்கு ஒப்பானதென்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு

அம்ருதம் ஸத்குண பார்யா
அம்ருதம் பால பாஷிதம்
அம்ருதம் ராஜ ஸந்மானம்
அம்ருதம் மான போஜனம்

அதாவது, ஸத்குண மனைவியும், குழந்தைகளின் மதலைச் சொல்லும், அரச சன்மானமும், அளவாய்ப் போஜனம் செய்வதும் அமிருதத்திற்குச் சமானம் என்று சொன்னாரும்!

ஃ

அப்பனோடு பிறந்தவள் அத்தை !
கீரைகட்டுவது கத்தை !
உயரத்தில் பறப்பது கெத்தை !
விலக்கித் தள்ளுவது செத்தை !
ஏமாறினால் பறிப்பது சொத்தை !
பணக்காரன் வசிப்பது மெத்தை !
யானை போடுவது லத்தை !
காரடி செய்வது வித்தை !

ஃ

மாடுமுட்டி ஒருவர் இறந்தது பரிதாபமானால், மனுஷ்யனின் வயிறு முட்டி எத்தனை ஆடு மாடுகள் நாள்தோறும் கசாப்புக்கடைக்குப் போகின்றன என்று ஒரு விகடக் குஞ்சு கேட்கிறும் !

ஃ

தங்களுக்குத் தங்களே சிரைந்துக் கொள்கிறவர்களுக்கு விகடன் ஒரு தேனீர் விருந்து நடத்தப்போகிறாரும்.

ஃ

எவரெவர் ஏமாற்றுவதில் தேர்ந்தவர்களென்று மற்றவர்கள் கண்டு கொண்டிருந்தாலும் வாய்விட்டுச் சொல்லுவதில்லையாம் !

ஃ

உன் பெண்டாட்டி எப்படியென்று ஒருவரைக் கேட்க, அதற்கு அவர் உன்பெண்டாட்டிபோலத்தான் என்று பதில் சொன்னாராம் !

ஃ

எவ்வளவு பிரிவு சண்டை நேர்ந்தாலும் திரும்பத்திரும்ப வீட்டை எட்டிப் பார்த்து நுழைகிறவர்களை என்னசெய்கிறதென்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு அத்தகையோருக்கு வெண்ணெயும், கற்கண்டுப் பொடியும் கலந்து கொடுக்கும்படி சொன்னானும் !

விறகைப் பிடுங்கினால் கொதிக்கிறது அடங்குவதுபோல, அவரவர்களுக்குள்ள முக்கியமான ஆணிவேரைப் பிடுங்கினால் எல்லாம் அடங்கிவிடுமாம் !

சித்திர விநோதங்கள்.



கணவன் :— என்னடி என் கையைக் கடிக்கிருயா? நான் உதைக்கிற உதையிலே உனக்கு வைகுண்டம் காட்டுவேன்.

மனைவி :—எனக்கு வைகுண்டம் வரும்போது உனக்கும் தூக்குமரம்—ஜெயிலில் அடைப்பு வருமல்லவா? அடபாவி! உதைக்கிருயா! உன காலிலே வண்டியேற, நாசமாய்ப்போக...

ஃ



பாட்டி :— (சாந்தி யறையின் கதவைமூடிப் பூட்டு போட்டுவிட்டு) எண்டியம்மா இப்படி ஆத்திரமாய்க் கதவுச் சந்திலே எட்டிப் பார்க்கிறீர்கள்? எல்லாம் நீங்கள் முன்பு கண்டதுதாண்டியம்மா.

பெண்கள் :— என் பாட்டி! இப்படி வெடுவெடு என்று படுகிறே? நாங்கள் பெண்கள்தானே, பார்த்தாலென்ன மோசம் முழுகிப்போச்சு? உனக்கு ஆசை நரைச்சுபோச்சுதினுல் எல்லாரும் உன்னைப்போலவே இருக்கிருர்களா?

ஃ




புகழ்வாய்ந்த புலவர் சிகாமணியொருவர் தமது நண்பரின் வீட்டிற்கு வந்து சிலநாள் தங்கினர் விசேஷ விருந்துகள் நடைபெற்றன, ஒருதினம் நண்பரின் பருவமடைந்த தங்கை புலவர் சிகாமணிக்குக் காபி கொண்டுபோய்த் தந்தாள். அந்த யுவதியின் அழகைக்கண்டு மயங்கி அவள் கையைப்பற்றி முத்தமிட நெருங்கவும், பெண் திமிறிக்கொண்டு வெளியே ஓடிவிட்டாள். வீட்டார் விஷயமறிந்து, அப்போழுதே புலவர் பெருமானை ரயிலேற்றி அனுப்பிவிட்டனர். ஒருவருடைய கல்வியைக்கொண்டே அவருடைய குணத்தை மேன்மையாகச் சொல்லிவிடுவதற்கில்லை.

ஒரு உத்தியோக கனவான் தன் மனைவி தாய்வீட்டுக்குச் சென்றிருக்கையில் சமையற்காரி மீது மதனதாகம் கொண்டார். அவள் கபட மற்றவளானதால் இவருக்கு ஸ்நானத்தின் போது முதுகு தேய்த்து விடுவதான வேலைகளையும் செய்தாள். எளிய பெண்ணானதால் வசப்பட்டு விடுவாளென்று ஒருநாள் சாதம் வடித்துவிட்டு கஞ்சிச் சட்டியுடன் எழுந்தபோது கனவான் அவள் கையைப் பிடித்துக்கொண்டு பல்லெல்லாம் காட்டிக் கெஞ்சி இணங்கும்படி வேண்டினான். அவளோ கொதிக்கும் கஞ்சியை அவர் தலையிற் கொட்டினாள். அதே சமயம் அவளது கணவன் அங்கு வரவும் இதைக்கண்டு ஆத்திரமாகி முதுகுபக்கம் கையை மடித்துக் குத்தினான். ஊரார் கூடி வசைமாரி பொழிந்தனர்.



ஃ

கல்கத்தாவில் ஒரு கம்பெனியார் 300-ரூபாய் சம்பளத்தில் மானேஜர் ஒருவரை நியமித்தனர். சில மாதங்கள் சென்றன. புதிய மானேஜருக்கு நாம் இல்லாவிட்டால் இக்கம்பெனிக் காரியங்கள் ஊழலாகிக் கெட்டுப்போம் என்ற அகங்கார எண்ணம் தோன்றியது. ஆகவே, அவர் யாரையும் லக்ஷியம் செய்யாமல் தம்முடைய ஆபீஸ் அறையில் சுருட்டு பிடிக்க தொடங்கினார். இது கம்பெனி ஒழுங்குக்கு விரோதமாயிருந்ததால் கம்பெனியார் சுருட்டு குடிக்கக்கூடாதென்று கண்டித்தனர். அவர் வீட்டிற்கு வந்து ஆலோசித்தார். சுருட்டு பெரிதா ?—வேலை பெரிதா ? என்ற கேள்வியுண்டாயிற்று. இரவெல்லாம் யோசித்து சுருட்டுதான் பெரிதென்று நிச்சயித்து 300-ரூபாய் வரும்படியுள்ள உத்தியோகத்தை ராஜிநாமா கொடுத்தார். பிறகு அவரும் அவர்சுருட்டும் வேறு உத்தியோகத்தை யடைவதற்காகத் தேடிக்கொண்டிருக்கையில் அவர் வமிசத்தில் முக்கியமானவர் இறந்து அவரது 30-ஆயிரம் ரூபாய் சொத்துகளும் இவர் பேருக்கு எழுதப்பட்டிருப்பதாய்த் தந்திவந்தது. இதுவும் அதிர்ஷ்டந்தான்! இப்போது ஒரேவாயில் எத்தனை சுருட்டுகளை வேண்டுமானாலும் நுழைக்கலாமல்லவா ?



ஃ

நாடகக் கம்பெனிகளி விருப்பவர்களிடம் பழகுவதில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமாம். அவர்களில் சிலருக்குக் கடன்தந்து திருப்பிப் பெறுமலே போனவர்களும் உண்டாம்.

குழம்புக்கு உப்பு எடுப்பதற்கா- ஒரு ஒய்யார ரம்பை உள்ளுக்குச் சென்றாள். உப்பெடுத்துக்கொண்டு வருகையில் தன் கணவன் குடத்திலிருந்து



ஜலமெடுத்துக் குடிப்பதைக் கண்டாள். அவன் முன்பாக தன் 'ராங்கி'யைக் காட்டவேண்டுமென்று நின்றபடியே கீழே இருந்த குழம்புச் சட்டியில் உப்பைப் போடலானாள். அதில் கொஞ்சம் கீழேயும் சிந்திற்று. ஹா! பெண்கள் என்னென்ன ஒய்யாரமெல்லாம் காட்டுகிறார்களய்யனே! இவ்வளவும் படியாப்பெண்கள் செய்கிற நாட்டியங்களே! இந்த ராங்கிகளுக்கெல்லாம்—பிறகு படவேண்டிய "அநுபவமும்" தப்பாது. ஆனால், அது இப்போது தெரியாது தான்.

ஃ

கல்யாணமாவதற்குமுன் உன்பவிசுக்கு அந்தப் பெண்ணு என்று ஏசுகிறார்கள். அவனுக்கா பெண்ணைத் தருவது என்று பழித்துப் பெண்வீட்டாரின் மனத்தைக்கலைக்கப்பார்க்கிறார்கள். அவனுக்கு உங்கள் பெண்ணைத் தந்தால் அந்த விவாகதிற்கு வரமாட்டோமென்கிறார்கள். கடைசியில் அந்தப் பெண்ணையே மணமுடித்தும் கொண்டுவிட்டாலோ அப்பொழுது வெட்கி எதிரேநின்று மிகவணங்குகிறார்கள். இத்தகைய கேடுகெட்ட சிந்தையுள்ள மனிதர்களிடம் ஜாக்கிரதையாக இருப்பதுடன், அவர்களை விஷநாகங்களென்றும் மதிக்கவேண்டும்.



எஜமான்:—அடே! உன் பெயர் என்ன?
வேலையாள்:—என் பெயர் குப்பன்.
எஜமான்:—"எஜமான்" என்று சொல்லடா.
வேலையாள்:—என் பெயர் எஜமான் குப்பன்.

ஃ

ஜுரத்தால் சிலநாள் நடேசன் பள்ளிக்கூடம் போகவில்லை. பிறகு நடேசன் பள்ளிக்குச் சென்றதும் சரித்திர (History) உபாத்தியாயர் "நடேசா! நீ எப்பொழுதிருந்து வரவில்லை" என்றார்.

நடேசன்:—(மறதியாய்) அக்பர் பாணிபட் யுத்தம் செய்ததிலிருந்து.

ஃ

ராமன்:—தைக்கும் ஊசியின் காது ஒடிந்துபோனால் என்னசெய்கிறது?
கோபு:—அந்த ஊசியைக் குண்டூசிக்குப் பதிலாக உபயோகித்து விடலாம்.

"நாட்டுப்புறத்தான்."

“ அமிர்த குணபோதினி ”

ஸ்ரீமுக ஹூலத்திய வைகாசி மாத பஞ்சாங்கம்.

யோகம்	இங்.	தமிழ்	வார	திதி, நக்ஷத்திரம், விரதாதிகள், முதலியவை.
அ	14	1	ஞா	பஞ்-11-30 உரா-52-57, விஷ்ணுயதி விருத்தியர்க் [கம்
அ-சி	15	2	திங்	ஷஷ்-6-9, ஸ்ருவ-50-58, ஸப்தமிதிதி.
சி-ம	16	3	செ	ஸப்-2-33, அவி-50-37, அஷ்டமிதிதி.
சி-அ	17	ரிஷபமீ (5—3) 4	புத	அஷ்-0-46, சத-52-2, நவமிதிதி.
சி	18	5	வியா	நவ-0-43, பூட்-54-57, தசமிதிதி.
சி-அ	19	6	வெ	தச-2-14, உட்-59-15, ஏகாதசிதிதி.
பி	20	7	சனி	ஏகா-5-5, ரே-60-0, கரிநாள்.
அ-சி	21	8	ஞா	துவா-8-58, ரே-4-34, துவாதசி அசுபம்.
சி	22	9	திங்	திர-13-41, அசு-10-43, சிவராத்திரி
சி	23	10	செ	சசி-18-57, பர-17-26, கிருத்திகா விரதம்.
அ-சி	24	11	புத	●-24-39, கிரு-24-33.
உ-ம	25	12	வியா	பிர-30-38, ரோ-31-54, ஜ்யேஷ்ட சுத்தம்.
சி	26	13	வெ	துவி-36-41, மிரு-39-21.
சி	27	14	சனி	திரி-42-37, ஆரு-46-44, ரம்பர கௌரீவிரதம்.
சி	28	15	ஞா	சது-48-13, புந-53-40, ஸபர்மீ 2உ
சி	29	16	திங்	பஞ்-52-59, பூச-59-52, கரிநாள்.
சி	30	17	செ	ஷஷ்-56-37. ஆயி-60-0, ஆரண்ய கௌரீவிரதம்.
சி	31	18	புத	ஸப்-58-44, ஆயி-4-49.
அ-சி	1	19	வியா	அஷ்-58-53, மக-8-15.
சி	2	20	வெ	நவ-57-4, பூர-9-50, பர்வதாரோகனம்.
உ-ம	3	21	சனி	தச-53-12, உத்-9-27, சிங்கப்பெருமாள் கோவில் ரதம்.
அ-சி	ஜுன் மீ 4	22	ஞா	ஏகா-47-21, ஹஸ்-7-6, ஸர்வ நிர்ஜல ஏகாதசி.
பிஅம	5	23	திங்	துவா-39-57, சித்-2-57, உப-54-14, மதுரை ரதம்.
ம-சி	6	24	செ	திர-31-21, விசா-50-13, கஞ்சி சருடன். [ரதம்.
அ-சி	7	25	புத	சசி-21-55, அநு-42-36, திதிதுவயம் சேலம் அழகர்
பி-சி	8	26	வியா	○-12-4, கேட்-34-49, பவுச்சிய மன்வாதி. [ணம்.
அ-பி	9	27	வெ	பிர-2-14, உப-50-42, மூல-27-21, ஜ்யேஷ்ட பகு
சி	10	28	சனி	திரி-44-43, பூரா-20-51.
அ	11	29	ஞா	சது-37-56, உரா-15-5, திருச்சித்திரகூட தீர்த்தம்
அ-சி	12	30	திங்	பஞ்-32-44, ஸ்ருவ-11-7, கஞ்சி வரதர் தீர்த்தம்.
சி-ம	13	31	செ	ஷஷ்-29-23, அவி-8-57.

		ரவி பு-சு	
ரா	15உ-க்கு ராசி		
சனி			குஜ குரு கேது

“அமிர்த குணபோதினி” பிரஸ், 158 A, பிராட்வே, சென்னை—1933.